இதழ் 231

# மண்

ஜேர்மனி / 2025

வைகாசி - ஆனி / May - Jun













## மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவு விழா

05.04.2025


















மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவு விழா 05.04.2025

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

அனைவருக்கும் வணககம்!...

நமது இலங்கைத் தீவில் அடுத்தடுத்து மூன்று தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளன. ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் என நடைபெற்றுள்ளன. இந்த மூன்று தேர்தல்களிலும் ஜனாதிபதி அனுரா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வெற்றி வாகை சூடியிருக்கின்றது. வாக்காளப் பெருமக்கள் ”மாற்றத்தை விரும்பி” வாக்களித்திருக்கிறார்கள் என்பது கண்கூடு..

கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக மாறி.. மாறி ஆட்சிக்குவந்த சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் பொதுஜன பெரமுனை கட்சிகளின் இனவாத அரசாட்சியில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய, மலையக மக்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வந்திருக்கிறார்கள் என்பது உண்மையான விடயமாகும். மேலாக பாமர ஏழைமக்கள் கொல்லப்பட்ட சம்பவங்களும் ஏராளம்.

நடந்துமுடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அனுராவின் கட்சி அமோக வெற்றி பெற்றாலும் இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் வாக்குகள் குறைவடைந்தாலும் நாடு முழுவதும் பார்த்தால் அனுரா கட்சி வெற்றி பெற்றிருக்கின்றது. இந்த வெற்றி அடுத்துவரும் மாகாண சபைத் தேர்தலில் அனுரா கட்சிக்குக் கிடைக்குமா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளின் படி பல அரசியல் கட்சிகள் பல சபைகளில் முன்னிலை வகித்தாலும் அச்சபைகளில் ஆட்சி அமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. உள்ளூராட்சி தேர்தல் சட்டவிதிகளின் படி சிறிய கட்சிகளும் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் இந்தச் சபைகளில் ஆட்சி அமைக்கும் முறையில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இந்தச் சபைகளில் வெற்றிபெற்ற கட்சிகள் தலைமைப் பொறுப்பை ஏற்கமுடியாத நிலை (இந்த ஆசிரியர் கருத்து எழுதும் 15.05.2025 வரை) காணப்படுகின்றது. இவைபற்றிய முடிவுகள் இந்த மாதம் முடிவில் எட்டப்படலாம்...

நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முடிவுகளில் நமது தமிழ்ப்பகுதிகளில் தமிழ்க் கட்சிகள் வெற்றி பெற்றாலும் அந்தச் சபைகளிலும் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய சிக்கல்கள் இருந்து வருகின்றன. தமிழர் தரப்பில் பல கட்சிகளாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிட்டதால் பல சபைகளில் இந்தச் சிக்கல் இருப்பதைக் காண்கின்றோம். தேர்தலுக்காகக் கூட்டுச் சேர்ந்தவர்களும் பிரிந்து சென்றவர்களும் புதுக்கட்சி ஆரம்பித்தவர்களும் தனிசுயேட்சையாகப் போட்டியிட்டவர்களும் தமது பதவி

ஆசை, பண ஆசை, தமது செல்வாக்கைத் தக்க வைத்தல் போன்ற பல காரணங்களுக்காக எந்த நேரம் என்ன முடிவெடுப்பார்கள் என்று கூறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இதைவிட தாம்தான் தேசியவாதிகள், இனப்பற்றாளர்கள் என்று போலித் தேசியம் பேசி தேர்தலில் வென்றவர்கள் பலர் இதுவரைகாலமும் தமிழ் மக்களுக்கு என்ன? செய்தார்கள் என்று பார்த்தால் பூச்சியமாகத்தான் இருக்கும். ஒற்றுமை...ஒற்றுமை என வாய்கிழிய மேடைகளில் கத்துபவர்கள் தங்களுக்குள்ளே அடிபட்டு, பிடிபட்டு ஒன்றுபடமுடியாமல் சிதறுண்டு காணப்படுகிறார்கள். இதற்கிடையில் ஒற்றுமைப்படுவோம் எனப் போலிப் பிரசாரமும், போலிக்கொள்கைகளையும் கொண்டு தமது அரசியலை நடாத்தி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் வேலைகளிலே பல அரசியல்கட்சிகள் தொடர்ந்து பயணிப்பது சாதாரண மக்களுக்கு எந்தவித நன்மையும் கிட்டப் போவதில்லை என்பது உண்மையே.

தமிழர் பிரதேசங்களில் தமிழர் ஆட்சி செய்ய வேண்டும் என்பது நம் எல்லோருக்கும் விருப்பம்தான். ஆனால் போலித் தேசியம் பேசுபவர்களும் பணம் புகழுக்கு அலைபவர்களும்தான் மாறி மாறி தலைமைக்கு வந்து மக்களை ஏமாற்றி தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்கே நாடகமாடி அரசியல் நடத்துகிறார்கள் என்பதுதான் உண்மையாகும். இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்க எந்தக் கட்சியும் தயாரில்லை. இவர்களை அரசியலில் ஈடுபடுத்த விருப்பமில்லை. ஏனெனில் தமது அரசியல் இருப்புக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பயம்தான் காரணம். "ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளவேண்டும்" எனப் போலியாகப் பேசி மக்களை ஏமாற்றி மீண்டும்..மீண்டும் பாராளுமன்ற, உள்ளூராட்சிக் கதிரைகளைப் பிடித்துச் சுகபோகங்களை அனுபவிப்பதே இவர்களின் முழுநோக்கம் என்பதை வாக்காளப் பெருமக்கள் புரிந்துகொள்ள வேண்டும்..

எனவே எல்லாவற்றிற்கும் நாட்டு அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளதையும் இல்லாமல் ஆக்கும் வேலைகளுக்குத்தான் இந்த தமிழ் அரசியல் வாதிகள் வழிவகுக்கிறார்கள் என்பது தெரிகின்றது. அதற்காக எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்க்கத்தான் வேண்டும். இப்போதய அனுரா அரசு இதுவரை ஆட்சி செய்த அரசுகளைவிட மேலானது என்றுதான் தமிழ்மக்களும் அனுரா அரசுக்கு வாக்களித்தனர். ஆகவே அரசுடன் சுமுகமாகப் பேசவேண்டும். பேசுவதன் மூலமே கிடைக்க வேண்டியதை பெற்றுக் கொள்ளலாம். எதிர்ப்பு அரசியலால் ஒன்றுமே செய்ய முடியாது. என்பதை அனைவரும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

அனுரா அரசு ஆட்சிக்கு வந்து ஆறுமாதம்கூட முடியாதநிலையில் தமிழர்களின் சகல பிரச்சனைகளையும் உடனே முடி? என்றால் யாரால்தான் முடியும். கள்ளர், கொள்ளையர், லஞ்சம் பெறுவோர் நிறைந்த நாட்டில் உடனடியாக எல்லாவற்றையும் சரி செய்வது மிகக்கடினமாகும். இவர்களைப்பிடித்து தண்டம்வழங்கி நாடு சீராகும்வரை நாம் எல்லோரும் பொறுத்திருப்பதுதான் யதார்த்தமாகும்.!..

**- ஆசிரியர் -**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### சுளிக்கச் சொல்லேல்...

ஒருவரிடமுள்ள குறைகளை அவருக்கு விளக்கித் திருத்தலாம். ஆனால் அதை நாசூக்காக, ஒரு பண்பாட்டோடு செய்ய வேண்டும். குறையைக் குத்திக் காட்டிப் பேசக்கூடாது. அதனால் அவர் மனம் வேதனையடையும். அதுவும் பலர் முன்னிலையில் அவருடைய குறையைக் குறிப்பிட்டுப் பேசினாயானால் அவருக்கு உன்மீது கோபமும் பகையும் ஏற்படும். உன்னை வெறுப்பார்.. பிறருடைய கோபத்தையும் வெறுப்பையும், பகையையும் நீ வீணாகத் தேடிக்கொள்ளுவானேன் என்று உனக்குப் புத்தி சொல்கிறார் தமிழ்ப்பாட்டி. எப்படி?..சுளிக்கச் சொல்லேல் என்று, சுளிக்க என்றால் கோபிக்க என்று பொருள். பிறர் கோபிக்கும்படி நீ பேசுவதினால் நன்மை ஏதும் இல்லை. தீமைதான். ஆகவே பிறர் கோபமும் வெறுப்பும் கொள்ளும்படி பேசாதே என்கிறார் ஔவையார்.

### சூது விரும்பேல்..

உன் அப்பா தன் நண்பர்களோடு சீட்டாடுவதைப் பார்த்திருப்பாயே. சிலர் சொக்கட்டானும் விளையாடுவார்கள். பஞ்சபாண்டவரில் தருமர் ஆடியது சொக்கட்டான்தானே!. பொழுதுபோக இவைகளை விளையாடலாம். தவறில்லை. ஆனால் சிலர் பணம் வைத்து ஆடுவார்கள். அப்போது ஜெயித்துப் பணம் பெறவேண்டும் என்று தவறான முறைகளைக் கையாண்டு தந்திரம் செய்வார்கள். ஆகவேதான் இத்தகைய விளையாட்டுகளைச் சூதாட்டம் என்கிறார்கள் பெரியோர். சூதாட்டத்தினால் பணம், பொருள் நாசமாகும். பொய், பேராசை, வன்மம் ஆகிய தீய குணங்கள் வளரும். மனதும் கெட்டுப்போகும். வாழ்வு பாழாகும்.. ஆகவே இத்தகைய தீமைகளைத் தரும் சூதாட்டங்களில் நீ ஒருபோதும் ஈடுபடக்கூடாது என்கிறார். ஆத்திசூடி ஆசிரியர் ஔவைப் பிராட்டி.

## நல்நெறிபற்றி........

- வி நந்தகுமாரன் -

### தெய்வீக உலகம்
### சுழலும் உலகில் சுற்றும் உயிர்கள்

இயற்கையின் பின்னணியில் நிறைந்திருக்கும் அற்புதமான இறைத்தன்மை. காலமெல்லாம் உயிரூட்டும் காற்றின் காரியங்கள் கடவுளின் சாட்சி. மண்ணை வளம் செய்து உணவூட்டி, உயிர் வளர்க்கும் மழையின் மகிமை. சூரியனைப் பூமி ஒரு முறை சுற்றிவர 365 நாட்கள் ஒரு வருடமாகிறது. ஒரு முறை பூமி தன்னைத்தானே சுற்றும்போது, பகல் இரவு ஒரு நாள் அமைகிறது.

சந்திரன் ஒருமுறை பூமியைச் சுற்றி வருவதற்கு 27 நாட்கள் ஆகின்றன. காற்று, நீர், வெப்பத்தை இனாமாக உறிஞ்சி இறையருளில் வாழும் உயிர்கள். அடர்ந்த காடுகளும் அதில் வசிக்கும் அனைத்து விலங்குகளும், பறவைகளும். அகன்ற சமுத்திரங்கள், ஆழ்கடல்கள், அதில் நீந்தும் மீன் இனங்கள். மண்ணின் வளமும், மனித வாழ்வும், பல்கிப் பெருகும் வாழ்க்கைச் சக்கரம். படைத்தல், காத்தல், அழித்தல், அமைந்த பூமியில் வருவதும் போவதும் வழமை.

வாழ வந்த பூமியில் ஒழுக்க நெறி தவறாது வாழ்ந்து செல்வது வடிவான வாழ்க்கை. இறையுலகில் இல்லறம் நல்லறமாகி இறுதியில், இறைவனைச் சென்றடைகிறது. அன்பு, இரக்கம், ஒற்றுமை, சமாதானமுள்ள இதயங்களில் இறைமை இருக்கும். ஒழுக்கமில்லாத வாழ்க்கை ஒழுங்கீனமில்லாமல் குற்றங்கள் குவிகின்றன.

மனித உடல் வெப்பம் 98.4ற்கு இதற்கு மேல் வெப்பம் கூடினால், காய்ச்சலாகிறது. உடல் இரத்த அழுத்தம் 120/80 கூடும்போது இரத்த அழுத்தம் அதிகமாகிறது. உலகமும் உயிர்களும் உரிய அளவுமுறையில் அசைந்து கொண்டிருக்கிறது. உணர்ச்சிகளின் வடிவில், நமக்குள் வியாபித்திருக்கும் கடவுளை உணர வேண்டும்.

உலக இயக்கம் இருந்து கொண்டே இருக்கிறது, எதையும் இழப்பதில்லை. இயற்கையின் அழகில் உள்ள இறைமையை, கண்ணூடாகக் கண்டு இதயத்தில் இருத்து. கடவுளுடைய அனுக்கிரகத்தை அனுசரித்து அடையவேண்டியது அத்தியாவசியமானது.

இறைவனோடு இருப்பதால், இறையருள் உன்னை இயக்குகிறது, இயங்க வைக்கிறது. நான் என்னும் ஆணவம் அகன்றால், நாம் என்னும் ஞானம் பிறக்கும். சிற்றின்பம் சிலரிடம் பெறலாம், பேரின்பம் பெரும் சக்தியான இறைவனிடம்தான் பெறலாம்.

சந்தோஷம் வெளியில் தேடவேண்டியதில்லை, உன் மனதில் உறைந்து கிடக்கிறது. இறைவனைப் பற்றிக்கொள்ளும்போது, இடர்களில் இருந்து விடுபடுகிறோம். இதயத்தில் உள்ள இறைத்தன்மை அழகையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்துகிறது.

இறைமையின் இரக்கத்தை, இயற்கையில் உணர்ந்து நாமும் இரக்கம் பெறுவோம். கடவுளுடைய கருணையின் மூலம் கல்வியைக்கற்று காலங்களை களிப்பாக்கிக்கொள். இறைவணக்கம் இனிய வாழ்வு தரும்

## பறவைகளிடமிருந்து சில பாடங்களைக் படிப்போம்...

- இரவு நேரங்களில் ஒன்றுமே உண்பதில்லை
- இரவு நேரங்களில் ஊர் சுற்றுவதில்லை
- இருள் சூழும்போதே உறங்கத் தொடங்குகின்றன.
- அதிகாலையில் ஆனந்தமாகப் பாட்டுப்பாடி எழுகின்றன.
- தன் பிள்ளைகளுக்கு தக்க சமயத்தில் வாழ்க்கைக்கான பயிற்சிகளை அளிக்கின்றன.
- மூக்குமுட்ட உண்பதில்லை எவ்வளவு தானியங்கள் இட்டுக் கொடுத்தாலும் தேவையானவற்றைக் கொத்தித் தின்றுவிட்டுப் பறந்து செல்கின்றன. போகும்போது எதையும் எடுத்துச் செல்வதில்லை. ஆனால் மனிதன் ?...........

## பந்திக்கு முந்து படைக்குப் பிந்து...

### இதன் அர்த்தம்..

உணவு உண்ணும்போது நமது வலது கையினால் முன்னால் எடுத்து உண்பது வழமை. நம் முன்னோர்கள் பண்டைக் காலத்தில் படைகளில் வேலைக்குச் செல்லும்போது எதிரிகளை அழிக்கவல்ல அம்புகளைத் தம் முதுகில்தான் வைத்திருப்பார்கள். ஆவற்றை எடுப்பதற்கு வலது கையைப் பயன்படுத்துவர். வலது கை பின்னால் செல்ல நேரிடும் அதனாலேயே பந்திக்கு முன்னே..படைக்குப் பின்னே.. என்று கூறி வைத்தனர்.

இந்தப் பழமொழி இன்று எப்படித் திரிபுபட்டிருக்கிறது என்று புரிந்துகொள்வோம்...

## சிரிப்பின் மகிமை..

- இன்பத்தில் சிரிப்பவன் அதிஸ்டசாலி.
- துன்பத்தில் சிரிப்பவன் ஞானி
- கர்ப்பனையில் சிரிப்பவன் கவிஞன்
- கண்டவுடன் சிரிப்பவன் காரியவாதி
- தெரிந்து சிரிப்பவன் நடிகன்
- தெரியாமல் சிரிப்பவன் ஏமாளி
- ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்
- ஓடவிட்டுச் சிரிப்பவன் வஞ்சகன்
- உட்கார்ந்து சிரிப்பவன் சோம்பேறி
- உழைப்பில் சிரிப்பவன்தான் உயர்ந்த மனிதன்!..





# முல்லாவின் கதை

## நாம் ஏன் இங்கே இருக்கிறோம்?

ஒரு நாள் மாலை, ஆளரவமற்ற சாலையில் முல்லா, நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சில குதிரைகளில் ஆட்கள் அவர் எதிரே வந்ததைப் பார்த்தார். அவரது கற்பனை வேலைசெய்யத் தொடங்கியது. அவரை அடிமை யாகப் பிடிக்கத்தான் குதிரையில் ஆட்கள் வருகிறார்கள் என்று நினைத்தார்.

வந்த வழியே ஓடிச்சென்று, ஓரத்தில் இருக்கும் சுவரொன்றில் ஏறி, இடுகாட்டில் குதித்தார். அங்கே காலியாக இருந்த குழியில் போய் கால்நீட்டிப் படுத்துக் கொண்டார். முல்லாவின் புதிரான செய்கையைப் பார்த்த குதிரைப் பயணிகள் அவரைப் பார்த்து பரிதாபப்பட்டு பின்தொடர்ந்து சென்றனர். குழியில் படுத்துக் கிடந்த முல்லாவைப் பார்த்து, ” நீங்கள் இங்கே வந்து ஏன் படுத்துக் கிடக்கிறீர்கள். எங்களைப் பார்த்து ஏன் ஓடிப்போனீர்கள். ஏதாவது உதவி தேவையா” என்று கேட்டனர்.

”நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்க முடிவதாலேயே அதற்கு நான் நேரடியான பதிலை அளித்துவிட முடியாது. எல்லாம் உங்களது பார்வையில் உள்ளது. எப்படியாக நீங்கள் கேட்டாலும் இதுதான் என் பதில். உங்களால் தான் நான் இங்கே இருக்கிறேன். என்னால் தான் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்.” என்றார் முல்லா..

........................................................................................................................................

## இலக்கணம் அறிவோம்....

தமிழ் மொழியின் இலக்கணம் ஐந்து வகைப்படும்...

1- எழுத்து இலக்கணம் 2- சொல் இலக்கணம் 3- பொருள் இலக்கணம்

4- யாப்பு இலக்கணம் 5- அணி இலக்கணம்

# செல்லப்பிராணியின் கதை...





ஒரு நாள் நான் பாடசாலை முடித்து காட்டுப்பாதையால் நடந்து போகும் போது ஒரு பற்றைக்குள் ஒரு சிறிய முயலைக் கண்டேன். ஆரம்பத்தில் அதற்கு என் கிட்ட வர பயமாக இருந்தது. அப்போது நான் மெல்லமாக அதன் பக்கத்தில் இருந்து அதுக்கு உணவும் தண்ணீரும் கொடுக்க பார்த்தேன். பல நிமிடங்களின் பிறகு அது என் கிட்ட வந்து நான் கொடுத்த உணவையும் தண்ணீரையும் தின்று குடித்தது.

அதை என் மடியில் தூக்கி வைத்திருந்தேன். பின் நான் அதன் பெயரை கேட்டேன். ஏன் இங்கே குளிரிலே தனியே இருக்கின்றாய் என்றும் கேட்டேன். அதற்கு அந்த முயல் ”ஏன் அந்த சோகமான கதையை பற்றி கேட்கிறாய்”, என்று கேட்டது. இது ஒரு பெரிய கதை என்று கூறியது. அதற்கு நான் கூறினேன் ”வா நான் உன்னை என் வீட்டிற்குக் கொண்டு செல்லுகிறேன், அப்போ நீ எனக்கு அந்த கதையை சொல் என்றேன். வீட்டை சென்ற பின்பு முயல் தன் கதையை சொல்ல ஆரம்பித்தது.

”எனது பெயர் குமரன். ஆரம்பத்தில் நான் சந்தோஷமாக என் அம்மாவுடனும் சகோதரர்களுடனும் இருந்தேன். அப்போது ஒரு மனிதன் என்னை அவர்களிடம் இருந்து பிரித்து ஒரு இடத்திற்கு கூட்டிக்கொண்டு சென்றான். அந்த இடத்தில் நிறைய முயல்கள் என்னைப் போல இருந்தன. என் குடும்பத்திடம் இருந்து என்னை பிரித்ததால் முதல் எனக்கு கவலையாக தான் இருந்தது. ஆனால் அந்த இடத்தில் என்னைப் போல பலர் இருந்ததால் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சில வருடங்களாய் நான் அங்கே என் நண்பர்களுடன் இருந்தேன்.

ஆனால் ஒரு நாள் ஒரு மனித அம்மாவும் தன் மகனும் அந்த இடத்திற்கு வந்து என்னை என் நண்பர்களிடம் இருந்து பிரித்துக் கூட்டிச் சென்றார்கள். அவர்கள் ஒரு பெரிய வீடு வைத்திருந்தார்கள். நான் ஆரம்பத்தில் சந்தோஷமாக எல்லா இடத்திலும் ஓடி விளையாடினேன். ஆனால் அவர்கள் நான் என்ன செய்தாலும் என்னை திட்டிக்கொண்டே இருந்தார்கள். எனக்கு பசித்தால் நான் நிறைய சாப்பிடுறேன் என்று திட்டுவார்கள்.

ஒரு நாள் நான் விளையாடிக்கொண்டு இருக்கும் போது, ஒரு பொருள் மேசையில் இருந்து விழுந்ததால் பயந்து ஓடினேன். ஓடும் போது நான் என்னை அறியாமலே என் நகத்தினால் நிலத்தில் காயம் செய்தேன். அதற்கு அந்த அம்மா என்னை நிறைய திட்டியும் அடித்தார். அவர் கோபத்தில் என்னை வீட்டை விட்டு துரத்தி விட்டார். நான் நிறைய மன்னிப்பு கேட்டு அழுதேன். ஆனால் அவர் என்னை கடைசிவரையும் மன்னிக்கவில்லை.

அப்போ நான் நிறைய நினைத்து அழுதேன், ”ஏன் எனக்கு மட்டும் இப்படி எல்லாம்” நடக்கிறது என்று யோசித்தேன். அந்த நேரம், வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் காட்டு பற்றைக்குள் மெதுவாக நடந்து வந்து மூன்று நாளாகச் சாப்பிடாமல் இருந்தேன்.அதற்கு பிறகுதான் நீ என்னை கண்டாய்.” இதை எல்லாம் குமரன் அழுதுகொண்டு என்னிடம் கூறினான்.

அதற்கு நான் ” இனிமேல் யோசிக்காதே, உனக்கு நான் துணையாக இருக்கின்றேன்.” நான் உன்னை நன்றாகப் பாத்துக்கொள்வேன். இனி நீ ஒரு நாளுமே அழக்கூடாது!”, என்று கூறினேன். அதற்கு குமரன் மகிழ்ச்சியில் என் மடியில் வந்து இருந்தான். சந்தோசமாக நானும் குமரனும் வீட்டிட்கு சென்றோம்.

**கதை ஆக்கம்**
**செல்வி ஆரபி நாகராஜா**
**எசன் - தமிழ்க் கலாச்சார பாடசாலை.**

.....................................................................................................................

## நகுலின் தகவல்கள் - 10

### நான் அறிந்த ஒரு தொழில் நுட்பம்.

நான் அறிந்த Internet தொழில்நுட்பம் ஒன்று DB Navigator.
இது உங்கள் தொடருந்து பயணம் செல்லும் பாதை பற்றிய தகவல்களை வழிகாட்டியைப் போல் காட்டுவது.
தொடருந்து எங்கு எப்போ வரும் என்பது பற்றி அறியமுடியும். தொடருந்து பயணச்சீட்டும் இதில் வாங்கமுடியும்.
இது Deutsche Bahn என்னும்( யோ்மனி தொடருந்து) நிறுவனம் உருவாக்கியது.
இதனை iPhone, iPad; Android & Windows இலவசமாக எடுக்கமுடியும்.
தொடருந்து அல்லது பயணம் தொடர்பான கேள்விகள் கேட்கமுடியும். இந்த தொழில்நுட்பம் 75% பயணத்திற்கு நமக்கு உதவும்.

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன் - தமிழக் கலாச்சாரா பாடசாலை.**

## மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவுப் போட்டி...

**18 - 19 வயதுப்பிரிவு மாணவர் களிடையே நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் 1 வது பரிசு பெற்ற கவிதை...**

### நான் நேசிக்கும் என் அன்னை..

உன் பார்வை என்
பாதுகாப்புஉன் இதயம்
என் இதயத்துடன்
உன்னில் நான் காதலின்
நிறை வடிவம் அவரது
கைகள் அணைப்பில் இறகு
போல் உன் மனம் என்னைத்
தாங்கும் அந்த வரம் உன்னிடமே
பெரும் சோலை வாசலில்
தினம் பூக்கும் பூவின்
மலர்ச்சி உன் இதழில் உன்
சிரிப்பு என் பகல் வானம்
நீ எப்போதும் என்வாழ்வின்
நிலா குழந்தையாயத்
தான் உன்னைத்
தேடுகின்றேன் எப்பொழுதும்
உன் அருட்கரங்களில்
பாச இணைப்பில் உன்னை
நான் நேசிக்கிறேன்.
அன்னையே நான்உயிராய்
உறவைத் தாண்டி - என்
அன்னை என் உயிரின்
நட்பு அவளின் அன்பில்
என் உலகம் காணலாம்

**செல்வி நிதுஷா ஆசீர்வாதம்**
**எசன் - தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை**

**18-19வயதுப்பிரிவுமாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் 2 வது பரிசு பெற்ற கவிதை...**

### கடலின் அழிவு

ஆனந்தம் கண்டு அலைகள் ஆட
அழகால் பொழிகின்றது நீலக்கடல்
ரத்தினக் கற்களை ஒழித்து
வைத்திருப்பதைப் போல
சூரிய ஒளியில் மின்னும் கடல்..

மீன்கள் நின்றாடிக் கீதம் பாட
ஓய்வில்லாமல் இன்பத்தைத்
தருகின்றது கடல்
ஆயிரம் உயிர்கள் வாழும் வீடு
அன்பு கொட்டி கருணைகாட்டும் கடல்..

அழகைக் கெடுக்கப் பிறந்த மனிதன்
கழிவைக் கொட்டிக் கடலை
நஞ்சாய் மாற்றுகிறான்
பொறுமை இழந்த நீல மன்னன் - பலத்த
அலைகளால் கோபம் காட்டுகிறான்...

அழகால் பொழிகின்றது நீலக்கடல்
அதை அழிக்கிறாய் நீயே இன்று
நாளை உன் வாழ்க்கை
என்னாகும் என்று - ஒருகணம்
சிந்தித்திடு மனிதா இன்று..

**செல்வி நீதினி தவக்குமார்**
**எசன் - தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை**

## 16 – 17 வயதுப்பிரிவு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 1 வது பரிசு பெற்ற கட்டுரை…



# திருக்குறள்

திருக்குறள் தமிழ்மொழியின் பெருமையை உலகிற்கு எடுத்தியம்பிய ஒரு பிரபலமான நூலாகும். இதனை திருவள்ளுவர் இரண்டாம் நூற்றாண்டில எழுதினார். திருக்குறளைத் தெய்வநூல், தமிழ்மறை என்றும் அழைக்கின்றனர். இந்த நூலில் மொத்தமாக 1330 குறள்களை உள்ளடக்கியது. இவை 133 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள்களைக் கொண்டன.

எல்லாக் குறள்களும் இரண்டு அடிகள் மற்றும் மொத்தமாக ஏழு சொற்களைக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் திருக்குறள் "ஈரடிக் குறள் வெண்பா" என்று அழைக்கப்படுகின்றது. குறள்கள் சுருக்கமாக இருந்தாலும் அவற்றின் அர்த்தங்கள் ஆழமானவையாகும்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் மிகவும் முக்கிய இம்சங்களை எடுத்துக்கூறுகின்றது இந்தத் திருக்குறள். திருக்குறளானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் ஆகும். ஒவ்வொரு பகுதியும் வாழ்க்கையை எவ்வாறு நல்ல முறையில் வாழவேண்டும் என்பதைக் கற்பிக்கின்றது.

முதலாவது பகுதியில் அறத்துப்பால் மனிதர்கள் எப்படி நல்லொழுக்கத்தோடு வாழவேண்டும் என்பதைக் கூறுகின்றது. பொருட்பாலில் அரசியல், பணம் மற்றும் வாழ்க்கை நடாத்தும் வழிகளை விளக்குகின்றது. காமத்துப்பால் என்பது காதல், குடும்ப வாழ்க்கை மற்றும் மனித உறவுகளைப் பற்றிக் கூறும் பகுதிகளாகும்.

திருக்குறள் ஒரு மதத்திற்கோ இனத்திற்கோ ஒரு மொழிக்கோ மட்டும் உரித்தானதல்ல. இது சகல மனிதர்களின் நல்ல வாழ்க்கைக்கு வழிகாட்டும் பொது மறையாகக் காணப்படும் ஒரு அரிய நூலாகும்…

**செல்வி நித்யா ரவீந்திரன்**
**எசன் – தமிழ்மொழிச்சேவைப் பாடசாலை**

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 49

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 9 | 6 | 3 | | | |
| | 4 | | | | 8 | | | |
| | | | | | | 7 | 9 | 5 |
| | | | 8 | 2 | 6 | | | |
| 2 | | | | | | | 5 | 3 |
| 9 | | 8 | | | | | | 4 |
| | | | 1 | | 4 | | | |
| | | | | | | 9 | 3 | 7 |
| 3 | 5 | 6 | | | | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 142
## ( வைகாசி- ஆனி 2025 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-03 தமிழர்கள் உயிர் மூச்சாகக் கருதுவது.
14-16 இருபக்கால் வாசித்தாலும் ஒரே சொல்.
வ-இ
04-03 உலகம் ஒத்த சொல்.
11-09 வீட்டில் காணப்படுவது. இது பாதுகாப்பானது.
கீ-மே
10-02 இசைக்கருவி ஒன்று.
11-07 உறுப்புகளில் பிரதானமான ஒன்று.
மே-கீ
01-13 இறைவன் ஒத்த சொல்.
04-16 சிரிப்பு ஒத்த சொல்

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## வெற்றியின் இரகசியம்!..

புத்தகங்களை துணை கொள்
உடல் உழைப்பை அதிகரி
சமூகம் புறக்கணித்ததைக் கைவிடு
தியானத்தைக் கைவிடாது மேற்கொள்
உணவை குறைத்து உண்ணப்பழகு
உணவில் கீரைவகைகளைச் சேர்த்துக்கொள்
எத்தனை வலி நேரிட்டாலும் அழாதே
ஆத்திரப்படாமல் காரியமாற்று
கோபத்துக்கு மௌனத்தைக் கொடு
கேலிக்குப் புன்னகை செய்
நட்புக்கு நட்பு செய்துகொள்
அலட்சியப் படுத்தினால் விலகி நில்
அன்பு செய்தால் நன்றி சொல்..

வயிறு பெருக்க வாழ்வு சுருங்கும்
வயிறு சுருங்க வாழ்வு பெருகும்

கோபத்தில் ஏழையாக இரு
அன்பில் பணக்காரனாக இரு

பக்குவம் என்பது வயது முதிர்வால்
வருவதல்ல..மனமுதிர்வால் வருவது

வீடு உயர்ந்திருப்பது பார்ப்பதற்கு நல்லது
உள்ளம்உயர்ந்திருப்பது வாழ்க்கைக்குநல்லது.

வெற்றி பெறும்வரை முயற்சி செய் வெற்றி
பெற்றதும் முயற்சிசெய்பவருக்கு உதவி செய்

## அதிகம் வரும்!....

நேர்மையானவர்களுக்கு
கோபம் அதிகம் வரும்..

பொறுமையானவர்களுக்கு
இரக்கம் அதிகம் வரும்..

துரோகம் செய்பவர்களுக்கு
நடிப்பு அதிகம் வரும்..

ஏமாற்றுபவர்களுக்கு-பொய்
பேசுதல் அதிகம் வரும்..

## மூன்றுபேரை மறக்காதே!..

கஷ்டத்தில் உதவியவர்..

கஷ்டத்தில் உதவாதவர்.

கஷ்டத்தை உருவாக்கியவர்..

## தகுதி அவசியம்!..

வாழ்க்கையில் வெற்றிபெற ”தகுதி” அவசியமாகும். அது என்ன தகுதி...

த - தன்னம்பிக்கை

கு- குறிக்கோள்

தி- திட்டமிடல்

## ஒத்த சொற்கள்...

01- அடைக்கலம் - தஞ்சம்
02- அணிகலன் - ஆபரணம்
03- அண்டம் - உலகம்
04- அதிதி - விருந்தினர்
05- அந்தரங்கம் - இரகசியம்
06- அரசன் - மன்னன்
07- அகம் - உள்ளம்
08- அக்கிரமம் - அநியாயம்
09- அங்காடி - சந்தை
10- அச்சம் - பயம்
11- ஆயுள் - வாழ்நாள்
12- ஆரணியம் - காடு
13- ஆகாரம் - உணவு
14- ஆகவம் - போர்
15- ஆபத்து - இடையூறு
16- ஆசீர்வாதம் - வாழ்த்து
17- ஆமோதி - வழிமொழி
18- ஆனந்தம் - மகிழ்ச்சி
19- ஆமோதித்தல் - உடன்படல்
20- ஆண் - ஆடவர்

## சமஸ்கிருதம் - தமிழ்

01- நஷ்டம் - நட்டம்
02- வேஷ்டி - வேட்டி
03- வருஷம் - வருடம்
04- நிமிஷம் - நிமிடம்
05- வேஷம் - வேடம்

## பொன் மொழிகள் பத்து

01- துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்.
02- தன்னைப் போல பிறரை நினை.
03- காலம் பொன் போன்றது.
04- இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்
05- எறும்பு ஊரக் கல்லும் தேயும்
06- கரைப்பார் கரைத்தால் கல்லும் தேயும்.
07- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
08- ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்
09- நிறைகுடம் தளம்பாது குறைகுடம் கூத்தாடும்
10- உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.

## ஒற்றைச் சொற்கள்

மூ- மூப்பு
மே- அன்பு
மை- அஞ்சனம்
மோ- முகத்தல்
யா- அகலம்
வா- அழைத்தல்
வை- புல்
வீ- மலர்
கா- சோலை

## ஒலி வேறுபாட்டுச் சொற்கள்...

அலி-பேடி
அளி-கொடு
அழி-கெடு

கலி-துன்பம்
களி-மகிழ்ச்சி
கழி-மிகுதி

ஆல்-ஆலமரம்
ஆள்-மனிதன்
ஆழ்-மூழ்கு, அமுக்கு

# தெரிந்துகொள்வோம்...

1- தண்ணீரில் மிதக்கும் படகுச் சந்தை தாய்லாந்து, இந்தோனசியா, பபுவாநியூகினியா, சாலமன்தீவு, இந்தியா-காஷ்மீர் போன்ற நாடுகளில்தான் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

2- உலகிலுள்ள பணக்காரர்களில் (கோடீஸ்வரர்) மிக அதிகமான தொகையை அறக்கட்டளைக்கு (Charity) வருடாந்தம் அன்பளிப்பாக வழங்குபவர்களின் முன்னணி வகிப்பவர்கள்..

1. Tata - இந்தியா - 102 பில்லியன் டொலர்
2. Bill Gates - அமெரிக்கா - 79 " "
3. Buffet - அமெரிக்கா - 32 " "
4. Soros - அமெரிக்கா - 32 " "

3- உழைப்பாளர்களுக்கான கம்யூனிஸ்ட் பல்கலைக் கழகம் முதன் முதல் 1921ம் ஆண்டு ரஷ்ஷியத் தலைநகர் மொஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

4- எவெரெட்ஸ் மலையின் உச்சிக்கு முதன் முதலில் சென்றடைந்த பெண் யப்பான் நாட்டைச் சேர்ந்த ஜீங்கோ தாபி.15.05.1975ம் ஆண்டு.

5- சில உயிரினங்களின் ஆயுட்காலம்..

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நாய் | - 10 | - 14 | வருடங்கள், | பூனை | - 10 | - 15 | வருடங்கள் |
| முயல் | - 08 | - 09 | வருடங்கள் | காகம் | - 13 | - 20 | வருடங்கள் |
| மயில் | - 20 | - 25 | வருடங்கள் | | | | |

6- உலகிலுள்ள சில மொழிகளிலுள்ள எழுத்துக்கள்..

| | | | |
|---|---|---|---|
| நேபாளி | - 64 | ஆங்கிலம் | - 26 |
| இந்தி | - 62 | பிரெஞ்ஸ் | - 26 |
| ஜப்பானிஸ் | - 46 | போத்துக்கீசியம் | - 26 |
| உருது | - 36 | கொரியன் | - 24 |
| ஆர்மேனியன் | - 36 | ஹிப்ரு | - 22 |
| ரஷ்ஷியன் | - 33 | இத்தாலியன் | - 21 |
| துர்கிஷ் | - 29 | தமிழ் | - 247 |
| ஸ்பானிஸ் | - 27 | | |

## புதிர்ப்போட்டி....



இப்படத்திலுள்ள புள்ளிகளுக்கு வர்ணம் தீட்டிப்பாருங்கள் ஒரு படம் உருவாகும்

## உலகில் சிறிய நாடுகள்!..

| | | |
|---|---|---|
| 01- வத்திக்கான் | - 0.44 | சகிமீட்டர் |
| 02- மொனோக்கோ | - 01.98 | ” |
| 03- நவ்ருதீவு | - 21.00 | ” |
| 04- துவாலுதீவு | - 26.00 | ” |
| 05- சான்மரினோ | - 61.00 | ” |
| 06- வின்சென்ஸ்டைன் | - 160.00 | ” |
| 07- மாஷல்தீவு | - 180.00 | ” |
| 08- செயின்கிட்ஸ்தீவு | - 261 | ” |
| 09- மாலைதீவு | - 296 | ” |
| 10- மால்டாதீவு | - 316 | ” |

## ஆரோக்கியத்துக்கு!...

1- உணவிடை நீரைப் பருகாதே

2- கொதிக்கக் கொதிக்கக் குடிக்காதே

3- பசிக்காவிட்டால் புசிக்காதே

4- வில் வடிவில் அமராதே

5- கழிக்கும் இரண்டையும் அடக்காதே

6- காலையில் குளிக்க மறக்காதே

7- பசித்தால் நேரம் கடத்தாதே

8- வெற்றுத் தரையில் உறங்காதே

# இலங்கை (சிறீலங்கா) பற்றிய தகவல்கள் சில...

## குளங்களைக் கட்டுவித்தவர்கள்:-

01- கலாவாவி - தாதுசேனன்
02- அபயவாவி - பண்டுகாபயன்
03- திஸ்ஸவாவி - தேவநம்பியதீசன்
04- கவுடலிவாவி - மகாசேனன்
05- கோணபுத்திராவாவி - தாதுசேனன்
06- பராக்கிரமபாகு சமுத்திரம் - பராக்கிரமபாகு
07- மஹியங்களை சேரபுரகுளம் - துட்டகைமுனு
08- ஜயவாவி - பண்டுகாபயன்
09- காமினிவாவி - பண்டுகாபயன்
10- கந்தளாய்க்குளம் - 2ம் அக்போ
11- பதவியாக்குளம் - 2ம் முகலன்
12- மின்னேரிக்குளம் - மகாசேனன்
13- சுரங்கவழி நீர்ப்பாசனம் - வசபமன்னன்

## இலங்கை வடமாகாண சபையின் கீழ்:-

- 5 அமைச்சுகள்
-18 திணைக்களங்கள்
- 4 பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகங்கள்
- 2 ஆணைக்குழுக்கள்
- 2 அதிகார சபைகள்
- 3 நிறுவனங்கள்
- 1.135 வாகனங்கள்

வடமாகாண சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் - கைதடி

## இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள்:-

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போத்துக்கீசர் | - 1505 | ஆண்டு | தொடக்கம் | 1656 | வரை | - 151 வருடங்கள் |
| ஒல்லாந்தர் | - 1656 | ” | ” | 1796 | ” | - 140 ” |
| ஆங்கிலேயர் | - 1796 | ” | ” | 1948 | ” | - 152 ” |

# குறளும் பொருளும்...

## பொருள்செயல்வகை..

751 - பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

752 - இல்லாரை யெல்லா ரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

753 - பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

754 - அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

755 - அருளோடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

756 - உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

757 - அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

758 - குன்றேறி யானைப்போர் கண்டற்றார் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

759 - செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெ.்.கதனிற் கூரிய தில்.

760 - ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு..

# குறளும் பொருளும்...

## பொருளை உண்டாக்கும் திறம்...

751- ஒரு பொருளை மதிக்கத் தகாதவரை மதிப்படையவராகச் செய்வது பொருளே. அப்பொருள் அல்லாது சிறந்த பொருள் வேறு இல்லை.

752- நற்குணம் உள்ளவராயினும் பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர். தீயவராயினும் பொருள் உள்ளவருக்கு எல்லோரும் சிறப்புச் செய்வர்.

753- எல்லோராலும் சிறப்பிக்கப்படும் அணையா விளக்காகிய பொருள் தன்னை அடைந்தவருக்கு அவர் நினைத்த இடத்திற்குச் சென்று அவரது பகையெனும் துன்பத்தைப் போக்கும்.

754- சேர்க்கும் திறம் அறிந்து தீமையற்ற முறையில் சேர்த்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

755- அருளோடும் அன்போடும் வராத செல்வத்தைத் தீமையானது என்று தொடாமல் நீக்கிவிட வேண்டும்.

756- உடையார் இல்லா பொருளும் சுங்கப் பொருளும் பகைவரால் கொடுக்கப்பட்ட கப்பப் பொருளும் அரசுக்குரிய பொருட்களாகும்.

757- அன்பினால் பெறப்பட்ட அருட்செல்வமாகிய குழந்தை, பொருள் என்ற செல்வமாகிய செவிலித் தாயால் வளர்வதாகும்.

758- தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவன் ஒரு செயலைச் செய்வது மலைமேல் நின்று யானைப் போரைக் காண்பது போன்றது.

759- தமக்கு ஒன்று உண்டாக்க நினைப்பவர் பொருளை ஈட்ட வேண்டும். பகைவரைக் கெடுக்கும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

760- நல்ல வழியில் மிகுதியான செல்வத்தை ஈட்டியவருக்கு அறமும் இன்பமும் மிக எளிய பொருள்களாகும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## வெகுமதி..

கொதிக்கும் வெயிலையும் குடை பிடித்துப் போன மனிதனையும் குடையையும் மின்கம்பம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தது. ”என்ன உலகம்” என்று தனக்குள்ளேயே அது சலித்துக் கொண்டது. பெருமூச்சோடு மின்கம்பம் சொல்லியது..

" **நிழல் கொடுக்கும் குடைக்கு வெயில்** "

## சுற்றம்..

மலையின் உச்சியில் பள்ளத்தாக்குக்குப் பாய்ந்த ஆற்றை, பள்ளத்தில் பச்சை பசேலென்று வளர்ந்திருந்த புற்களும் செடிகளும் மனமாரப் புகழ்ந்தன. கீழே இருக்கின்ற எங்களை யார் கவனிக்கிறார்கள்?.. ஆற்றை எப்படி மறப்போம்?.. கொழுத்த புல்லின் நிழலில் உரையாடலைக் கேட்டபடி படுத்திருந்த ஆமை சொன்னது..

" **பள்ளத்திரப்பார் உள்ளத் திரு** "

## தாயகம்...

கடற்கரை ஓரத்தில் படகைப் பார்த்து நண்டு கேட்டது ”வண்ண வண்ண மீன்களை எல்லாம் பிடித்துக்கொண்டு போனார்களே எதற்கு?.. படகு அசைவற்றிருந்தது. பின்பு அது சொன்னது... அந்த மீன்களையெல்லாம் சின்னஞ்சிறு கண்ணாடித் தொட்டியில் அடைத்து வைத்திருக்கிறார்களாம்.. அப்புறம்?.. படகு சொன்னது..

' **எட்டி எட்டி அலையைத் தேடுகிறதாம் தொட்டியிலே கடல் மீன்** "

# குறுக்கெழுத்துப்போட்டி-205
## (வைகாசி - ஆனி 2025)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-04 இலங்கையில் அடிக்கடி இது நடைபெற்றாலும் தமிழர்களுக்கு விடிவு இல்லை.
22-28 வடபகுதியில் பெரிய ஒரு நகரம்.
32-35 நடனத்தில் ஒரு வகை.
36-38 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
43-45 இது ஒரு பூச்சி இனம்.
வ-இ
07-04 செய்தி ஒத்த சொல்.
13-10 இந்தியாவிற்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
20-17 சூரியனின் மறு பெயர்.
32-31 யானைக்கு ஒத்த சொல்.
கீ.மே
30-09 ஒரு நாட்டுக்குரிய மிருகம்.
43-29 அரபு நாடுகளில் ஒன்று.
47-26 இலக்கியத்தில் ஒருவன்.
49-35 இது ஒரு செடி இனத்தாவரம்.
மே-கீ
01-29 புளிப்பான மரக்கறி வகை இது.
05-26 ஆண் ஒருவனின் பெயர் இது.
07-28 சந்ததி என்று கூறுவார்கள்
32-46 தமிழர்கள் உயிர்போல மதிப்பது.
34-48 இலங்கை நான்கு பக்கங்களும் இதனால் சூழப்பட்டது.

**(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)**

# பிள்ளைக் கனியமுதே!...

திருமதி கலைவாணி ஏகானந்தராசா

ஆயிரமாய் கனவுகளும் அன்புமிகு உணர்வுகளும்
தாயிவள் மனதினில் அளவில்லா ஆசையெனும்
போதையில் உருவெடுத்த பிள்ளைக் கனியமுது
பேதையிவள் உதரத்தில் பிரசவிக்கும் சித்திரமாய்
இனிய தாய்மையின் இதயத்தில் சுரக்கும் தாகம்
தனிமைபோக்கும் இல்லத்தில் தளிர்விடும் வரம்
கள்ளமில்லா அன்பும் கருணை பாசமும் கொண்டே
தள்ளாத வயதினில் தாங்கிடும்பிள்ளை என்று
பெற்று வளர்த்தெடுத்து பெருமையாக பாலூட்டி
கற்று வல்லமைபெற காலத்தீல் தமைக்கரைத்து
கண்மணியாய் முத்துக்களாய் காதலுடன் பேணிக்காத்து
மண்ணில் தவளவிட்டு மாண்போடு கற்கையிலே
கூடாத சகவாசமும் கூடிவந்த நட்புக்களும்
கேடான பாதையிலே சொற்கேளா மந்தைகளாய்
புத்தியைக் கெடுக்கின்ற போதைக்கு அடிமையாகி
சத்தியம் தவறி நீ சதா மயக்கத்தில் பிதற்றுவதோ
பாதகராய் மாறிப் பல பாவங்கள் புரிவதுவோ
வேதனை சுமந்து வெந்து நொந்து உழலுவதோ
போதனையை வெறுத்து நீ போலிகளை அணைப்பதோ
சாதனைகள் படைக்கும் வயதில் சரிந்து நீ மடிவதோ
உண்மை நிலை மறந்து உணர்வுகள் மரத்துப்பொய்
பெண்மையை சிதைப்பதா பெற்றவளை வதைப்பதா
தன்மானம் இழந்து தடம்மாறிப் போய் இன்று நீ
என்ன சுகம் கண்டாய் ஏனிந்த அரக்கத்தனம்
குற்றங்கள் புரிவதோ குண நலன்களை இழப்பதுவோ
மாற்றமில்லா மனநிலையில் மானத்தை தொலைப்பதோ
கொலைகள் செய்வதுவோ கொடும்புணர்வு புரிவதுவோ
தலைகவிழ்ந்து மூலைக்குள் தவியாய் தவிப்பதுவோ
கருகிப்பொன சருகுபோல காட்டிலும் மேட்டிலும்
தெருவிலும் கிடந்த காட்சி தேகத்தை உலுக்குதே
உருகிப்போன மெழுகாய் உருக்குலைந்த உன்னை
வருடக் கரங்கள் துடிக்குதே வாரி எடுக்கத் தயங்குதே
முடித்துக்கொள்வாய் இளைஞனே!விடிவுக்குவிழித்திடுவாய்
மடிவதற்கா மண்ணில் பிறந்தாய்? மாற்றங்களே மாறாதது
விடிந்திடாத பகலில்லை விலக்கிடாத மனமுமில்லை
விரும்பி நீ திருந்திவிடு விடுதலையினைப் பெற்றுவிடு
போதையினை மறந்துவிடு பாதையினை மாற்றிவிடு
பேதையிவள் உன்னிடத்தில் பிச்சையாய் மடியேந்துகிறேன்
பிள்ளைக் கனியமுதே பேசும்பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே ஆசையுடன் காத்திருப்பேன்!..

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி வாசகர் களிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 2வது பரிசு பெற்ற கவிதை...**

**வாழ்த்துகள்!...**

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வாசகர் களிடையே நடாத்தப்பட்ட சிறுதைப் போட்டியில் 2வது பரிசு பெற்றது. வாழ்த்துகள்!...**

# அறியாத கோலங்கள்!..

**(திருமதி வசந்தா ஜெகதீசன்)**

ஏக்கத்தில் மூச்சு வாங்க வாங்க நடந்தாள் கனகா. வேலையிடத்தின் கெடுபிடிகள் தாங்குவதும், மொழி தெரியாதபடியால் அவர்களின் வேலைகளையெல்லாம் செய்யப்பணிப்பார்கள். என்ன செய்வது அகதியென்னும் அடையாளம் பாடாய்படுத்தி வைக்கிறது. வேலையின்றி வாழவும் முடியாது வேதனைகளைத் தாங்கவும் முடியாது என்ற நிலை. தாயகத்தில் உள்ளோர் எதிர்பார்ப்பு வறுமை போக்க வெளிநாட்டில் வாழும் நாம் மாடாய் உழைத்து ஓடாய் தேய வேண்டியுள்ளதே என்போல எத்தனை உறவுகள் தம்வலியை மறைத்து ஊரில் உள்ளோர் வாழ வழிகாட்டுகிறார்கள் மாறும் முகவரிக்குள் மறுதிரையாய்..

கனகா வாலிபபருவத்துப்பெண் வாழவேண்டிய வயது தன்னை மறந்த தன்குடும்பச்சுமை நீக்கவே நாளும் பகலும் வேலை வேலையெனத் திரிகிறாள். யாராவது லீவு எடுத்தால் அவர்கள் வேலையையும் எடுத்துச் செய்வாள். ஊரிலே அப்பா அம்மா சகோதரிகள் மூவர் கனகாவின் வருமானத்தை நம்பியே வாழ்கிறார். குளிரிலே பஸ் பிடித்து வேலைக்கு போகவே ஒருமணிப்பொழுது ஓடிமறைந்து விடும். வரும் அசதியில் சமைப்பதா சாப்பிடுவதா உறவுகளுடன் பேசுவதா மௌனமே அவளுக்கு உறவு.

மாமாஉறவே அவளுக்கு வெளிநாட்டில் சொந்தமாய் அவர்கள் தான் இங்கு வரவும் உதவினர். மாமியின் முணுமுணுப்புத் தாங்காத கனகா தான் வந்த கடனை கொஞ்சம் கொஞ்சமாக கட்டிமுடித்துவிட்டாள். தற்போது தூரமாகவே வாழ்கிறாள். தீடிரென மாமா குடும்பத்தினர் வந்தனர் உனக்கு வரன் பார்த்துள்ளோம் இவர்தான் பையன் என்று போட்டோவைக் காட்டி அக்காவுடன் கதைத்தேன் அவரும் சம்மதித்தார் என்று தங்கள் தீர்மானத்தை உறுதியாக கூறிவிட்டுச் சென்றனர். கனகாவிற்கோ என்ன செய்வதெனத் தெரியவில்லை. மறுதலித்தாள் மாமாவிற்கு மதிப்பில்லை என மாமா குடும்பத்தில் சண்டை வரும். திருமணம் செய்து கொண்டாள் தன் தங்கைகள் கனவுகளை என் குடும்பத்தை எப்படிப் பார்க்கமுடியும் கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல இரவுமுழுதும் தூக்கமின்றித் துவண்டாள்.

அம்மாவுடன் கதைத்தாள் அம்மாவோ தம்பி நல்லதைத் தானே செய்வான் என்றார். அவசரஅவசரமாக திருமண ஏற்பாடுகள் முடிவாயிற்று. திகதியும் குறித்தாயிற்று. திருமணமச்சடங்கு முடிந்து கொண்டு போய் விட்டவர்கள் தான் மாமா அத்தை அதன்பின் தொடர்பும் இல்லை. கணவன் மாறன் நல்லவன் போல ஓரிரு நாட்கள் வீட்டிலே இருந்தான் நட்புக்கள் தொடர்புகள் அற்றவன் போல தெரிந்தான். கனகாவும் நல்லுறவு தனக்குக் கிடைத்துள்ளதாக எண்ணினாள். தனது வீட்டுநிலவரங்களை கொஞ்சம் கொஞ்சமாக கூறினாள். நாட்கள் நகர்ந்தது. நல்போதையில் வீட்டிற்கு வந்தான். இரவானால் பொருட்கள் உடைபடும் சத்தம் பெரிதாகும்.

கனகாவிற்கு தூக்கிவாரிப்போட்டது. வேலைக்கு போவதா வீட்டுநிலமையைப் பார்ப்பதா பயந்தவள் மாமாவை அழைத்தாள். மாமா வந்தார் மாறனுக்கு புத்திசொன்னார்.எல்லாம் உன்கையில் உள்ளதம்மா என்றவாறு சென்று விட்டார்.

நாளுக்கு நாள் விபரீதங்கள் அதிகமாயிற்று. மொழியும் தெரியாது. அக்கம் பக்கமும் தெரியாத எனக்கு வீதியில் சந்தித்த அம்பிகா அக்கா ஆறுதலானார். கொஞ்சம் கொஞ்சமாக பழகத்தொடங்கி என் மனக்குமுறலை பரிமாறும் அளவுக்கு நட்பானார்.அவரை வாரத்தில் இருமுறையாவது பார்த்து போசவிடில் பித்துப்பிடித்தவளாய் ஆறுதலற்றுவளாய் நான் அவதிப்படுவேன். அம்பிகா அக்கா மாறன்பற்றியும் அவரின் வாழ்க்கை மறுபக்கம் பற்றியும் அறிந்து சொன்ன போது கனகா கண்ணீரில் கரைந்தாள். நாளுக்கு நாள் சூதாட்டத்தில் பணத்தை இழப்பதும் குடிப்பதும் மாறனுக்கு வழக்கம். வேலை இழந்து பல மாதங்கள் ஆச்சு சூதாட்டத்திற்கு செல்லாத வேளையில் தான் வீட்டில் குழப்பங்களும் குடிபோதை ஆட்டங்களும் தாண்டவம் ஆடுது அவராகத் திருந்தாவிடில் சீர்திருத்த காப்பகத்தில் தான் இவரை ஒப்படைக்க வேண்டும் என ஆலோசனை சொன்னார் அம்பிகா அக்கா.

கனகாவும் பொறுத்து பொறுத்துப் பார்த்து பொங்கியெழுந்தாள். தன்னைத் தாக்கியதை பொலிசுக்கு அறிவித்தாள். அவர்களும் உடனடி முடிவுகளை தருவார்களா இல்லையே பல நாள் கண்காணித்தனர். அங்கு வாருங்கள். இங்கு வாருங்கள் என இழுத்தடித்தனர்.. மொழிபெயர்ப்பாளர்களை வைத்து முறைபாடுகளை கேட்டு குடும்பநல ஆலோசர்கள் அறிவுரை வழங்கப்பட்டது. தீர்வு கிட்டவே இல்லை . மாமப்பிள்ளை பார்த்த மாமாவோ தொடர்பின்றி தொலைந்தது சனியென விலகிவிட்டார். கனகா தன்வாழ்வை எண்ணிக்கலங்காத நாட்களே இல்லை.

சின்ன வயதில் தொடங்கிய வறுமையும் வெறுமையும் இற்றை வர தூரத்துகிறதே இறைவா என்ன பாவம் செய்தேன் என்பராபரனே. அன்று தன் வயதுத் தோழிகளெல்லாம் சைக்கிளில் பள்ளி வருவார்கள். ஏழைகளாய் நாங்கள் மட்டும் ஓட்டமும் நடையுமாய் செல்வோம். அடிப்படைத் தேவைகளே குன்றிய வாழ்வு. அதை நிவர்தித்து என் சகோதரிகளை சந்தோஷமாக வாழ வைக்கவே ஒற்றை மகளாய் இங்கு வர துணிந்தேன். என் ஆசையெல்லாம் நிராசையாக நிர்க்கதியாகிறதே. என் பெற்றோர் மற்றவர்கள் போல வாழவைக்க வழிகிட்டுமா உருகுமெழுகு திரியாய் உள்ளுக்குள் அழுதாள் கனகா.

மாறன் பதினாறு வயதிலே வெளிநாடு வந்து விட்டான்.பாசம் அன்பும் அக்கறை பரிவு அற்றவனாக வெளிநாட்டு மோகத்தில் வாழ்பவனாக யாருக்கும் பயமற்றவனாக வாழ்பவன். உதவும் குணமோ, ஊர்பற்றிய நினைவோ அவனை வாட்டியதில்லை. அன்றைய வாழ்வே சொர்க்கம். இன்றிணைபவர்கள் நட்பு என்றவனுக்கு குடும்பவாழ்வின் நல்லவை எதிலும் பிடிப்பில்லை. இருவரும் இருதுருவங்கள்.. நாட்கள் செல்லச்செல்ல நலிந்து போனாள் கனகா

அம்பிகா அக்கா உதவியுடன் விவாகரத்துக்கு விண்ணப்பித்தாள்.

ஆண்டுகள் ஒன்று இருவரும் வெவ்வேறாக இருக்க இடம்கிடைத்தது. மாறன் விட்டபாடில்லை வீட்டிற்கு முன் நின்று கத்துவதும் சண்டை போட்டு காசு கேட்பதும் பொலிஸ் வருவதும் நாளாந்தம் தொடர்ந்தது. கோர்ட்டில் அனுமதி கிடைத்தது ஆயினும் முழுக்குற்றத்தையும் கனகா மீதே சாட்டி ஊரெங்கும் தூற்றும் மாறனின் மனநிலை மாறவில்லை. கனகா ஓரளவு தன்னை தயார்படுத்திக் கொண்டாள். வாழிட நாட்டு மொழியைக் கற்ற அம்பிகா அக்கா ஒழுங்கு செய்து கொடுத்தார்.நிரந்தரத் தொழில் ஒன்றை செய்ய தன்வேலையிடத்தில் சேர்த்தார். கனகாவை மெல்ல மெல்ல படிநிலையில் உயர்த்தினாள். தன்காலில் தாம் நிற்கும் அளவு ஒவ்வொரு பெண்ணும் உரமானவர்களாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தினாள். தன் பிறநாட்டு நண்பிகளுடன் கனகாவை நண்பியாக்கினாள்.

கண்ணைக் கட்டி காட்டில் விடப்பட்ட நிலையில் தன்னை காப்பாற்றிய தெய்வமாக அம்பிகா அக்கா கனகாவிற்கு ஆதாரவானாள். யாரும் உருவில் தான் எமக்கு கடவுள் உதவும் என்று அம்மா சொல்லும் வாக்கும் கனகாவிற்கு வேதவாக்கானது. மாறனிடமிருந்து முற்றுமுழுதாக விடுதலை பெற்றாள் கனகா. கனகாவைக் கூட்டிவந்துவிட்டுக் கரையொதுங்கிய மாமா குடும்பத்திற்கு முன் கனகாவாலும் சாதிக்க முடியுமென காட்டவேண்டுமென்று முடிவெடுத்தாள் அம்பிகா.

மொழியறிவில் தேர்ச்சியாக்கி சாரதிஅனுமதிப்பத்திரத்தை பெற வைத்தாள். பெரிய பெரிய சமூகசேவை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கனகாவின் பெற்றோரை இங்கு அழைக்க முயற்சித்து வெற்றியும் பெற்றாள். நாளைக்காலை விமான நிலையத்தில் பெற்றோர்களை ஏற்றிக் கொண்டு மாமா வீடு போய் வருவோம் வா என கட்டளையிட்டாள் அம்பிகா.மாமா குடும்பத்தார் நாணும்படி கனகா கம்பீரப் பெண்ணாக கார் ஓடிச்சென்றாள். தந்தை தாய் உள்ளிருந்து இறங்கவே உங்கள் தம்பி காட்டிய வாழ்வம்மா இதுவென உரக்கச் சொன்னாள் கனகா. முன்பெல்லாம் மாமாவின் முன் அமைதியாகப் பேசும் சுபாவம் அவளுக்கு. இன்று தீட்டப்படபட தீரா துயர்களில் விம்மி வெடித்த வீரப்பெண்ணாக பட்டை தீட்டப்பட்டு விட்டாள். இன்னமும் ஒரிரு வாரத்தில் தங்கை மைதிலியும் இங்கு வந்துவிடுவாள் மாமா. சீக்கிரத்தில் அவள் திருமணம் நடைபெறும் என உறுதியளித்தாள். மாமா அத்தையைப் பார்த்தார். அம்பிகா கனகாவை பார்த்து புன்னகைத்தார்.

மாமா காட்டிய வழி எனினும் அம்பிகா அக்கா மட்டும் என்னைச் சந்தித்து இருக்காவிடில் இன்று உங்கள் மகள் உயிருடன் இருப்பாளா என்றாள் கேள்விக்குறியே என அம்மாவை அணைத்தபடி அழுதாள் கனகா. அன்னைக்கு தன்மகளின் வலி புரிந்தது. அண்ணி மகளை உதாசீனப் படுத்தியுள்ளார் என ஊகிக்க முடிந்தது. தாயும் அழுதவாறு கண்ணீரைத்துடைத்தாள். மாமா மாமியிடம் ஆசீர்வாதம் பெற்ற கனகா. அம்பிகா அக்காவிடமும் ஆசீர்வாதம் பெற்றாள். என்வாழ்வுப் படகு துடுப்பிழந்த படகாக தவித்து பொழுது கரைசேர வழிகாட்டி மாலுமியக்கா நீங்கள். வலிபோக்கி வழிகாட்டிய தெய்வம் நீங்கள். மனக்குமுறலை அனைத்தும் அணையுடைத்து வெள்ளமாய் பாய்ந்தது.

சுமைகளை சுகமாக சுமக்கும் கனகா.இரு தங்கைமாரை படிப்பில் உயர வைத்து தாயகத்திலே சேவைசெய்யும் இலக்கே எனக்கு என்பாள். தங்கள் விருப்பமும் அதுவே அக்கா என்றனர். அம்மா அப்பாவை

விசா முடிவடைய திருப்பி அனுப்பி வைத்தாள் கனகா. தன் இலக்கின் பாதிக்க கனவுகள் முடிந்ததம்மா மீதிக்கனவுகள் நிறைவேற உங்களிடம் வந்துவிடுவேன் அம்மா என்று அழுதபடி வழியனுப்பினர் கனகாவும் தங்கை மைதிலியும் அன்றும் அரக்கப்பரக்க வேலைக்கு சென்றவளை வழிமறித்தான் மாறன். தகாத வார்த்தைகள், அவதூறுப் பேச்சுகள் என கண்டபடி திட்டினான். அது அடிக்கடி நடக்கும் நமக்கென்ன பழி சொல்லத் தெரிந்தவர்களுக்கு வழி சொல்லத் தெரிவதில்லையே என எண்ணியவாறு நடப்பாள்.

யோசனையில் விபத்துக்குள்ளானாள். இன்றுடன் ஒருமாதத்திற்கு மேலாகியும் எழுந்து நடமாட முடியவில்லை. தங்கை மைதிலியே தக்க துணையானாள். முச்சக்கரவண்டிக்குள். வாழ்வு அடைக்கலமானது. மீண்டும் எழுவாள் கனகா அவள் இலட்சிய வேட்கைகள். தாயகத்தில் அவள் செயல்பட வைக்க நினைக்கும் ஆதரவற்றோர் அரும்பணிநிலையம் கனவுகள் மெய்ப்பட வைப்பேன் என்ற உறுதி உரமிட உறங்கச் சென்றாள். கனகாவின தங்கை அக்காவின் எண்ணத்திற்கு ஏற்ற தோழியே, கணவன் ஆதவனுடன் இணைந்து தங்கைமாரை படிக்க வைத்தாள். கனகாவின் எண்ணப்பொறியை ஏற்றம்பெற வைத்து திறப்புவிழா செய்து வைக்க தாயகம் நோக்கி பயணிக்கிறார்கள் மூவரும். திறப்புவிழா செய்து வைப்பவர் கனகாவின் மாலுமி அம்பிகா அக்காவே.தனக்கு தக்கதுணையாக தோள் தாங்கியவர்.

இவர். " அம்பிகா அறப்பணி காப்பகம்" தன் கனவை நனவாக்கிய ஆதவன் மைதிலி தம்பதிகளுடன் தாயகமுற்றத்தில் தடம்பதித்தாள் கனகா. நிமிர்வும் துணிவும் இரட்டிப்பானது அவளிடம். தாங்கி நின்ற துயர்களில் தான் புடமிடப்பட்டுள்ளதை உள்ளறிந்தாள். புலம் தந்த பலமே இது.மாமா இட்ட முதற்புள்ளி இன்று முழுக்கோலமானதே தன்னிறைவுடன் முச்சக்கரவண்டி சுழன்றது.பாடுகளின் அறுவடை துணிவு தந்த தேவதை இருளகற்றிய சோதரியென பலர் பிடித்த வடம் கனவுகளை நிஜமாக்கிட வதைகளின் வடுக்களும் வலிகளின் செதுக்கலிலும் தன்னைப் புடமிட்ட பெண்ணின் வரலாறு இருளின் பின் ஒளி உணர்ந்த கனகாவின் கனவு நனவாகி பலரின் வாழ்வொளி மிளிரவைக்கும் பணி கண்டு வியந்தாள் அம்பிகா.பிறர்வாழ செய்பணியை செப்பனிடும் கனகாவை கண்ணீருடன் கட்டியணைத்தாள் அம்பிகா!...

- முற்றும் -



## தெரிந்துகொள்வோம்...

1-இலங்கையின் முதல் பிரதமர் - டி.எஸ் செனநாயக்கா

2-இலங்கையின் முதல் பெண் பிரதமர் - சிறீமாவோ பண்டாரநாயக்கா

3-இலங்கையில் மகிப்பெரிய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் - பேராதனை.

4-இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்.

5-இலங்கையின் இலவச பாடநூல் விநியோகம் ஆரம்பித்த ஆண்டு - 1980

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2வது பரிசு பெற்றது. வாழ்த்துகள்!...**

# கணினி உலகம்

**- திருமதி கீதா பரமானந்தன் -**

இந்த நூற்றாண்டின் இணையிலா உன்னதக் கண்டுபிடிப்பு கணினி ஆகும். கணினியைக் கையாளத் தெரியாதவர் காலத்துக்கு உதவாதவர்கள் போல்ஒதுக்கப்படுவார்கள். ”பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல”எனப் புலவர்பவணந்தி கூறியது இங்கு கடைப்பிடிக்க வேண்டியதாகிறது. நம் அன்றாடவாழ்வில் கணினி மிகமுக்கிய இடம்பிடித்திருக்கிறது. சாதாரண பாமரமனிதனிலிருந்து , பட்டங்கள் ஆள்பவர்வரை கணினி தன்வசப்படுத்தியுள்ளது. இந்த நூற்றாண்டைக் கணினியுகம் என்றே உலகம் அழைக்கிறது. அந்தளவிற்குளங்கும் , எதிலும் கணினியே கையாளப்படுகிறது. வணிகம் , மருத்துவம் ,அறிவியல். கல்வி,தொலைத்தொடர்பு, விண்வெளி, பாதுகாப்பு எனப் பலவற்றிற்கும் கணினியேதுணையாகிறது.

சார்லஸ் பாபேஜ் (Charles. Babbage) என்பவரே கணினி யின் தந்தையெனஅழைக்கப்படுகிறார். கணினி பற்றிய அடிப்படைக் கருத்தை நமக்குமுதன்முதலில் தந்தவர் இவரே. 1946ல்முதன் முதலில் கணினிஅறிமுகப்படுத்தப்பட்டது. அது இன்றைய கணினியைப் போல இல்லாமல்மிகப்பெரிதாக இருந்தது. இப்போது படிப்படியாக மாற்றங்கண்டு இன்றையகணினியாக மாறியது. இப்போது மேசைக்கணினி, மடிக்கணினி, கையடக்கக்கணினி,பணிநிலையக்கணினி எனப்பலவையாக உள்ளது .கணினி உலகத் தகவல்களை உடனடியாக அளிக்கிறது.உடனுக்குடன் அதிவிரைவில்தகவல்களை பரிமாறிக்கொள்ள உதவுகிறது. பாதுகாப்பு விபரங்களை சேகரித்துப்பாதுகாத்து வைத்திட நல்லதொரு பாதுகாப்பு சாதனமாகவும் பயன்படுகிறது.

மருத்துவத்துறையில் கணினி மிகத் துணைபுரிகிறது, கண்ணுக்குத் தெரியாதசிறிய கிருமிகளைக் கண்டுபிடித்து நோயைக் குணப்படுத்தவும் , அதிகவலியில்லாத வகையில் சிகிச்சை அளிக்கவும், உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கும், உருவ மாற்றுச் சிகிச்சைக்கும், குழந்தைப் பேறின்றி அல்லற் படுவோருக்கு , செயற்கைக் கருத்தரித்தல் மூலம் குழந்தைப் பாக்கியத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் மாபெரும் கருத்தாவாகவும் ,இன்னும் பற்பல வகைகளிலும் கணினிகுறைந்த நேரத்தில் கூடிய பயனைச் செய்கிறது. இதே போலக் காவல்துறையினருக்கு மிக அரிய முறையில் துணைபுரிகிறது, ஒருவரின் முகஅடையாளத்தைப், பல ஆண்டு முன்னோக்கிப் பின்னோக்க அடையாளப்படுத்தி, ஒரு குற்றவாளியை, இனங்காட்டி நிற்கிறது, மேலும் ஒருவரின் தலைமுடியோ , ஏதோவொரு ிறிய உடற்பாகத்தை வைத்தோ , அவர் வரலாற்றையேகூறிவிடுகிறது. அதனால் ஏமாற்றுக்காரர்கள் , அபகரிப்பாளர்கள்,

கொலைகாரர்கள்எனப்பல குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க கணினி மிகத்துரிதமாக உதவுகிறது.

இன்று எங்கு சென்றாலும் கதவுகள் தானியங்கியாகத் தொழிற்படுகிறது, வங்கிக் கணக்கில் பணம் செலுத்தவும் , பெறவும் வீட்டில் இருந்தே அனைத்தையும்கண்சிமிட்டும் நொடிக்குள் முடித்துவிட முடிகிறது. உலகின் எங்கோ ஒருமூலையில் இருக்கும் உறவுகளை நேரடியாகப் பார்த்து பேசி உறவாடமுடிகிறது, இதனால் உறவுகள் இணைப்புப் பாலமா-கவும் தொழிற்படுகிறது.ஆகாயம் முட்டும்கட்டிடங்கள் அதற்குள் நொடியில் கால்பதிக்க மின்படிகள், எத்தனை மனிதர்வந்தார் போனார், என்ற விபரங்கள் அத்தனையும் பதிவாக்கித் தருகிறது, இதனால்அங்கு ஏதேனும் சிறு தவறை ச் செய்தாலும், தவறான நோக்கோடு நடமாடினாலும்உடனடியாகக் காட்டிக் கொடுத்துவிடும். இன்னும் பிரயாணப் பதிவுகளா? காப்பீடுகளா? வாங்கவா? விற்கவா? அத்தனையும் அவரவர் வசதிக்கேற்பக் கண்முன்னாலே நிறைந்து கிடக்கும் வாய்ப்பு நமக்குக் கிட்டியது கணினியால்அன்றோ?

நீங்கள் தனிமையில் இருக்கிறீர்களா? உங்களுக்குத் துணையாகக் கணினிபொழுதுபோக்குச் சாதனமாக மாறி நேரம் போவதே தெரியாமல் இருத்திவிடும். வாசிப்பை நேசிப்பவரா எந்தநூலை வாசிக்கப் போகிறீர்கள்? குறைந்தவிலையிலோ , இலவசமாகவோ கைக்குள் நூல் வந்துவிடும் வாசித்து முடிக்கும்திறமை உங்களுடையதே !சமையலே அறியாதவரா? இல்லையேல் சமையலில்ஆர்வம் கொண்டவரா? உங்களுக்கு

உலகின் அத்தனை உணவு வகைகளையும் செயல்முறை மூலம் கற்றுத்தந்துவிடும் . மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் பாரிய கண்டுபிடிப்புகளுக்கும், செயற்பாடுகளுக்கும் கணினி அதி உச்ச பயன் செய்கிறது. இத்தோடு முடிந்ததா ? இல்லவே இல்லை. "கண்டதும் கற்கப் பண்டிதன்ஆவான்" என்பார்களே , அதற்கொப்ப ஆவல் உள்ளவர்களுக்கும், வியாபாரத்துறையில் முன்னேற விருப்புபவர்களே உங்களுக்காய் அத்தனை துறைகளும்கண்முன்னே செயன்முறை விளக்கத்துடன் விரிந்து கிடக்கிறது

மருத்துவமா? மாந்திரீகமா? செடிவளர்ப்பா.? என ஆரம்பித்துக் குழந்தைவளர்ப்புக்கும் மனிதனின் மூளையில் தோன்றுகின்ற சந்தேகங்களிற்கும் , வினாக்களுக்கும் கணினி கண்சிமிட்டும் நொடிக்குள் பதிலைக்கூறிவிடுகிறது.வாழ்கையில் எல்லாப் பொருட்களும் எல்லா மனிதர்களையும்கவர்ந்துவிடுவதில்லை ஆனால் கணினியைப் பாலர் முதல் நூறுவயது முதியவர்வரை விரும்பி ஏற்றுக்கொள்வதே கணினியின் சிறப்பம்சமாகும். அப்படி உலகமனிதரையே தன் கைப்பிடிக்குள் மயக்கி வைத்திருக்கிறது.

அனைத்திலும் மேலாக உலகையே முடக்கிப்போட்ட கொரொனா வைரஸ்காலத்தில், பெற்றோர் , உறவுகளை, அவர்கள் இறுதி நொடிகளை, மெய்யுருகக்காட்சியாக்கியதும் இந்தக் கணினியே! அதுமட்டுமா? எல்லாமே அடங்கிஇளையவர்கள் எதிர்காலம், அடுத்த சந்ததிநிலை என்னவெனக் கலங்கியநிலையில்,பாடசாலை மாணவர்கள் வீட்டில் இருந்தவாறே கல்வியைத் தொடரும்வாய்ப்பை அளித்து சந்ததியைக் காக்கும் பெரும்பணியை ஆற்றியதும் கணினியே. அப்படியே காரியாலயங்களும் வீட்டிலிருந்தே

இயங்கித் தேவைகளைநிறைவேற்றியது.ஆண்டவன் உறையும் ஆலயங்களும் முடங்கிக் கிடந்தபோது முடங்காது செயற்பட்டது கணினி உலகம் மட்டுமே.

இத்தோடு முடிந்ததா கணினியின் தொழிற்பாடு, தொலைபேசிப் பாவனையில்மட்டும் எத்தனை நுண்ணிய வசதிகள் வாய்ப்புகளைத் தந்திருக்கிறது கணினி.அடுத்து தானியங்கி விமானம், தானியங்கிச் சிற்றுந்து, தொழிற்கூடங்களைஇயக்கும் ரோபோக்கள், வீட்டில் வெளியில் உதவியாய்ப் பணிபுரியும் ரோபோக்கள். வணிக வளாகங்களின் மின் அலங்காரங்கள், குளிரூட்டிகள், கண்காணிப்புக்கருவிகள் , என எங்கும் எதிலும் கணினியே தொழிற்படுகிறது.

எல்லாவற்றிற்கும் துணையாகக் கைகொடுக்கும் கணினியால் மனிதன் பெறுவதும், பெற்றதும் நன்மை மட்டுமா? என்றால் , அதுதான் இல்லை, பூமியில் மேடுபள்ளம்உள்ளது போலவும், மனித இயல்பில் நன்மையும், தீமையும் கலந்திருப்பது போலவும், கணினிப் பயன்பாட்டிலும் நன்மையுடன் தீமையும் நிறைந்தே கிடக்கிறது . கணினியின் அதி திறன்பயன்பாட்டைத் தங்கள் வசதிக்காய் தீய வழிகளில் தனிமனிதர்களும், உலக நாடுகளும் பயன்படுத்தி மக்களுக்கும் உலகுக்கும்நாசத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் இங்கே மறுக்கவோ , மறைக்கவோமுடியாது.

கணினி வசதியால் தாம் இருந்த இடத்தில் இருந்தே ஒரு மனிதனை அவன்அறியாமலே அவனைப் பின்தொடர்ந்து அவதானிக்க முடிக்கிறது, இதனால் உலகப்பிரபலங்கள், அரசியல்வாதிகளின் உயிர்பறிப்பு நடைபெறுகிறது. பலமைல்கள்தாண்டித் தொடர்கின்ற வான்தாக்குதல்கள், பலவகையான யுத்தத்தாக்குதல்களுக்கும் கணினியின் செயற்பாடு காரணமாகிறது நாடுகளை , பிரபலங்களை மட்டுமல்ல சாதாரண பெண்களுக்கும் , அப்பாவி மக்களுக்கும்இதனால் பாரிய தாக்கங்கள் ,இழப்புகள் அதிகமாகவே உள்ளது.உங்களை ஒருவர்பின் தொடர்ந்தால் , அந்த மனிதனுடன் நீங்கள் சண்டைக்குப் போய்விடுவீர்கள்.

ஆனால் எப்போதும் உங்களை யாரோ கண்காணிக்கிறார் என்பதை நீங்கள்அறிந்தீர்களா? ஏற்றுக் கொள்கிறீர்களா? ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதுதான் உண்மை. நீங்கள் கணினியில் ஒரு பொருளையோ, காட்சியையோ பார்த்தீர்கள் என்றால், அதே வகையான காட்சியோ , பொருளோ உங்களுக்காய் உங்கள் கணினியில் மீண்டும் மீண்டும் வருவதைஅவதானித்தீர்களா? உங்களைக் கண்காணிப்பவரின் செயற்பாடே அது.

இன்னும் கண்ணுக்குத் தெரியாத கமராக்கள் ஒருமனிதனின் அந்தரங்கவாழ்க்கையையே அசிங்கத்திற்குள் தள்ளிவிடுகிறது.எல்லோர் கையிலும் பால் , வயது வேறுபாடின்றிக் கணினி கிடைப்பதால் , பாலியல் குற்றங்களும்அதிகரிக்கிறது, பிஞ்சிலே பழுக்கும் நிலைமையும் ஏற்படுகின்றது.குடும்பங்கள்பிரிவதற்கும் காரணமாகிறது.

படித்துப் பட்டம் வாங்கிய அதிமேதைகளையும் முட்டாளாக்கி, ஏமாற்றிப் பணத்தைச், சொத்தை, அபகரித்த கதைகள் பலவும் காட்சி ஊடகங்களில்காண்கிறோம். அவ்வளவு

துல்லியமாக அத்தனையையும் கணினித் தொழிற்பாட்டில்செயற்படுத்த முடிகிறது மனிதனின் இறப்பை தடுப்பதைத் தவிர , மற்ற அனைத்தையும் கணினி சாதித்து நிற்கிறது.

இந்த நூற்றாண்டின் பாரிய ஆக்கத்தின் மூலமும் அழிவின் மூலமும்கணினியே என்று சொல்வதில் தவறேதும் இல்லையென்றே நான்கருதுகிறேன்,ஆனால் கணினி ஒரு இயந்திரம் மட்டுமே அதற்கு உயிரும் உணர்வும் கிடையாது, அதை இயக்கும் மனிதன் உணர்வுகள் நிறைந்தவன் ." தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற சங்கப் பாடல் வரிகளுக்கு ஒப்ப கணினியால் ஏற்படுகின்ற நன்மைக்கும் தீமைக்கும் அதை இயக்கும் மனிதனே மூல காரணியாகிறான். ஆற்றல் உள்ள மனிதர் சாதனை ஆக்குகிறார். அழிக்கும் நோக்கம் கொண்டவர், அவலத்தில் தள்ளுகிறார் சிந்தனைத் திறனுள்ள மனிதன் சிந்தித்துச்செயற்பட்டால், பாதகங்களில் இருந்து உலகம் தப்பிவிடும்! பாரிய நவீன உலகில் நம் எதிர்காலச் சந்ததி வெற்றி நடைபோடும்!

- முற்றும் -

---

# மண் சஞ்சிகையின் வாசகர் போட்டி முடிவுகள்

**மண் சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்..**

**சிறுகதைப்போட்டி:-**

1வது பரிசு:-"நிழலாகும் நிஜங்கள்" -திருமதி கீதா பரமானந்தன்-Kevelaer

2வது பரிசு:-"அறியாத கோலங்கள்" -திருமதி வசந்தா ஜெகதீசன் - - Geilenkirchen

3வது பரிசு.- "மிரளாதவள்" - திருமதி கெங்கா ஸ்ரான்லி - Erftstadt

**கவிதைப்போட்டி:-**

1வது பரிசு:- " தாய் " - திரு இரா சம்பந்தன்ந்தன் - Ratingen

2வது பரிசு:- "பிள்ளைக்கனியமுதே" திருமதி கலைவாணி ஏகானந்தராசா- - Weeze

3வது பரிசு:- "இன்னும் விடியவில்லை இவள்வானம்"திருமதி கீதா பரமானந்தன் - Kevelaer

**கட்டுரைப்போட்டி:-**

1வது பரிசு:-" புலம்பெயர் தமிழ்ப் பெண்கள் "" திருமதி வசந்தா ஜெகதீசன் - Geilenkirchen

2 வது பரிசு:-" கணனி உலகம்" -திருமதி கீதா பரமானந்தன்- - Kevelaer

3வது பரிசு:-" கணனி உலகம்" - செல்வி சாமினா சிவதாசன் - Essen

# மண் சஞ்சிகை 35 வது ஆண்டு நிறைவு விழா -2025
## மாணவர் போட்டி முடிவுகள்

A- 5 வயதிற்குக் கீழ்ப்பட்டோர்:- **ஓவியப் போட்டி:-**

1 வது பரிசு - செல்வன் ஜோவின் ஜெறோஜன் - Essen
2 வது பரிசு - செல்வன் லாவிஷ் வாகீசன் - Essen
2 வது பரிசு - செல்வி ஜியா சிவகாந்த் - Viersen
3- வது பரிசு - செல்வி மித்ரா சிவலிங்கம் - Heinsberg
3- வது பரிசு - செல்வி காலா சிவாஸ்கர் - London

B- 6 - 7வயது - கீழ்ப்பிரிவு:-

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு - செல்வி அலைனா றிச்சாட் - Herne
2 வது பரிசு - செல்வி அனா பிராங்ளின் - Viersen
3 வது பரிசு - யஸ்மிகா கமல்ராஜ் - Oberhausen

ஆறுதல் பரிசுபெறுவோர்

செல்வி அக்சயா குகதாசன் - Geilenkirchen
செல்வி அஸ்விகா கமல்ராஜ் - Oberhausen
செல்வன் ஆதிரா ஜெறோஜன் - Essen
செல்வன் பிரஜன் வரதராஜா - Essen
செல்வன் மிரேஸ் சுப்பிரமணியம் - Kevelaer

C- 8 - 9வயது - கீழ்ப்பிரிவு கடைநிலை:-

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு செல்வி சனயா ராஜ்மோகன் - Oberhausen
2 வது பரிசு செல்வி அபிசனா தெய்வேந்திரா - Erftstadt
3 வது பரிசு செல்வன் நிவே நிரோசன் - Velbert

8- 9 வயது - கீழ்ப்பிரிவு கடைநிலை:-

**உறுப்பெழுத்துப் போட்டி:-**

1 வது பரிசு செல்வன் நிவே நிரோசன் - Velbert
2 வது பரிசு செல்வி சனயா ராஜ்மோகன் - Oberhausen
3 வது பரிசு செல்வி வியாஷ்னா செந்தூரன் - Essen

D- 10 - 11வயது - மத்தியபிரிவு:-

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு - செல்வி லேயா பிராங்ளின் - Viersen
2 வது பரிசு - செல்வன் வேணு செந்திலன் - Kitzingen
3 வது பரிசு - செல்வன் ஆருஷ் பாலமுருகன் - Essen

**உறுப்பெழுத்துப் போட்டி:-**

1 வது பரிசு - செல்வி அட்சயா கமல்ராஜ் - Oberhausen
2 வது பரிசு - செல்வன் அருஷ் பாலமுருகன் - Essen
3 வது பரிசு செல்வி சுருதிகா சிவசுப்பிரமணியம் - Essen

E- 12 - 13 வயது - மத்தியபிரிவு கடைநிலை:-

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு செல்வன் சாயித் ராஜ்மோகன் - Oberhausen
2 வது பரிசு செல்வி அட்சியா காந்தரூபன் - Essen
3 வது பரிசு செல்வன் மதுபன் செந்திலன் - Kitzinger

**உறுப்பெழுத்துப் போட்டி:-**

1 வது பரிசு செல்வி ராகவி நிரோஜன் - Oberhausem
2 வது பரிசு செல்வி சஞ்சியா செந்துாரன; - Essen
3 வது பரிசு செல்வி இலக்கியா சேயோன் - Erftstadt

F- 14 - 15 வயது - மேற்பிரிவு:-

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு செல்வி லக்ஸ்மிகா முரளிதரன் - Essen
2 வது பரிசு செல்வி சௌமியா விஜிதராஜ் - Essen
3 வது பரிசு செல்வன் தினுசன் ரவீந்திரன் - Essen

**உறுப்பெழுத்துப் போட்டி:-**

1 வது பரிசு செல்வி திவானி விஸ்ணுராஜா - Essen
2 வது பரிசு செல்வி லக்ஸ்மிகா முரளிதரன் - Essen
3 வது பரிசு செல்வன் நகுல் துரையரங்கன் - Essen

G- 16 - 17 வயது - மேற்பிரிவு கடைநிலை

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு செல்வி ஆரபி நாகராசா - Essen
2 வது பரிசு செல்வி மிதுஜா ரவீந்திரன் - Münster
3 வது பரிசு செல்வி அனுஸ்கா ராகவன் - Essen

**கட்டுரைப் போட்டி:-**

1 வது பரிசு செல்வி நித்யா ரவீந்திரன் - Essen
2 வது பரிசு செல்வி அனுஸ்கா ராகவன் - Essen
3 வது பரிசு செல்வி மிதுஜா ரவீந்திரன் - Münster

H- 18 - 19 வயது - அதி மேற்பிரிவு

**ஓவியப்போட்டி:-**

1 வது பரிசு செல்வி மிதுனா ரவீந்திரன் - Münster
2 வது பரிசு செல்வி சஜிதா ஆசீர்வாதம் - Essen
3 வது பரிசு செல்வி சித்திரா கந்தசாமி - London

**கட்டுரைப் போட்டி:-**

1 வது பரிசு செல்வி மீனுஜா ரவீந்திரன் - Münster
2 வது பரிசு செல்வி சிந்துஜா சிவகுமாரன் - Essen
3 வது பரிசு செல்வன் ராகுலன் ராஜன் - Denmark

**கவிதைப்போட்டி:-**

1 வது பரிசு செல்வி நிதுஜா ஆசீர்வாதம் - Essen
2 வது பரிசு செல்வி நீதினி தவக்குமார் – Essen
3 வது பரிசு செல்வி சியாமளா சிவகுமார் - Frankfurt

# நதிபோல்!....

- இரா . சம்பந்தன் -

படரிருள் தோன்றியே
பாதையை மறைக்கலாம்
பயணம் தொடர்ந்திடுமே !
தொடர்ந்திடும் தொல்லைகள்
தோல்வியைத் தரலாம்
இலக்கினை மறவோமே !

பாதைகள் தோறும்
முட்கள் கிடக்கலாம்
முட்களை யெல்லாம்
வீசி யெறிந்தே
இலக்கினை யடைவோமே !

எழுவதும் வீழ்வதும்
வாழ்வதன் நியதி
நதியது போலவே நகர்ந்திடலாம்
மேட்டினில் மெல்ல . . . .
பள்ளத்தில் பாய்ச்சல் . . . .

புயலதன் பின்னே
தென்றலும் வீசும்
புரிந்தவர் தமக்கு
நிம்மதி பூக்கும் .

அந்தியில் சாயும் ஆதவன்
சந்தியில் மீண்டெழுந்து
உதயத்தைத் தருவதுண்டு . . . .

புதைத்திட நினைத்தால்
விதையெனப் புதைந்து
வீறுட னெழுந்தே
விளைச்சலைத் தந்துவிடு !

சிறுதுளி யென்றே
நினைப்பவர் தமக்கு
மழைத்துளி யென்றே
மண்ணை நனைத்துவிடு !

பல தடையதைத் தாண்டி
நடந்தவர் தானே
புவி
யதன் மேலே
புகழ்கொடி நட்டார் . . . .

புகழது உன்றன் வாசலது
தேடியே வருமெனில் நன்று !
துதிபாடிப் பெறுவதென்றால்
இகழ்ந்திடும் உலகு .

கண்முன் காண்கையிலே
கழிவிரக்கம் காட்டுவோர்
புறங்கூறிச் செல்வதைப்
புரிந்து நடந்துவிடு !

எழுச்சியைக் கண்டே
புகைந்திடுவோரும்
வீழ்ச்சியைக் கண்டு
மகிழ்ந்திடுவோரும்
இருநில மதிலே யிருப்பதுமுண்டு
. . . .
புகழதன் செருக்கால்
புன்னகை மறந்து
பூமியில் நடக்காமல்
தலைதாழ்த்தி நடந்தால்
தரணி வணங்கிடுமே!.... .

# சொல்...

ஆதியில் இருந்த சொல்
அகிலமும் பரவும் சொல்
தேனிலும் இனிய சொல்
தெவிட்டாத அமிர்தச் சொல்
சங்கம் வளர்த்த சொல்
செம்மொழியான தமிழ் சொல்

தாய்மொழி தந்த சொல்
தாய்ப் பாலோடே கலந்த சொல்
தாலாட்டுப் பாட சிறந்த சொல்
சிந்தனைக்குச் சிறகுச் சொல்
இலக்கியங்கள் படைத்த சொல்
இலக்ணங்கள் வகுத்த சொல்

அன்புக்குக் கனிவுச் சொல்
அறிவுக்குச் சுடர்ச் சொல்
மழலைக்குக் குழையும் சொல்
மகிழ்சிக்கு மந்திரச் சொல்
புகழுக்கு மகுடச் சொல்
புன்னகைக்கு வாழ்த்துச் சொல்

வெற்றிக்குச் சிகரச் சொல்
வெல்லும் வரை சொல்
கல்வெட்டு காட்டும் சொல்
காலம்கடத்து நிற்கும் சொல்
கவிதைக்குச் சர்க்கரைச் சொல்
கவிஞர்க்கு கற்கண்டுச் சொல்

காப்பியங்கள் தந்த சொல்
காலத்தால் அழியாத சொல்
உலகம் போற்றும் சொல்
உரமான தமிழ்ச் சொல்
வரமாய் வாய்த்த சொல்
தரணியில் இதுபோல் ஏது சொல்.

வாழ்க வளர்க தமிழ்ச் சொல்....

**சந்திரா... டென்மார்க்**

# முதுமை...

முதுமையை எதிர் பாராத இளமை
பதுமையாகக் காலமெனும் படகில்
ஏறிக் கரை சேராமல் பரிதவித்தது

புதுமையை எதிர் பார்த்த முதுமை
வலிமையாக மனமெனும் துடுப்பில்
மென்மையாகவே வலித்திடினும்
தைரியமின்மையாலாடித் தவித்தது

தனிமை எனும் பேரலைகள் மோதிட
நோய் எனும் பெருஞ் சூறாவளி தாவ
வாய் இருந்தும் பற்களின்றி வியர்க்க

பசி இருந்தும் உண்ணாத உறக்கமோ
பேசிப்பேசி கண் விழிக்க ருசி தெரியா
நாக்கும்,மூசியடிக்கும் மூக்குமிதயமும்

பேச்சின்றியே பெருந்துணை இளமை
நினைவோடு நிம்மதிப் பெரு மூச்சோடு
முதுமை எனும் மூச்சடங்கிப் போனதே
.

**ராணி சம்பந்தர்**
**ஜேர்மனி**

# தமிழா எண்ணிப்பார்!..

த.சு.மணியம்

வெறிச்சோடிப்போன வீதிகளில்
வீறிட்டெழுந்த தீச்சுவாலைகளின்
கொடூரச் சுடர் நாக்குகள்
கொழுந்துவிட் டெரிந்து பயமுறுத்தின.
ராணுவ வாகனங்கள்
அங்குமிங்குமாய் ஓடி உறும
தெருக்கள் தோறும்
தென்னிலங்கைக் காடையர்கள்.
கடைகளிலிருந்து குபுகுபுவெனப்
மேலெழும்பும் புகையிடையே
கொள்ளையடிக்கும் கூட்டம்.
வாணிப வளாகப் பொருட்களை
வாரிச்சுருட்டிச் செல்லும்
சாரமணிந்த வாலிபர்கள்.
இந்நிலையில்
காவல்படையென்போர்
கண்ணிருந்தும் குருடராய்
கடமை மறந்து திரிந்தனர்
கொடூர விலங்குகளின்
கொலைவெறிக்கு அஞ்சி
வீடுகளில் உறைந்த மக்கள்
எதையுமே அறியமுடியாத நிலையில்
எங்கும் கரும்புகை
இருட்டிப்புகளுக்கிடையே
இரவு விடிந்தது.
நடந்ததைக் கண்டவர்
நா எழாக் கண்கலங்க
பார்த்தவர்கள் சிலர்
பரிதவித்து உயிர் துறக்க
எம் இனத்தின் இதயம்கவர்ந்து
இன்பத் தமிழ் வளர்த்த
இசைகொண்ட நூல்நிலையம்
இதயமற்ற கொடூரர்களால்
இரவோடு இரவாக(31.05.1981)
எரியூட்டப்பட்ட செய்தி
காற்றோடு கலந்து
தமிழ் மக்களைக்
கவலையில் ஆழ்த்தியது.
வெள்ளை வெளேரென
தூய்மையின் அடையாளமாய்
திராவிடக் கட்டிடக்
கலைப்பாணியில்
தென்கிழக்காசியாவின்
மிகப் பெரியநூல்நிலையமாய்
தமிழரின் பண்பாட்டுச் சின்னமாய்
பழமையான ஏட்டுச் சுவடிகளையும்
பலவகை அரிய நூல்களையும்
பத்திரிகை மூலப்பிரதிகளையும்
படிப்போர் கூடமும் கொண்டு
அன்னைத் தமிழுக்கு
அழகு சேர்த்த
அறிவுக் களஞ்சியமாய்
அமைந்திருந்த யாழ்
நூல்நிலையத்தின்
அருமை புரியா அறிவிலிகள்
அழிக்க நினைத்து
அக்கினிக்கிரை யாக்கினரே.
தமிழா! எண்ணிப்பார்!
ஏன் உனக்கு இந்தநிலமை?

---

**காதல்!..**

கரும்பு இனிப்பும்
பழத்தின் சாறும்
கசப்பாகிப் போனது
காதலின் முன்னே!..

**குழந்தைகள்!..**

குப்பைத் தொட்டியில்
குப்பைகளை மட்டும்
போட்டுவிடுங்கள்
குழந்தைகளை அல்ல... **- சிவா -**

## ஓ,...முள்ளிவாய்க்காலே..

,
, ஈர் எட்டாண்டாய் ரணமாய் கணக்குது
, ஈவிரக்கமற்றோர் செயலால் விளைந்தது
, அடைக்கலமானோர் ஆகுதியானது
, அரசே இனத்தை கொன்று குவித்தது
,
, மறக்கத் தகுமா மனிதத்தின் வதை
, மாண்டோர் உயிரின் கதறலின் அலை
, கண்ணீர் புகைக்குள் கருகி மடிந்தோர்
, காயங்கள் சுமந்தே காணமல்
அழிந்தோர்
,
, எண்ணற்ற வதைக்குள் ஏதிலி வாழ்வு
, வெந்தணலிட்டாலும் வேகாத நினைவு
, முள்ளிவாய்க்கால் முற்றாகத் தகர்ந்தது
, ஈழத்தின் தேசமே இரத்தமாய் பாய்ந்தது

, ஈனர்கள் கொலையில் இருண்டது
உலகு
, புதைகுழி எங்கும் அவலத்தின் ஓசை
, வழிகளெங்குமே அவயத்தின் கூறு
, பற்றியே எரியும் பாதையின் சுவடு

, பாரிலே இதுபோல் பரிதாப இழப்பு
, முள்ளிவாய்க்காலே முற்றான தகர்ப்பு
, ஆண்டுகள் உருண்டாலும் அகலாத
நெருப்பு
, கோரத்தின் வாழ்வாய் கொன்றே
குவிக்கும்!
, உலகே உறைந்து மௌனமாய் இருப்பு!

, **வசந்தா ஜெகதீசன்**

,

## முள்ளிவாய்க்காலின் முற்றம்----

வேகாத நினைவுகளில்
வேருன்றிய மற்றொரு
வேள்வியிது. மண்டியிட்டு
மடிப்பிச்சை கேட்டோரை
வெட்டிப்புதைத்தது போல்
கொன்று குவித்த கோரமிது.
ஈழப்போரின் இறுதிகட்டம்
எனலாம். 2009ம் ஆண்டு மே
மாதம் நாற்பதினாயிரத்துக்கும்
மேற்பட்ட தமிழர் படுகொலை
செய்யப்பட்ட பரிதாபநிலை.
கைக்குழந்தைகள்,
கர்பிணித்தாய்மார் மூத்தோர்,
முதியோர் நோயாளர் என்று
வயது வேறுபாடின்றி
கண்ணீர்புகைகளும்,
காடையர் குழாமும் ஈன
இரக்கமின்றி அவலக்
குரலொலியில் ஆகுதியாகினர்.
முள்ளிவாய்க்காலில்
இரத்தமே ஆறாகிப பாய்ந்த
அவலப்பொழுது. மே பதினெட்டு
மறக்கத் தகுமா மேதினியில்.
உலகே மௌனமாய்
உறைந்திருந்த கணம்.
வாழ்வே இருளான வதைக்குள்
தமிழினத்து வரலாறே
புதைந்ததினம். ஆண்டுகள்
பதினாறு அகன்றுதான்
போயினும் ஈனக்கொலையை
இன்று எண்ணினும் இதயமே
ரணமாகும்: வாழ்வே இருளாகும்.

**வசந்தா ஜெகதீசன்**

## கண்ணதாசன் பிறந்த தினம்...

(24.06.1927 - 17.10.1981)

கண்ணதாசன் புகழ் சொல்லி மாறாது
காவிய நாயகனாய் படைக்கப்பட்ட
சிந்தனையாளன்
கற்பனையா காவியமா சித்தரிப்பான்
கவிஓவியமாய்
கம்பனை மிஞ்சி விடும் இவர் பாடல்
காலத்தால் அழியாத கல்லில்எழுத்தாய்
இவரது பாடல்கள் சிந்திக்கவைத்தவை
இன்பமா துன்பமா காதலா கடமையா
அப்பப்பா அத்தனையும்பொக்கிஷமானது
அவர்இறந்தும் வாழ்ந்துகொண்டிருப்பவர்
தகாத உறவு குடித்துக் கெட்டார்
மீண்டும் மனிதனானார் திருந்தி
மீட்சி அனுபவம் பேசவைத்தது
அனுபவங்கள் அச்சாகவும் வந்தது
பயமில்லா எழுத்தாளன்
பலதையும் எழுதுவான்
அரசியலில் சிலகாலம்
சினிமாவில் ஆயுட்காலம்
எம். ஜி. ஆர். கொடுத்தார்
ஆஸ்தான கவிஞர் பட்டம்
அவரும் ஏற்றுக்கொண்டார்
அன்பு மெருகி - இவர்
பாடல்களில் மரபும் இருக்கும்
திரு மந்திரமும் இருக்கும்
முத்தையா எனும் இவர் முழுப்பெயர்
முத்து முத்தாக எழுத வைத்தது
கண்ணதாசன் எம். எஸ். வி. உறவு
அண்ணன் தம்பி உறவு
இருவரின் கூட்டு முயற்சி தான் வெற்றி
ஒரு மேடையில் எம. எஸ். வி.பாடினார்
புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
கண்ணதாசன் புகழ் பாடுங்களேன்
இன்றும் அவன் புகழ் பாடிக்
கொண்டேதான் இருக்கிறார்கள்!

**கெங்கா ஸ்ரான்லி**

## உழைப்போரை உயர்த்துவோம்!..

உழைப்பினில் மாடென நாளும்
உடலினைக் கரைக்திடும் மக்கள்
கழைப்பினை அறியா உள்ளம்
கவலையில் புதைத்திடு மாயுள்!

விழைச்சலைப் பெருக்கு மூக்கம்
விதியென வறுமை வாட்டம்
தழைத்திட இவர்கள் வாழ்வும்
தரணியும் நிறைவில் ஓங்கும்!

நெஞ்சுரங் கொண்டு நாளும்
நேர்மையை நிறுவும் பாதை!
வஞ்சனை அறியா ஆயுள்
வறுமையில் நித்தம் ஏங்கும்!

அஞ்சுதல் அறியா வோட்டம்
அனுதினம் கரையும் தேக
தஞ்சமாய் உழைப்புத் தந்தே
தாங்கிடும் உலகின் தூண்கள்!

கறைகளை அறியா உள்ளம்
களிப்பினில் நிறைய வேண்டும்!
குறையிலா உரிமை தந்தே
குவலயம் இவரைக் காக்க

மறைந்திடும் வறுமைத் துன்பம்
மலரந்திடும் இவர்க்கும் ஏற்றம் !
நிறைவுடன் சிரிக்கும் வேளை
நித்திலம் ஓங்கி வெல்லும்!

**கீத்தா பரமானந்தன்**




## மண் சஞ்சிகை இதழ்-230 அட்டைப்படக் கவிதை:

மண்ணாகி வானாகி மழையாகவே வந்தாய்
மலராகி மணமாகியுன் மதியாலே வென்றாய்
பெண்ணென்று பேரோடும் பேறாகி நின்றாய்
பேதமை வடிவமில்லா பெருமையும் ஆனாய்
விண்ணாகிப் பரந்தே வியப்பாக விரிகின்றாய்
வீரியத்தின் வீச்சினை விரலில் மடிக்கின்றாய்
கண்ணாகிக் காதலில் களிப்பினை தந்திடவே
காலமெல்லாம் காக்கும் கருணை வடிவாகிறாய்.

எல்லா நிலையிலும் நீ எழுந்தே நிற்கின்றாய்
ஏகமும்நீ நிறைந்து ஏற்றத்தில் பிரகாசிக்கிறாய்
நில்லாத நதிபோல நித்தமுமே நகருகின்றாய்
நீளும் காலமெல்லாம் நீயெமக்கே உழைக்கிறாய்
வில்லாக வளைந்து வினைகளை ஆற்றுகிறாய்
வீரியம் குறையாது வேதனையை நொருக்குகிறாய்
பல்லாண்டு இப்புவியில் பசுமை நிலைத்திடவே
பாரெல்லாம் அன்பினைப் படரவே விடுகின்றாய்.

நிர்வாக அலகுகளில் நித்தியமும் உழைக்கின்றாய்
நீதியின் தேவதையாய் நியாயத்தை நிறுவுகின்றாய்
தர்மத்தின் தலைவியாகி தரணியில் திளைக்கிறாய்
தவத்திலும் தானத்திலும் தலைவியாய் நிமிர்கிறாய்
சர்வேமுமே நீயாயாகிச் சாகசங்கள் செய்கின்றாய்
சகமெல்லாம் தாயாகிச் சாதனை நிகழ்த்துகின்றாய்
கர்வத்தில் உனையுயர்த்தி களிப்பினில் கூத்தாடிடவே
கடமை கண்ணியமாய் கட்டுப்பாட்டில் பூச்சூடுகின்றாய்.

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# வருடுகின்ற வைகாசி...

வைகாசி பதினெட்டு வடிக்கிறதிங்கு குருதிச்சொட்டு
வதைகளுக்கு முடிவின்றி வருடலில் கண்ணீர்விட்டு
நெய்விளக்கில் திரியையிட்டு நெருடலுக்கும் ஆட்பட்டு
நேசத்து உறவுகளின் நினைவுகளை நிதமும்தொட்டு
கைவிட்டுப்போன சிட்டு கரைகிறதின்னும் கலக்கப்பட்டு
காலத்தினையே நிறுத்திட்டுக் கச்சிதமாய்ப் படம்புகட்டு..!

செய்கையிலே வேஷமிட்டுச் சிங்களமோ பயணப்பட்டு
சீர்திருத்தம் என்று விட்டுச் சிரிக்கிறதின்று வட்டமிட்டு
தொய்ந்திடாத மேற்குலகோ தீவிரமாகவே இரக்கப்பட்டு
தேய்ந்திடும் இனத்திற்காய் தெரிந்தவற்றை ஆய்ந்துவிட்டு
பொய்பேசி மெழுகிவிட்டுப் போனதே அரசோ ஆட்சிவிட்டு
போக்கிடம் அறியாத உறவோ பொசிக்கிடும் வலியில்சுட்டு..!

தைமாசி பெயரைவிட்டு தாய்மொழியையே மறந்துவிட்டுத்
தடங்களை தொலைத்துவிட்ட தலைமுறையோ தறிகெட்டு
மெய்யான உணர்வுச் சொட்டு மேதினியை விலக்கிவிட்டு
மேயில் வரும் பதினெட்டு மினுக்குகிறதிங்கு குறுக்கிட்டு
கைகுலுக்கிப் பேசிவிட்டு கடமை கண்ணியம் மறந்துவிட்டு
காலத்தைத் தொலைத்துவிட்டு கலைகிறது உணர்வுகெட்டு..!

மைப்பூச்சினைக் கலைத்துவிட்டு மகுடம்சூடப் பாட்டுக்கட்டு
மண்ணின் நிலை மாற்றிடவே மதிகொண்டே பாத்திகட்டு
பைகளிலே பணத்தைக்கட்டு பசியாற்றிடப் படையைத்திரட்டு
பதைக்கின்ற உறவுகளுக்குப் பணியாற்றிடக் கச்சைகட்டு
கொய்தலை மறந்து விட்டு குடியேற்றும் பணியை வெட்டு
கூடியிருந்து குழிபறிக்கும் கூட்டத்திற்கு மோர் முடிவுகட்டு.!

**-அம்பலவன்புவனேந்திரன்..**

---

## முதல் புதுக்கவிதையோடு இருவர்....

### கரங்களில்லை!...

மேடையில் பேச்சாளர்
சபையில் வெற்றுக் கதிரைகள்
கை தட்டக் கரங்களில்லை

**சி சிவவினோபன் - யேர்மனி**

### பழரசங்கள்!..

தாகத்தில் தண்ணீருக்கு
தவித்த அப்பாவின் படத்திற்கு
வகை வகையான பழரசங்கள்..

**- சாந்தினி துரையரங்கன் -**

# நான்தான்!... மதவடி மயிலன்!...

நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும்சுகம் என்று நினைக்கிறன்..
இனி கோடைகாலத்தில் பலபேர்தாய் நாட்டுக்குப் போக ஆயத்தங்கள் செய்துகொண்டிருப்பியள் என எண்ணுகின்றான் இந்த மயிலன் பலர் கண்டதெல்லாததையும் திண்டு கொழுத்து நிறைகூடியும் விடுவீர்கள் முன்கூட்டியே அவதானம் செலுத்துங்கோ. சொல்வழி கேட்காவிட்டால் பிறசர், சீனி வருத்தம் கொலஸ்ரோல் என டாக்குத்தர்மாரிடம் மாறி.. மாறிச் செல்ல வேண்டியதுதானே...

ஊருக்குச் சென்று அங்கு பந்தா காட்டி, தண்ணியடித்து கூழும் கும்மாளமும் அடிப்பவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு கலியாணம் என தமது சாதி, சமயம் பார்த்துச் செய்து வைத்தவர்கள், 40, 50, 60, 70, 80 எனப்பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் பல ரகத்தினர் செய்யும் அட்டகாசங்களோ கண் கொண்டு பார்க்க முடியாது. அந்தளவுக்குக் கொண்டாட்டங்கள் களைகட்டும் என எதிர்பார்க்க வேண்டியதுதான்...

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரும் பணங்களை நல்லாய் அனுபவிக்கும் கூட்டத்தினர் மிக அதிகம் பேர்.



அது அப்படி இருக்கையில் கடும் வெப்பம் ஏற்பட்டு நாடு முழுவதும் ஒரே அல்லல்தான் வறுமையால் பெருந்தொகையான நமது உறவுகள் பெரும் துயரப் படுகிறார்கள் என்பது உண்மையாகும். அரசாங்கமும் பல தொண்டு நிறு வனங்களும் நல்ல பணிகளைச் செய்கிறார்கள். இவர்களை வாழ்த்த வேணும் பாருங்கோ.

இதில் என்ன செய்தி என்றால் நிவாரணத்தைக் காட்டி நம்மட ஆட்கள் பல மோசடிகளிலும் ஈடுபடுவது வெட்கக் கேடான விடையமாகும். ஏழைமக்களுக்குக் கொடுக்கும் நிவாரண உதவிகளிலும் மோசடி செய்கிறார்கள் என தகவல் இருக்குது பாருங்கோ.
அடுத்தது எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட கள்ளரையும் கொள்ளைக்காரரையும் லஞ்சக்காரரையும் பிடித்து மறியலில் அடைப்பதே புதிய அரசாங்கத்தின் வேலையாகிவிட்டது பாருங்கோ.. அந்தளவுக்கு நாடு சீரழிந்து கிடக்கிறது. வந்து ஆறு மாதம்கூட ஆகவில்லை எல்லாத்தையும் தா என்பவர்களும் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்பதும் கேள்வி கேட்பதும் சுலபமாகிவிட்டது. ஆனால் இந்தக் கள்ளரைப் பிடித்து அடைப்பது எவ்வளவு கடினம்பாருங்கோ..

சரி..சரி.. இனி விசயத்துக்கு வருகிறேன்.. வெளிநாடுகளில் எத்தனையோ சம்பவங்கள் எங்கட ஆட்களால் நடைபெறுகின்றதல்லவா.. சென்ற மாதம் மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு விழாவிற்குப் போயிருந்தேன்.. விழா நல்ல சிறப்பாக நடந்தது. ஆசிரியர் குடும்பத்தைப் பாராட்டத்தான் வேண்டும். வாழ்க வளமுடன்...என நீங்களும் பலர் பாராட்டித்தான் இருப்பீர்கள் என இந்த மயிலன் நம்புகிறான்...

என்ன நம்மட ஆட்களின் சுயநலப்புத்திதான் எனக்குப் பிடிக்கவில்லை. வெளிநாடு வந்து முப்பது - நாற்பது ஆண்டுகள் என்று பெருமையாகச் சொல்லும் நமது புகழ் விரும்பிகளும் சுயநலக்காரர்களும் நடந்துகொள்ளும் முறையோ படு கீழ்த்தரம் என்றுதான் சொல்வேன். அதாவது விழா மூன்று மணிக்கு என்று போட்டிருந்தால் நாலு ஐந்து மணிக்குத்தான் வருவார்கள்.. தங்களுக்கு விரும்பியவர்களின் டான்ஸ் போன்ற நிகழ்வுகளைப் கண்டுகளித்துவிட்டு நாலுபத்துப் பேருடன் அரட்டை அடித்துவிட்டுப் புறப்பட்டு விடுவார்கள்.

ஒரு விழா எடுப்பவர்கள் எவ்வளவு கஸ்டப்படுகிறார்கள் என்று எந்தவித அக்கறையும் கிடையாது. விழா தொடங்க முன்போ அல்லது முடிந்தவுடனோ நின்று ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எள்ளளவேனும் கிடையாது பாருங்கோ..

அடுத்தது விழாவில் நடனம் போன்ற கலை நிகழ்வுகளை வழங்குபவர்களும் பல தந்திரங்களை கையாளுகிறார்கள்.. பார்வையாளர்கள் நிறைந்திருக்கிற சமயத்தில் தங்கட டான்சை அல்லது தமது பிள்ளைகளின் நிகழ்வை நடாத்தும்படி நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களைக் கட்டாயப்படுத்தி நடாத்திவிட்டு நிகழ்ச்சி முடிய உடனடியாகவே மண்டபத்தை விட்டு வெளியெறிவிடுவார்கள். தமது நிகழ்ச்சியைப் பலர் கண்டுகளித்தால் தமக்கு வெற்றி என்று எண்ணுகிறார்கள். இது எவ்வளவு தவறு.

தமது நிகழ்வை எல்லோரும் காணவேண்டும் மற்றவர்களுடைய நிகழ்வு எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை என்று சுயநலப்புத்தி தமிழ் பரம்பரைக்கு ஊட்டப்படுகின்றது என்று இந்த மயிலன் எண்ணுகின்றான்.

இன்னும் பல பெற்றோர் தமது பிள்ளைகளின் நிகழ்வு முடிந்தால் காணும் என்ற மனப்பாங்கு. இன்னும் பலர் தமது பிள்ளையின் பரிசை வேண்டிக்கொண்டு உடனடியாகவே புறப்பட்டுவிடுவார்கள். தமது பிள்ளைகளுக்குப் பரிசும் பாராட்டும் கைதட்டல்களும் கிடைத்தால் காணும் என்ற மனப்போக்குதான் மிக அதிகம்பேரின் நோக்கமாகும். இது எவ்வளவு குறுகிய சிந்தனை பாருங்கோ.

இனி மேடைக்குப் பேசவரும் ஜாம்பவான்கள் பலர் தமது பேச்சு முடிய ஆட்களைக் காணேலாது. அவர்களைப் பார்த்தால் அங்குள்ள தேநீர்சாலையில் நின்று புழுகுமூட்டைகளை அவிட்டுவிட்டு லெக்சர் அடித்துக்கொண்டு தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பிக்கொண்டுதான் இருப்பார்கள்

இனிப் பார்வையாளர்களும் வசதிக் கேற்றவாறு தங்களுடைய புழுகுகளையும் தற்பெருமை களையும் பேசிக்கொண்டு அருகில் இருப்பவர்களுக்கு இடைஞ்சல் கொடுத்துக் கொண்டிருப்பதும் வழமையாகப் போய்விட்டது. நிகழ்ச்சிகளை அமைதியாக ஆவலுடன் செவிமடுத்துக் கொண்டிருப்பவர்கள் இதனால் எவ்வளவு சங்கடப் படுவார்கள் என்ற சிந்தனை கிடையாது பாருங்கோ. இதுகளைப் பார்க்கும் போது இந்த மயிலனுக்குப் பெரும் கோபம் என்ன செய்வது ஒன்றுமே செய்ய முடியாது எண்டுதான் இதில எழுதுகிறன் பாருங்கோ.

ஏன் நம்மட ஆட்கள் கலியாணம், சாமத்திசடங்கு, பிறந்தநாள்,, பார்ட்டி என்றால் ஆடம்பரமாய் வெளிக்கிட்டு நேரத்துக்கு முந்திப் போய் நிகழ்வு முடிந்தாலும் இரண்டு மூன்று மணித்தியாலம் இருந்து அரட்டை அடித்துவிட்டு அன்பளிப்பும் சுழையாகக் கொடுத்துவிட்டு ஆறுதலாக வீடு திரும்புவார்கள். இதற்கு நேரம் ஒதுக்கி ஆடல் பாடல் குத்தாட்டம் எல்லாம் முடித்துத்தான் வீட்டுக்குப் புறப்படுவார்கள்.

ஆனால் பொது விழாக்கள் என்றால் ஏனோ?...தானோ?.. என்ற போக்குத்தான். விழா செய்பவர்களுக்கு சிறு பணம் பொருள் உதவிகள்கூடச் செய்யாமல் போவாகள். பணம் பொருள் உதவி செய்யாவிடினும் பறவாயில்லை... விழாவை இருந்து கண்டுகளித்து மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி சந்தோசப்படுத்த வேண்டும் என்ற பண்பேஇல்லாமல் இந்த நூற்றாண்டில் இருப்பது இந்த மயிலனுக்குக் கடும் கோபம்தான் எப்ப எங்கட தமிழ்ச் சமூகம் திருந்தப் போகிறது என்று இந்த மயிலனுக்கு வருத்தம்தான் பாருங்கோ..

மற்றது பொதுவாக விழா நடத்துபவர்களிலும் சிலரிடம் குறைபாடுகளும் உண்டுதான். அதாவது நேரத்துக்குத் தொடங்கி நேரத்திற்கு முடிப்பதில்லை என்பது அனைத்து விழாக்களிலும் இடம்பெறும் விடயம்தான். சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதும் வழக்கம்தான். சில பேச்சாளர்கள் மைக்கைக் கொடுத்தால் காணும் மணிக்கணக்காக ப் புழுக வெளிக்கிட்டுத் தமது பெயர் புகழைப் பேசிக்கொண்டு நேரத்தை வீணடிப்பது இன்றைய சந்ததிக்கு ஒத்துவராத விடயம்தான். சபையின் நிலை, நேரம், காலம், சனத்தொகை, பார்வையாளர்களின் ரசனை அறிந்து பேசாமல் அலட்டுபவர்களால் பார்வையாளர்கள் பெரும் மன உழைச்சல்களுக்கு ஆளாகுகின்றார்கள் என்பதை இந்தப் பேச்சாளப் பெருந்தகைகள் எப்போது உணருவார்கள் என்பதும் கேள்விதான் பாருங்கோ?..

இப்படிப்பல விடயங்கள் நம்ம வர்கள் மத்தியில் இருந்துகொண்டும் வளர்ந்து கொண்டும்தான் இருக் கின்றது பாருங்கோ..தற்போதய முதியவர்கள் விடும் தவறுகளை அடுத்த தலைமுறையினர் செய்யத் தூண்டாமல் அவர்களின் சரியான நேரகால கடைப்பிடிப்புகளையும் நிகழ்ச்சி ஒழுங்குகளையும் கடைப் பிடித்து. தம்மைப்போல பிறரையும் நேசித்துத் தட்டிக்கொடுத்து நல்லபடி வாழவேண்டும் என்பதே இந்த மயிலனின் நோக்கமாகும்!...(வளரும்)

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| க | ல் | வி | பு |
| ட | வி | ண் | ன் |
| வு | த | க | ன |
| ள் | கை | ரே | கை |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தே | ர் | த | ல் | வ | க | த |
| சி | ரு | ம் | த | ர | பா | லை |
| க் | கா | ன் | வ | த | ஆ | மு |
| கா | ங் | கே | ச | ன் | து | றை |
| ய் | க | ரி | க | த | க | ளி |
| பா | ட | ல் | ல் | ர | ட | ள் |
| து | ம் | பி | வி | ப | ல் | க |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 7 | 9 | 6 | 3 | 4 | 1 | 8 |
| 1 | 4 | 9 | 5 | 7 | 8 | 3 | 6 | 2 |
| 6 | 8 | 3 | 2 | 4 | 1 | 7 | 9 | 5 |
| 4 | 3 | 5 | 8 | 2 | 6 | 1 | 7 | 9 |
| 2 | 6 | 1 | 4 | 9 | 7 | 8 | 5 | 3 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 5 | 6 | 2 | 4 |
| 7 | 9 | 2 | 1 | 3 | 4 | 5 | 8 | 6 |
| 8 | 1 | 4 | 6 | 5 | 2 | 9 | 3 | 7 |
| 3 | 5 | 6 | 7 | 8 | 9 | 2 | 4 | 1 |



## சாதனை படைத்தார் இந்திய வம்சாவழிப் பெண் சுனிதா.. அமெரிக்காவின் வான்வழிச் சாதனையின் தொடர்ச்சி.. விண்வெளிச் சாதனையில் ரஷ்ஷிய வீரர்கள் முன்னணியில்..

அமெரிக்காவின் "நாஸா" விண்வெளி நிலையம் தொடராகப் பல சாதனைகளைப் புரிந்து வருவது உலகத்திற்குத் தெரிந்த விடயமாகும். கோடி..கோடியா டொலரைக் கொட்டிச் செலவழித்து இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை செய்துவரும் அமெரிக்கா இன்று விண்வெளித்துறையில் மிக முக்கிய நாடாக விளங்குகின்றது.

உலகளவில் விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த வீரர்கள் பலர் உள்ளனர். அந்தப் பட்டியலில் முதலிடத்தில் ரஷ்ஷிய வீரர்களே உள்ளனர். அவர்களைத் தொடர்ந்து அமெரிக்க விரர்களே உள்ளனர். விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்தவர்களின் விபரப்பட்டியலைப் பார்ப்போம்..



01- ஓலெக் கோனோனெக்கோ
ரஷ்ஷியா - 1.110 நாட்கள்
02- கேன்னடி படல்கா
ரஷ்ஷியா - 878 நாட்கள்
03- செர்கெய் க்கிரிகலெவ்
ரஷ்ஷியா - 803 நாட்கள்
04- அலெக்ஸாண்டர் கலேரி
ரஷ்ஷியா - 769 நாட்கள்
05- செர்கெய் க்ரிகலெவ்
ரஷ்ஷியா - 747 நாட்கள்
06- பெக்கி விட்சன்
அமெரிக்கா - 675 நாட்கள்
07- ப்யோடர் யுர்சிகின்
ரஷ்ஷியா - 672 நாட்கள்
08- யூரிஅாலென்சென்கோ
ரஷ்ஷியா - 672 நாட்கள்
09- சுனிதா வில்லியம்
அமெரிக்கா - 609 நாட்கள்

1 - 5 வரையிலானவர்கள் அனைவரும் ரஷ்ஷியா நாட்டவர்களாவர். உலக வரலாற்றில் அதிக நாட்கள் தங்கியிருந்தவர்கள் வரிசையில் 7 பேர் ரஷ்ஷியா நாட்டவர்களே.

அமெரிக்கர்களைப் பொறுத்தளவில் அதிகநாட்களைக் கழித்தவர் என்ற இடத்தில் சுனிதா வில்லியம் 2வது இடத்தில் உள்ளார்.

சுனித வில்லியமுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒன்றாகப் பணிபுரிந்த பேர்ரி புடயச் வில்மோர் 462 நாட்கள் விண்வெளியில் கழித்த 6வது அமெரிக விண்வெளி வீரராக உள்ளார்.

60 வயதுடைய சுனிதா வில்லியத்தின் தந்தை இந்தியர் தாய் ஐரோப்பிய நாட்டவர். இவர் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து கல்விகற்றுப் பட்டங்கள் பல பெற்றுப் பல துறைகளில் கடமைபுரிந்து இன்று அமெரிக்காவின்”நாஸா” விண்வெளி ஆராய்ச்சித்துறையில் கடமைபுரிகின்றார்.

இவர் இந்தியா வம்சாவழி என்ற படியால் இன்று ஆசியநாடுகள் அனைத்திலும் இவரின் பெயர்,புகழ் ஓங்கியிருக்கின்றது. சாதனைப் பெண்ணை நாமும் வாழ்த்தி மகிழ்வோம்!..

........................................................................................................................................

## மனித உடல் பற்றி அறிந்துகொள்வோம்!..

1- ஒரு மனிதனின் இதயத்துடிப்பு ஒரு நாளைக்குச் சராசரியாக 1.00.000 முறை துடிக்கும்.

2- ஒரு மனிதன் ஒரு நாளைக்குச் சராசரியாக 22.000 முறைகள் சுவாசிக்கிறான்.

3- மனிதனுடை கண்களால் 10 மில்லியன் நிறங்களை வித்தியாசப் படுத்திப் பார்க்க முடியும்.



## 39 ஆதவற்ற தெருவோர நாய்களை எடுத்து வீட்டில் வளர்க்கும் குடும்பம்!

யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் வசித்துவரும் குடும்பம் தெருவோரங்களில் ஆதரவற்று நிற்கும் நாய்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று வளர்த்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் இரண்டு நாய்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணியானது தற்போது 39 நாய்கள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நாய்களை தங்களது சொந்த பிள்ளைகள் போலவே வளர்த்து வருகின்றனர். அயல் வீட்டில் வசிக்கும் நபர் ஒருவர், குறித்த குடும்பத்தினரால் வளர்க்கப்படுகின்ற நாய் ஒன்றின் மீது தாக்குதல் நடாத்திய நிலையில், அயல் வீட்டில் வசிக்கும் நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன், அவர்களது நாய்கள் காணாமல்போகின்ற சந்தர்ப்பங்களில் ஜோசியம் பார்த்தல், சமூக ஊடகங்கள் மூலம் பதிவுகளை பகிர்தல் ஆகியவற்றின் மூலம் நாய்களை கண்டுபிடிக்கின்றனர்.

குறித்த குடும்பத்தின் தலைவர் எதிர்வரும் காலங்களில் நாடளாவிய ரீதியில் நடைபயணம் ஒன்றினை மேற்கொண்டு, பலரது கையொப்பங்களை பெற்று நாய்களின் பாதுகாப்புக்கான சட்டங்களை இயற்றுவதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.





# யாழ்ப் பொது நூலகம்!....

(சிறுகதை )

"அறிவின் கண்களைப் பார்வையிழக்கவைக்கவா! "

எங்கும் புகை மண்டலம்! சனக்கூட்டம் ! எப்போதுமே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பது யாழ்ப்பாணம் ஆனாலும் அன்றோ என்றும் இல்லாதவாறு வானே ஒளி வீச மறுத்துக் கறுத்ததுபோல அந்த மனிதருக்கு உள்ளுக்குள்ள உள்ளுணர்வு போராட ஆரம்பித்தது! ஆச்சரியம்! வெளியே எட்டிப் பார்க்கிறார் மக்கள் மார்பிலடித்துக் கதறுகிறார்கள் பெற்ற பிள்ளைகளை இழந்த சோகமாய்...

வரலாறு , இலக்கியம், இலக்கணம், தத்துவம், மெய்யியல், உளவியல், சஞ்சிகைகள் ,தொல்லியல் பத்திரிகைகள் எனப் பல்வேறு துறைகளின் மீது பாண்டித்தியம் பெற்ற சிந்தனைவாதிகளின் துளித்துளிகளாய் பணத்திற்காக வியர்வை சிந்திச் செலவழித்த நேரத்தை விடச் சமூக நலனுக்காக களைப்போடு உழைத்துச் சேர்த்த, சேர்த்து வைத்துத் திகட்டாத திரவியத் திரட்டுகள் கூட்டாக எரிந்து எங்கும்ஆறு போலப் பெருக்கெடுத்து ஓட! இவருக்கோ வார்த்தை மூச்சிழந்து போராட ஆரம்பித்தது தளர்வு தள்ளாட...

அவரோ உயிரை எவ்வளவு நேசிப்பாரோ அவ்வளவு தூரம் அவர் பயணம் செய்த அந்தப் புத்தகமும் வாசிப்பும் ரயில் பயணம் போல கோலத்தை ரசித்துக் கொண்டே இருந்தார் அது தொடராதெனக் கனவிலும் கூட அவர் மனதில் ஒரு சிறு சந்தேகம் தோன்றவில்லை அவருக்கு ஒரு முறை கூட இது நிலையானதில்லையென நினைவு வரவில்லை அந்த இரவு கரியாய் மாறுமென ! பாதியில் தொடருந்துப் பயணம் பீதியாகுமென நினைத்ததில்லை

தென் ஆசியாவிலேயே புகழ்பூத்த சோலை அந்த நூலகம் !செருப்பைக்கூட வெளியில்க் கழற்றி விட்டு ஆலையத்தினுள் நுழைவது போல அந்த மக்கள் உள்ளத்திற்கும் உடலுக்கும் உணவூட்டிய போல ,இல்லை !உணர்வூட்டிய உன்னத கோவில் போன்றது என்று கூறிய ஒரு கலைஞர் ஞாபகம் அவருக்கு வந்து போனது.

அவர் காதில் ஐயோ! ஐயோ! முடிந்தது எல்லாம் முடிந்தது என விடிந்தும் விடியாத செய்தி !எரிகிறது !அதுவும் தீப்பற்றி அல்லவா கொழுந்து விட்டு !சாம்பல் மேகத்தை மறைத்து சூரியோதயம் தன்னை வெறுக்கிறது இந்த மானிடர்களை எண்ணி அதுவும் படித்த அந்தத் தீய நாட்டு விலங்குகளை எண்ணிக் கண்ணீர் வடிக்கும் நிலை என்று ஒருவர் வந்து சொல்கிறார்

மேலும் முதியவர் ஒருவர் வீதியில் புலம்பியது இவர் காதுகளில் யாழ் நூலகம் 1933 ஆம் ஆண்டு கட்டியெழுப்பப்பட்ட சிற்பம் அல்லவா!. முதலில் சிலரது தனிப்பட்ட சேகரிப்புகளுடன் நூலகம் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு, மிக விரைவில் உள்ளூர் தமிழ் மக்களின் ஆதரவுடன் ஒரு பாரிய நூலகமானது தமிழ் மக்களுடைய அறிவுப் பாலமானது தொடர்ந்து பல இடங்களிலும் தனிப்பட்டவர்களிடம் இருந்து வந்த பல நூல்கள், குறிப்பாக நூற்றாண்டுகள் பழமையான ஓலைச்சுவடிகள்1800களில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட பல பத்திரிகைகளின் மூலப் பிரதிகள் போன்றவை இந்நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பவளப் பாறைகள் .நூலகத்தின் முதலாவது கட்டடம் 1959 ஆம் ஆண்டு நூலகமாகத் திறந்து வைக்கப்பட்டது.

என்ற பழைய ஞாபகங்கள் இரைமீட்ட த் தொடங்கக் கண்கள் குளமாகியே போனதே! என்ன அமைதியாகீட்டீர்களே என்றது காதில் விழவே இல்லை கை கால் தளர்கிறது மனம் கனக்கிறது

என்ன சொல்கிறீர் என்ன ! என்ன! என்று கேட்க்கிறார் பதிலுக்கு அவரோ யாழ்ப்பாணப் பொக்கிஷம் விஷமிகளால் வேட்டையாடப்படுகிறது என்றார் ,என்ன காது கேட்க்கவில்லை என்பதை உணர்ந்து கொள்கிறார் மனம் வெடித்தது 97.000 -100.000 அறிவுத் திரட்டல் சொத்துக்கள் பொத்திப் பொத்தி பாதுகாத்து வைத்துப் பராமரித்த வைரங்கள் வைடூரியங்கள் ஆ! கடவுளே என அலறி அங்கும் இங்கும் ஓடுகிறார் கத்துகிறார் புலம்புகிறார் பலமிழக்கிறார் ஓலமிடுகிறார்.

பதிலுக்கு அன்றைய காலைப் பத்திரிகை வேற வருறது திறக்கிறார் !வாசிக்கிறார் நூலுக்கான பணத்தை நாம் கொடுக்கவே முடியாது வெறுமனே அச்சடிக்க மையுக்கும் அச்சி யந்திரக் கூலிக்குந்தான் பணத்தைக் கொடுக்கிறோமேயொழிய ஒரு படைப்பாளியின் எழுத்து உணர்வுகளுக்கும் செலவழிக்கும் பொன்னான நேரத்திற்கும் பணம் கொடுக்க யாராலும் முடியாது அதற்குப் பணம் கொடுத்துத்தான் வாங்கினேன் என்று ஒருவர் சொல்வா ரானால் அது அவரின் அறியாமை மட்டுமே என்ற ஒரு வரிகள் மனதை எரித்தே போகிறதே என்று. மெல்லப் பெருமூச்சு விட்டுச் சாய்கிறார் அந்தச் சார்மனைக் கட்டிலில்!

தனது புத்தகங்களின் அலுமாரியில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்த்தார் அந்த மனிதர் அதில்த் தேடுகிறார் அப்போதே பதிவிடுகிறார் சிலதைத் அதனது பதிவேட்டின் நாட்க்குறிப்பாய் மரித்தாலும் இவை மரிக்கக்கூடாதென 1981 யாழ்ப்பாணப் பொக்கிஷம் எரிப்பு என்பதை எழுதிவைத்துவிட்டுத்தான் என்று எண்ண வைகாசி 31 இரவும் என்றது தொடராய் வந்தது ஆகவே தொடர்ந்து எழுத ஆரம்பிக்கிறார் அப்போது கண்களே இருண்டன கைகள் பலமிழந்தன உணர்வுகள் போராட ஆரம்பித்தன ஆனால் அவை எல்லாம் கட்டுக்குள் வரத் தென்பைக் கேட்கிறேன் தா இறைவா என இறைவனிடம் கேட்டுத் தொடர்கிறார்

இறந்தாலும் பதிவுகள் சிறந்தே பிறக்க வேண்டும் மறுபடி சிறகடித்துப் பறக்கும் பறவை போலப் பறந்து எனப் பிற்க்காலத்தில் எமது சந்ததிக்குத் தெ-ரிய வேண்டுமென எண்ண அக் கொடிய வன்முறைகளின் போது யாழிலுள்ள பிரதான சந்தை, வணிக நிறுவனங்கள், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் போன்ற பல முற்றாக எரியூட்டப்பட்டன என்ற வார்த்தைகளைக் கோர்த்து எழுதிக்கொண்டே இருந்தார் முடியவில்லை கடைசியில் உணர்வுகளும் ஆன்மாவும் போராடி மலர்ந்தாலும் உடலோ இந்தப் பாரத்தைத் தாங்காது மாரடைப்பால் இவ்வுலகை விட்டு நகர முடியா-மல் விடைபெற்றார் மெல்ல வெல்லமாய்ச் சிலது பழமாய்ப் பரவ விதையான சதையாய் இதை விட்டுச் சிட்டாய் மறு கடவுளாயே தடம்பதித்துப் பதியாயே பாதியில்க் கதியிதுவெனத் துதிக்கவைத்தே மானிடர் உயிர் பிழைக்கச் சில உயிரான அணுக்களை விட்டே பாட்டாய் மீட்ட மாண்டார் இறந்தும் இறக்காத மனிதப் புனிதர்களாய் வணங்கும்படி!...

**திரேஸ் மரியதாஸ்**

**லண்டன், சட்டன்.**

## அனலான ஆலயமே!.....

வானுயர்ந்த கட்டிடமாய் வரலாற்றுக் கூடமாய் தமிழினத்து தகைமைநிறை நூல்களை தன்னகத்தே நிறைத்திருந்த கூடமே. கல்விக்கு சான்றாகி சங்கால நூல்கள் முதல் சமகாலப் படைப்புக்களுடன் ஆசியாக்கண்டத்தில் மிகப்பெரிய நூலகமாக இடம்பிடித்துயர்ந்த ஈழத்து யாழ்ப்பாண நூல் நிலையம். காலக்கொடுரத்தில் காடையர்கள் இனவழிப்பில் தீக்கிரையானது.

தீராத வலியை தமிழினத்துக்கு தந்த ரணமிது. க.மு செல்லப்பா என்பவரின் சிந்தையில் அவரின் இல்லத்தில் உருவான விதையிடம். பற்பல இடங்களுக்கு இடம்மாறி பாரிய வளர்ச்சி கண்டுயர்ந்த நூலகம். உலக-மொழி நூல்களுடன் வரலாற்றை தன்னத்தே நிறைத்து நின்ற நுண்ணறிவுக் கூடமிது.

1981.மே.31 ம்திகதி சிங்களக்காடையர்களால் ஆர்ம்பமான வன்முறைத் தாக்குதலில் அண்ணளவாக 97000 அரிய நூல்களுடன் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்ந்த யாழ்நூலகமும் 1.யூன். 1981ல் தீக்கிரையாகி சாம்பல் மேடானாது. தமிழினத்து வரலாற்றையே வெந்தணலிட்டு வேகவைத்தது எனலாம். அறிந்த அறிஞர் சான்றோர்கள் பலர் தம்முயிரிழந்த தாங்கமுடியாத காலத்தின் பதிவு.

**திருமதி வசந்தா ஜெகதீசன்**

# மனதுக்கு இன்பம் தருவது சுற்றுலா!...

(பயணக்கட்டுரை) திருமதி கலைவாணி ஏகானந்தராசா





சுற்றுலா பயணம் 2024 டிசம்பர் 31 ம் திகதி அன்று அவுஸ்திரேலியா சென்றடைந்தோம். 23 மணிநேர பயணம். விமானநிலையத்தில் எந்த வித கெடுபிடிகளும் இருக்கவில்லை. நாம் அவுஸ்திரேலிய சட்டப்படி எந்தப் பொருட்களையெல்லாம் அந்த நாட்டுக்குள் கொண்டு செல்லக்கூடாதோ அவற்றையெல்லாம் தவிர்த்து மிக அவதானமாக உடைகளையும் சாக்லேட் வகைகளையும் மட்டும் எடுத்துச் சென்றிருந்தோம்.

பயணத்தின்போது கொடுக்கப்பட்ட உறுதிப் பத்திரத்தில் நாம் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றியும் நாம் தங்கப்போகும் விலாசங்கள் போன்ற விபரங்களையும் சரியாக கொடுத்திருந்ததால் மிக விரைவாக விமான நிலையத்திலிருந்து வெளியேறினோம். 31ம் திகதி இரவு 11 மணி யளவில் வாணவேடிக்கை பார்பதற்காக சிட்னி ஷாபர் பிரிஜ் (Harbour Bridge- 1.148 Meeter) பக்கமாக சென்றோம். உள்ளே செல்லமுடியாத சன நெரிசல். வானுயர்ந்த கட்டிடங்களுக்கு மத்தியில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் நின்று பார்த்தோம்.

வண்ண வர்ண ஜாலங்கள். நாலாபக்கமு(ம் சிதறிய பலநிற வர்ணங்கள் வானத்தில் கோலங்கள் போட்டன. அரை மணி நேரம் அதிசயமாகவும் ஆனந்தமாகவும் பார்த்து ரசித்தோம்.. தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு 1.01.2025 அதிகாலை 3 மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம்.அடுத்த நாள் சிட்னி ஒலிம்பிக் பார்க் (Sydney Olimpic park) சென்றோம். மிக நீளமான உயரமான (134 meeter) துறைமுகப் பாலத்தின் கீழாக ஒன்றரை மணி நேரம் கப்பலில் பயணம் செய்தோம். அழகான கரையோரப் பகுதிகளையும் வானத்தின் அழகையும் ரசித்தோம்.

சிட்னி துறைமுகத்தில் உள்ள பென்னெலோங் முனையில் ஒப்ரா மாளிகை(Opera hause ) என்றழைக்கப்படும் உலக பிரசித்திபெற்ற அந்த கட்டிடத்தை சென்று பார்த்தோம்.1959 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக் கட்டிடம் 1973 ம் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டது. நவீனத்துவமாகவும், உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது. கொங்கிறீட்டு வளை கூரைகளால் மூன்று கூறுகளாக அமைக்கப்பட்டிருந்தது. கடல் மட்டத்துக்கு மேல் மேடை போன்ற அமைப்பின் மேல் அமைந்த இக் கட்டிடங்களை 588 கங்கிறீட் தூண்கள் இக்கட்டிடத்தை தாங்குகின்றன. வெளித்தோற்றமே கண்ணைப்பறிக்கும் வகையில் பளிங்கு கற்கள் பதிக்கப்பட்டிருந்தது.

கூரையானது பளபளப்பான வெள்ளை இள மஞ்சள் ஓடுகள் பதிக்கப்பட்டிருந்தது. உள்ளே பல மண்டபங்கள் உள்ளன. 2679 இருக்கைகள் கொண்ட கச்சேரி மண்டபம், 544 இருக்கைகள் கொண்ட நாடக அரங்கம் 400 இருக்கைகள் கொண்ட கலைக்கூடம் 1500 இருக்கையுடன் உணவு விடுதி என பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் காணப்பட்ட கட்டிடம் வியப்பை தந்தது. மக்கள் கூட்டம் படப்பிடிப்பிலும் உல்லாசமாக உணவு உண்பதிலும் ஈடுபட்டிருந்தனர். நாம் இங்கு சென்றபோது காலநிலை வெப்பம் 38 பாகையாக இருந்தது. நாமும் இந்த துறைமுகம் அருகே உணவருந்தி குளிர்பானங்கள் (Ice creem) உண்டு களித்தோம்.

தொடரும்.....

# 9 வது இடத்தில் வட மாகாணம்?.......

**இலங்கையிலுள்ள 9 மாகாணங்களில் வடக்கு மாகாணம் சனத்தொகையில் கடைசி இடத்தை அதாவது ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.அதற்கான காரணங்கள்.**

01. போரில் இறப்பு. குறிப்பாக இறுதிப் போரில் இறப்பு அதிகம்.போரில் ஏராளம் ஆண்கள் இறந்தமை.

02. போரினால் காணாமல் போனோர் தொகை.

03. இந்தியா உட்பட வளர்ந்த நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் தொகை சென்றமை இங்கு தான் அதிகம்.

04.மேல் மாகாணத்தை நோக்கிப பெருமளவிலும் ஏனைய மாகாணங்களை நோக்கிச் சிறிய அளவிலும் இடம் பெயர்ந்தமை.

05. மத்திய கிழக்கு நாடுகளை நோக்கித் தொழில் வாய்ப்புக்காகச் சென்றமை.

06.ஆண்,பெண் திருமண வயது தள்ளிப் போதல் .வயது 30 ஐக் கடந்து திருமணம் செய்வோர் அதிகம். இதனால் குழந்தை பெறும் எண்ணிக்கையில் வீழ்ச்சி.

**தொடர்ச்சி 57ம் பக்கம்**



## புற்றுநோய் அபாயத்தை குறைக்கும் டீ- தினமும் குடிக்கலாமா?

பொதுவாக காலை அல்லது மாலை வேளைகளில் தேநீர் குடிப்பது வழக்கம்.இது சுவைக்காகவும்,களைப்பிற்காகவும் சிலர் குடிப்பார்கள். இன்னும் சிலர் தன்னை உற்சாகமாக வைத்து கொள்ள தேநீர் விரும்பி குடிப்பார்கள்.

லெமன் டீ, க்ரீன் டீ ஆகிய தேநீர் வகைகள் குடிப்பது உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது. அதே போன்று மஞ்சள் தேநீரை அருந்துவதால் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்கள் குணமாகும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இந்த தேநீர் மஞ்சள் கலந்து தயாரிக்கலாம், அத்துடன் சுவைக்காக மிளகு மற்றும் தேன் சேர்த்து கொள்ளலாம்.

அந்த வகையில் மஞ்சள் தேநீர் குடிப்பதால் கிடைக்கும் பலன்கள் தொடர்பில் தொடர்ந்து பதிவில் பார்க்கலாம்.

மஞ்சள் தேநீரால் கிடைக்கும் பலன்கள்

1. மஞ்சள் கலந்து தயாரிக்கப்படும் தேநீரில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள், குர்குமின், மாங்கனீசு, இரும்பு, தாமிரம் ஆகிய சத்துக்கள் உள்ளன. இவை உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

2. மூட்டு வலி அல்லது வீக்கம் பிரச்சினையால் அவஸ்தைப்படுபவர்கள் மஞ்சள் கலந்து தேநீர் குடிக்கலாம். இதில் ஊட்டசத்துக்கள் மூட்டுவலியை சரிச் செய்கிறது.

3. மஞ்சள் டீ போன்று க்ரீன் டீ, ரெட் டீ, லெமன் டீ ஆகியவற்றையும் குடிக்கலாம். இதனால் புற்றுநோய் அபாயம் குறைக்கப்படுகின்றது என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

4. கெட்ட கொலஸ்ட்ராலை நீக்க உடலை சிலிம்மாக மாற்றும் ஆற்றல் மஞ்சள் தேநீருக்கு உள்ளது.

5. கீல்வாதத்திலும் மஞ்சள் தேநீர் முக்கிய இடம் பிடிக்கிறது. இப்படியான பிரச்சினையுள்ளவர்கள் மஞ்சள் கலந்து தேநீர் குடிக்கலாம்.



# இனிப்பான தேனில் இருக்கும் ஏராளமான மருத்துவ குணங்கள்........

தேன் மருத்துவ குணங்கள் அதிகம் கொண்ட ஒரு உணவாகும். இதில் வைட்டமின் பி1, பி2, பி3, பி5, பி6, சி, இ முதலிய வைட்டமின்களும் மற்றும் அயோடின்,கால்சியம், கந்தகம், இரும்பு, சோடியம், மெக்னீசியம், தாமிரம், குளோரின், பொட்டாசியம், சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், உப்பு, குளுகோஸ், லெவுகோஸ், லாக்டிக் அமிலம், டார்டாரிக் ஆசிட், சிட்ரிக் அமிலம், க்ளாரிக் அமிலம் போன்ற சத்துப்பொருள்களும் உள்ளன.

தேனை குழந்தைகள் பெரியவர்கள் பாலூட்டும் தாய்மார்கள், என அனைவரும் சாப்பிடலாம். இது இயற்கையாக கிடைக்ககூடிய ஒரு உணவு. தற்போது உள்ள குளிர்காலத்தில் சில நோய்கள் நம்மை அண்டும். இந்த நோய்களை விரட்ட தேனை எப்படி பயன்படுத்தலாம் என்பதை இந்த பதிவில் பார்க்கலாம்.

தேனின் நன்மைகள்

குளிர்காலத்தில் தொற்று நோய்கள் அதிகமாக வரும். இந்த நேரத்தில் காய்ச்சல், சளி, இருமல் அதிகமாக வரும். தினமும் உட்கொள்ளும் உணவில் தேனை சேர்த்துக்கொள்ள வேண்டும். தேனில் அதிகமான ஆன்டி-ஆக்ஸி டன்ட்கள் நிறைந்துள்ளன, இதனால் தொற்று நோய் பாதிப்புகள் ஏற்படாமல் நம்மை கொடிய நோய்களில் இருந்து பாதுகாக்கும். குளிர்காலத்தில் சளி, இருமல், தொண்டை புண் அல்லது சுவாச பிரச்சனைகளுக்கு இது மருந்தாக உதவும். தேன் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பயன்படும்.

தினமும் காலை ஒரு குவளை வெதுவெதுப்பான நீரில் ஒரு ஸ்பூன் தேன் மற்றும் இரண்டு ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து குடித்து வர வேண்டும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க முடியும். அடிக்கடி உடல் வலியால் இருப்பவர்கள் இந்த தேனை தொடர்ந்து உணவில் சேர்ப்பது நன்மை தரும்.

துளசி சாறுடன் தேன் சேர்த்து சாப்பிட்டால் நெஞ்சில் தேங்கியிருக்கும் சளி நீங்கும். இதன்மூலம் நீண்ட நாட்களாக இருந்து வரும் இருமல் பிரச்சனைகள் படிப்படியாக குறையும் தேனை பால், மஞ்சள் தூள், மிளகு தூள் மற்றும் தேன் சேர்த்து தினமும் அருநதி வந்தால் வரட்டு இருமல் இல்லாமல் போகும். இரவில் சரியாக உறக்கம் வரவில்லை என்றால் இரவில் உறங்கச் செல்லும் முன்பாக ஒரு கிளாஸ் பாலில் தேன் கலந்து வெதுவெதுப்பாக அருந்தி வந்தால் நல்ல உறக்கம் கிடைக்கும்....





## பாப்பரசர் பிரான்சிஸ் மறைந்தார்
## உலக கத்தோலிக்க மக்களின் பெருந்தலைவர்
## உலக மக்களால் போற்றப்பட்ட பாப்பரசர்
## பிறப்பு 17.12.1936 - மறைவு 21.04.2025
## பதவிக்காலம் 2013.03.13 - 2025.04.21
## 12 வருடங்கள் 01 மாதம் 08 நாட்கள்

உலக கத்தோலிக்க சமயத்தவர்களின் அதி உயர் பதவி வகித்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் இன்று 21.04.2025 அதாவது ஈஸ்டர் பெருநாளில் காலமான செய்தி உலக மக்களிடையே பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக கத்தோலிக்கர்கள் மாத்திரமல்ல அனைத்து மதம், மொழி, இனம், நிற மக்களின் மதிப்பிற்குரியவராக விளங்கிய பாப்பரசர் தனது 88 வது வயதில் இறைவனடி சேர்ந்தார் என்பது உலகம்வாழ் அனைத்து மக்களையும் கவலை கொள்ள வைத்துள்ளது. அவர் பற்றிய சிறு குறிப்பைப் பார்ப்போம்.

அவருடைய வம்சாவழியினர் இத்தாலி நாட்டவராயினும் இவர் ஆர்ஜன்தீனா நாட்டில்தான் பிறந்து வளர்ந்தவர். அவருடைய பெற்றோர் பெயர்கள் மாரியோ ஹோசே பெர்கோலியோ, ரெஜீனா மரியா சிவோரி ஆகும். மாரியோ ஹோசே தொடருந்துத் துறையில் வேலை பார்த்தார். ரெஜீனா மரியா வீட்டுப்பொறுப்பைப் பார்த்துக்கொண்டார்.

உள்நாட்டுப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்றபின் ஆர்ஜன்தீனா புவேனோஸ் ஐரேஸ் பல்கலைக்கழகத்தில் மேற்கல்வி பயின்ற இவர் வேதியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார் பின்னர் தம்மைக் கடவுள் இயேசு சபைத் துறவறக் குருவாக அழைப்பதை உணர்ந்த அவர் இயேசு சபையில் 1958இல் துறவு நிலையில் சேர்ந்தார்.

இவர் இயேசு சபையில் புகுமுகத் துறவியாகச் சேர்ந்தது 1958, மார்ச்சு 11ஆம் நாள் ஆகும். இயேசு சபைக் குருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றார். 1964இலிருந்து மூன்று ஆண்டுகள் சாந்தா புவேனோஸ்ஐரேஸ் நகர்க் கல்லூரியில் இலக்கியம், உளவியல் ஆகிய பாடங்கள் கற்பித்தார். 1967இல் இறையியல் படிப்பை முடித்த அவர் 1969, டிசம்பர் 13ஆம் நாள்,

தமது 33ஆம் வயதில் இயேசு சபையில் குருத்துவப் பட்டம் பெற்றார் புவேனோஸ் ஐரேஸ் உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயராக பணிபுரிந்தார். அவருக்கு 1992, யூன் 27ஆம் நாள் ஆயர் பட்டம் அளிக்கப்பட்டது.

- 1998, பெப்ருவரி 28ஆம் நாள் ஆயர் புவேனோஸ் ஐரேஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராயர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

- 2001, பெப்ருவரி 21ஆம் நாள் கர்தினால் பதவிக்கு உயர்த்தினார்கள்.

-இவர் புவேனோஸ் ஐரேஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராயராகப் பணியாற்றியவர்.

இவர் தம் தாய்மொழியாகிய ஸ்பானியம், தம் பெற்றோரின் பூர்வீக மொழியான இத்தாலியம் மற்றும் இலத்தீன், யேர்மானியம், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகளை நன்கு பேச அறிந்தவர்

இவர் 2013, மார்ச்சு 13ஆம் நாள் கத்தோலிக்க திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் வத்திக்கான் நகரின் தலைவரும் ஆவார்

கத்தோலிக்க திருச்சபையின் 266 ஆம் திருத்தந்தை ஆவார்.

1200 ஆண்டுகளில் ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்பும் இவருக்கு உண்டு

இவர் தனது வாழ்நாளில் சமயம், ஆன்மீகம், கல்வி, சமூகம் சார்ந்த 12 நூல்கள் எழுதியுள்ளார்.

குறிப்பாக, இவர் ஏழை மக்களுக்கு உதவியது, தம் வாழ்வில் எளிமையைக் கடைப்பிடித்தது, ஆஜர்தீனாவின் சேரிகளில் வாழ்ந்த மக்களைச் சென்று சந்தித்து அவர்களோடு தோழமை கொண்டாடி, அவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்துகொண்டது போன்ற நல்ல காரியங்களையும் செய்திருக்கிறார்.

அத்துடன் உலகப் போர் தவிர்ப்பு, யுத்தம் இல்லா பூமி, உலக அகதிகள் வறியவர்கள், ஒடுக்கப்பட்டோர், பெண்கள், குழந்தைகள், நலிந்தொர், நிறவெறி, மதவெறி போன்ற விடயங்களில் அதிக ஈடுபாடுகொண்டு தமது மதம் ஊடாக பல்வேறு பங்களிப்புகளைச் செய்து வந்தபடியால் உலகின் அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்ட பாப்பரசர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இன்றைய உலகளாவிய 1.2 பில்லியன் கத்தோலிக்க மக்களைத் தலைவராகக் பொண்டிருந்த இவரை 2013, டிசம்பர் 11ஆம் நாளில், உலகப் புகழ்பெற்ற ”டைம் வார இதழ்” (வுஇஅந ஆயபயணைநெ) திருத்தந்தை பிரான்சிசை 2013ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று அறிவித்துக் கவுரவப்படுத்தியுள்ளது. உலகம்வாழ் அனைத்து மக்களையும் வழிநடத்துபவராகத் திருத்தந்தை பிரான்சிஸ் தனது வாழ்நாளை அர்ப்பணித்து விளங்கியவர் 21.04.2025 அதாவது ஈஸ்டர் பெருநாளில் மறைந்த செய்தி நம் எல்லோரையும் கவலை கொள்ள வைத்துள்ளது.

ஓம் சாந்தி!...அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுவோம்!...

# உலக சுற்றுச்சூழல் தினம்!..

செல்வி சாமினா சிவதாசன் (எசன்)



மனிதர்கள் ஆகிய நாம் பல நாடுகளில், பல விதமாக இயற்கையை மையமாக வைத்துக்கொண்டு பல தினங்களை கொண்டாடிவருகின்றோம். அந்த வகையில் பெரும்பாலான உலக நாடுகளில் ஆண்டுதோறும் ஆனி மாதம் 5ம் திகதி "உலக சுற்றுச்சூழல் தினம்" (World Environment Day) என்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் என்பது மனிதர்கள், உயிரினங்கள் மற்றும் இயற்கை அங்கங்கள் ஒன்றிணைந்து இயங்கும் ஓர் மண்டலம் ஆகும். இது உயிரினங்கள் வாழக்கூடிய நிலத்தையும், நீரையும், காற்றையும், ஒளியையும், வெப்பத்தையும் மற்றும் மனிதர்களால் வாழ்வதற்கு உருவாக்கப்படுகின்ற அனைத்து பொருட்களையும் உள்ளடக்கியுள்ளது. நாம் சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர், பயிரிடும் மண் மற்றும் அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் அனைத்து வளங்களும் எம்மைச் சுற்றி இருக்கும் சூழலின் அங்கங்களாக கருதப்படுகின்றது.

மனிதனுடைய ஆதிக்கப் போக்கினால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப் பூமியின் விலை மதிக்க முடியாத சொத்துக்களான இயற்கை வளங்களை அழித்து கொண்டிருக்கின்றோம். இப்பூமியில் வாழும் மக்களின் செயல்பாடுகளின் காரணமாக கார்பனீரொட்சைட் (CO 2)வெளியேற்றம் அதிகரித்து, அதன் காரணமாக பூமியின் வெப்பநிலையும் அதிகரித்துள்ளது. இதைத்தொடர்ந்து துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி கடல்மட்டம் அதிகரித்து தீவிரமான விளைவுகளை கொண்டுவருகின்றது.

அத்துடன் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் உலகநாடுகளின் அபிவிருத்தி கொள்கைகள் இயற்கை வளங்களை வெகுவாக சுரண்டிவருகின்றது. இவை அனைத்தும் சுற்றுச்சூழல் மாசடைவின் விளைவாகவே காணப்படுகின்றது. இப்படிப்பட்ட மோசமான மாற்றங்களால் நமது வருங்கால சந்ததியினரை வெகுவாக பாதிக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமில்லை.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதனை பாதுகாக்கும் நோக்குடன் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் 5ம் திகதி "உலக சுற்றுச்சூழல்

தினம்" (World Environment Day)உலகத்தின் பெரும்பாலான நாடுகளில் கொண்டாடப்படுகிறது. இது சுற்றுச்சூழலுக்கான விழிப்புணர்வையும், பாதுகாப்புக்கான செயல்பாடுகளையும் ஊக்குவிப்பதற்கு ஒரு முக்கியமான நாளாக கருதப்படுகின்றது.

1972ம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் திகதி சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோம் (Stockholm) நகரில் முதலாம் உலக சுற்றுச்சூழல் மாநாடு நடைபெற்றது. இத்தினத்தையே ஐக்கிய நாடுகளின் (United Nations) சுற்றுச்சூழல் பிரிவு "உலக சுற்றுச்சூழல் தினம் " என்று அறிவித்தது. இன்று சுற்றுச்சூழல் தொடர்பான சிக்கல்களை உலகெங்கும் கொண்டு செல்லும் நோக்குடன் இந்நாள் ஆண்டுதோறும் புதிய தனித்துவமான கருப்பொருட்களுடன் கொண்டாப்படுகிறது.

உதாரணமாக 2020ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தினத்துக்கான கருப்பொருளாக "பல்லுயிர்ப் பெருக்கத்தை" ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருந்தது. இவ்வருடம் 2025 ஆம் ஆண்டு "பிளாஸ்ரிக்களால் ஏற்படும் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்" (Ending Plastic Pollution) என்னும் கருப்பொருளுடன் தென் கொரியா (South Korea) நாட்டின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

எனவே, மனித குலத்திற்கு மகத்தான நன்மைகளை செய்து வருகின்ற பூமியையும் அதன் இயற்கை வளங்களையும் தீங்கு விளைவிக்கும் எல்லாவற்றிலிருந்தும் காப்பாற்றுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு சுற்றுச்சூழலை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு வெகுமதி மிக்க பரிசாக கையளிப்போம். ..........................................................................................

## 51ம் பக்கத் தொடர்ச்சி

07. திருமண வயது தள்ளிப் போவதற்கு சாதி,சமயம், நிறம், அழகு, பிரதேசம், பணம், சீதனம், சொத்து, தொழில்,அந்தஸ்து பார்த்துத் திருமணம் செய்தல் பிரதான காரணம்.

08. சாதகம் பார்த்துத் திருமணம் செய்தல். அண்மைக்காலமாகச் சூரியன் செவ்வாய் எனப் புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்துச் சாத்திரிமார் சாதனை. இதனால் பொருத்தங்கள் இலகுவாகப் பொருந்தவில்லை.

09. திருமண விடயத்தில் கடும் நுணுக்கம் பார்த்தல். இதனால் திருமணம் ஆகாதோர் தொகை அதிகரித்துச் செல்லுதல்.

10. குறைந்த பிள்ளைகளை விரும்பும் மனோபாவம். உத்தியோகம் பார்ப்போர் ஒரு பிள்ளை பெறுதல் போதுமானதென்ற மனோபாவம் அதிகரித்துள்ளது.

11.வயது 30 ஐ கடந்து திருமணமாகியவர்கள் குழந்தைப் பேறைத் தாமதிக்க மருந்துக் குளிசைகள் பாவித்தல். இதனால் குழந்தையற்றோர் தொகை அதிகரிக்கிறது. இப்படிப் பல்வேறு காரணங்களால் வடமாகாணத்தின் சனத்தொகை குறைந்து வருகின்றது...



## தந்தை பெரியாரின் துணைவி மணியம்மை பற்றியது...

மண் இதழ் 230 பங்குனி-சித்திரை 2025 இதில் 58 பக்கத்தில் வெளியான மணியம்மைபற்றிய “வானமும் பூமியும் இணைந்தால்” என்ற கட்டுரையில் எழுத்தாளர் ஒருவரால் பிழையான தகவல்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக வாசகர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார். அக்கட்டுரையை ஆசிரியரான நான் ஆழமாக வாசித்தபோது அதில் தவறுகள் காணப்பட்டவை உண்மைதான். தவறுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன். அம்மையார் பற்றி சரியான தகவல்களை இதில் பிரசுரிக்கின்றோம்...

1) “பெண்களின் உரிமை, ஆண்களின் புரிதலோடு இணைந்தால் தான் சமூக வளர்ச்சி முழுமை பெறும்“ இப்படித் தந்தை பெரியார் எங்கும் குறிப்பிடவில்லை. “எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைக்குமா? அப்படிக் கிடைத்தால் கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது“ என்று சொல்லி பெண்களே தமது விடுதலைக்காகப் போராட வேண்டும் என்பதை தந்தை பெரியார் வலியுறுத்தியுள்ளார். ஆண்களின் புரிதலை தந்தை பெரியார் எங்கும் கோரவில்லை.

2) தந்தை பெரியாரின் முதல் மனைவியின் பெயர் அங்கம்மாள்.இது ஒரு மிகப் பெரிய தகவற் பிழை. தந்தை பெரியாரின் முதல் மனைவியின் பெயர் நாகம்மை. அங்கம்மாள் என்று ஒரு பாத்திரம் தந்தை பெரியாரின் வாழ்க்கையில் கிடையாது. 1998,ல் மதுரையில் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காவலர்களால் கணவனும் அடித்துக் கொல்லப்பட்டதோடு வன்புணர்வுக்கும் ஆளாகிய பெண்ணின் பெயர்தான் அங்கம்மாள். அன்றைக்கு இந்தச் சம்பவம் தமிழ்நாட்டை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

3) “பெரியாரின் முதல் மனைவியும் பெண்களின் கல்விக்கும், சுயவிடுதலைக்காகவும் போராடியவர். அவரை தந்தை பெரியார் முன்னிலைப்

படுத்தவில்லை.“இதுவும் தவறான கருத்து. ஆரம்பத்தில் அரசியலில் ஈடுபாடு இல்லாமல் கடவுள் நம்பிக்கை மிகுந்த ஒரு குடும்பப் பெண்மணியாகவே நாகம்மையார் இருந்தார். தந்தை பெரியார்தான் நாகம்மையாரை களத்திற்கு அழைத்து வந்தார். பெரியார் சிறை சென்ற நேரங்களில் நாகம்மையார் அந்தப் போராட்டத்தை தொடர்ந்தார். நாகம்மையார் பற்றி சிறப்பான நூல்கள் நிறைய இருக்கின்றன. யாரும் அவரை பின்தள்ளவில்லை.

“பெரியார் தனது இரண்டாவது திருமணமாக 13 வயதான மணியம்மாளை மணந்தார்“.எல்லாப் பிழைகளுக்கும் சிகரம் வைத்தால் போல் இருக்கின்ற மாபெரும் தகவற்பிழை இது. மணியம்மையார் தந்தை பெரியாரை முதலில் சந்திக்கின்ற போது அவருடைய வயது 26. பெரியாருடன் திருமணம் நடந்த பொழுது அவர் 30 வயதைக் கடந்திருந்தார்.

கட்டுரையானது முதலில் தகவற் பிழைகளை தருகிறது. பின்னர் அந்தப் பிழைகளை வைத்துக் கொண்டு பெரியாரை விமர்சிக்கின்றது. மிகப் பெரிய கேலிக்கூத்து இது. மணியம்மையார் என்னும் இரும்புப் பெண்மணி 1917இல் மார்ச் மாதம் பத்தாம் நாள் பிறந்தார். மணியம்மையாருடைய தந்தையின் பெயர் கனகசபை. மணியம்மையாரை பெற்ற தந்தையாகவும், வளர்த்த தந்தையாகவும் கனகசபை அவர்களே இருந்தார்.

மணியம்மையார் வளர்ந்தார். வேலூரில் உயர்நிலைக்கல்வியை முடித்தார். தமிழ் இலக்கியத்தில் புலவர் பட்டமும் பெற்றார். இத்தனைக்குப் பிறகும் திருமணம் ஆகும் வரை ஒரு பெண்ணை யாரோ ஒருவர் தொடர்ந்து வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பது கேவலமான ஆணாதிக்கத் சிந்தனை.

படிப்பை எல்லாம் முடித்து விட்டு தன்னுடைய 26வது வயதில் (1943) தந்தை பெரியாரை பார்த்துக் கொள்ளும் நோக்கோடு மணியம்மையார் வந்தார். தந்தை பெரியார் பல்வேறு நோய்களால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நீண்ட காலம் உயிர் வாழமாட்டேன் என்பது தந்தை பெரியாரின் எண்ணமாக இருந்தது. மணியம்மையார் பெரியாருக்கு பக்க பலமாக நின்றார். மாநாடுகளில் உரையாற்றினார். குடியரசு, விடுதலை போன்ற இதழ்களில் மணியம்மையாருடைய கட்டுரைகள் வந்தன. தமிழில் இலக்கியம் படித்த மணியம்மையாருக்கு பேசவும், எழுதவும் யாரும் கற்றுக் கொடுக்க வேண்டியிருக்கவில்லை.

மறுபுறம் திராவிடர் கழகத்திற்குள் பல்வேறு முரண்பாடுகள் வந்த வண்ணம் இருந்தன. திராவிடர் கழகத்தின் அடுத்தக் கட்டத் தலைவர்களாக இருந்த அறிஞர் அண்ணா, ஈவிகே சம்பத் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க விடயங்களில் பெரியாருக்கு மாறுபாடான நிலைப்பாடுகளை எடுத்தார்கள். தேர்தல் அரசியலில் ஈடுபட வேண்டும் என்கின்ற எண்ணமும் வளரத் தொடங்கி இருந்தது.

இப்படியான ஒரு சூழலில் தந்தை பெரியாருக்கு மணியம்மையார் நம்பிக்கை மிகுந்த பக்கபலமாக நின்றார். தனக்குப் பின் கழகமும், கழகத்தின் சொத்துக்களுக்கான நிர்வாகமும் மணியம்மையாரிடம்

போக வேண்டும் என்று பெரியார் விரும்பினார். இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தார்கள்.

மணியம்மையாருடைய இந்த முடிவு துணிச்சல் மிக்கது. தன்னுடைய வாழ்வில் திருமணம் தேவையில்லை என்று கழகத்திற்காக வாழ்ந்த மணியம்மையார் தன்னுடைய 32வது வயதில் (1949) திருமணம் செய்வதற்கு சம்மதித்தார். இதன் மூலம் தன்மீது எல்லோரும் பெரும்பழியை சுமத்துவார்கள் என்பது மணியம்மையாருக்கு தெரியும். தனிவழி போக விரும்புபவர்கள் இதை வாய்ப்பாக பயன்படுத்தலாம் என்பதும் மணியம்மையாருக்க தெரியும்.

ஆனால் கொள்கைக்காகவும், கழகத்திற்காகவும் எல்லாப் பழிகளையும் ஏற்பதற்கு மணியம்மையார் முன்வந்தார். தந்தை பெரியாரை திருமணம் செய்தார். விரைவில் இறந்து விடுவார் என்று கருதப்பட்ட தந்தை பெரியாரை நல்ல முறையில் பராமரித்தார். தந்தை பெரியார் மேலும் 25 ஆண்டுகள் வாழ்ந்தார். தந்தை பெரியாருக்கு பின்னர் திராவிடர் கழகத்தின் தலைமைப் பதவியை பொறுப்பேற்றார். பல்வேறு போராட்டங்களை நடத்தினார இன்றுள்ள சில தலைவர்களைப் போன்று சிறை செல்ல மணியம்மையார் என்றும் அஞ்சியது இல்லை. பலமுறை கைது செய்யப்பட்டு மாதக் கணக்கில் சிறையில் இருந்தார்.

இந்திராகாந்திக்கு சவால் விட்டு இராமலீலாக்கு எதிர்வினையாக தமிழ்நாட்டில் இராவணலீலா நடத்தி இராமன் உருவப் பொம்மையை தன்னுடைய கைகளால் மணியம்மையார் தீயிட்டுக் கொளுத்தினார். தமிழ்நாட்டில் உண்மையான இரும்புப் பெண்மணியாக மணியம்மையார் திகழ்ந்தார்.

.....................................................................................................................................

## 2025 ஆம் ஆண்டிற்கான ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது.

குறித்த பட்டியலில் இந்தியா (India) மற்றும் ஹொங்ஹொங் (Hong Kong) மூலமும் சில முக்கிய தொழிலதிபர்கள் இடம் பிடித்துள்ளனர்.

இதனடிப்படையில், 2025 இல் ஆசியாவின் டொப் 10 பணக்காரர்கள்,

1. முகேஷ் அம்பானி (இந்தியா) - $86.9 பில்லியன்
2. ஜோங் ஷான்ஷான் (சீனா) - $56.0 பில்லியன்
3. கவுதம் அதானி (இந்தியா) - $54.7 பில்லியன்
4. மா ஹுடெங் (சீனா) - $53.3 பில்லியன்
5. ஜாங் யிமிங் (சீனா) - $45.6 பில்லியன்
6. தடாஷி யனை ரூ குடும்பம் (ஜப்பான்) - $45.1 பில்லியன்
7. லெய் ஜுன் (சீனா) - $42.6 பில்லியன்
8. காலின் ஹுஆங் (சீனா) - $40.0 பில்லியன்
9. லீ கா-ஷிங் (ஹொங்ஹொங்) - $38.3 பில்லியன்
10. ராபின் செங் (ஹொங்ஹொங்) - $37.6 பில்லியன்

மொத்தம் பத்து பேரில் ஐந்து பேர் சீனாவைச் சேர்ந்தவர்கள், இதன் மூலம் சீனா ஆசியாவின் முதலீட்டு வளர்ச்சியில் முன்னிலை வகிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது






## ஜேர்மனியின் புதிய அதிபர் (கான்ஸிலர்) ஜசிம் பிரிட்றிஸ் மேர்ஸ் பதவி ஏற்பு...

Joachim-Friedrich Martin Josef Merz (* 11. November 1955 in Brilon) ist ein deutscher Politiker (CDU). Er ist seit dem 6. Mai

யேர்மனியின் புதிய அதிபராக பிரிட்றிஸ் மேர்ஸ் என்பவர் 06.05.2025 அன்று பதவி ஏற்றுள்ளார். இந்த அரசாங்கத்தில் CDU, CSU, SPD கட்சிகள் சேர்ந்து கூட்டரசாங்கமாக பதவி ஏற்றுள்ளது. இந்த அமைச்சரவையில் 3 கட்சிகளையும் சேர்ந்த மந்திரிமார்கள் பதவி ஏற்றுள்ளனர். அந்த மந்திரிசபையின் விபரங்களையும் இங்கே காணலாம்

- Vizekanzler und Finanzminister: Lars Klingbeil (SPD)
- Kanzleramt: Thorsten Frei (CDU)
- Wirtschaft und Energie: Katherina Reiche (CDU)
- Arbeit und Soziales: Bärbel Bas (SPD)
- Inneres: Alexander Dobrindt (CSU)
- Justiz und Verbraucherschutz: Stefanie Hubig (SPD)
- Auswärtiges Amt: Johann Wadephul (CDU)
- Verteidigung: Boris Pistorius (SPD)
- Digitalisierung und Staatsmodernisierung: Karsten Wildberger (parteilos)
- Wohnen, Stadtentwicklung und Bauwesen: Verena Hubertz (SPD)
- Verkehr: Patrick Schnieder (CDU)
- Umwelt,Klimaschutz,Naturschutz und nukleareSicherheit:CarstenSchneider(SPD)
- Gesundheit: Nina Warken (CDU)
- Bildung und Familie: Karin Prien (CDU)
- Forschung und Raumfahrt: Dorothee Bär (CSU)
- Wirtschaftliche Zusammenarbeit und Entwicklung: Reem Alabali-Radovan (SPD)
- Landwirtschaft: Alois Rainer (CSU)
- Staatsminister für Kultur und Medien: Wolfram Weimer (parteilos)
- Staatsministerin für Sport und Ehrenamt: Christiane Schenderlein (CDU)

# பத்துக் கட்டளைகள்?...

**பிள்ளைகள் அனைவரையும் திருமணம் முடித்துக் கொடுத்து, பணியிலிருந்து ஓய்வு பெற்ற மூத்த குடிமக்கள்அல்லது இனி மக்கள், பேரப்பிள்ளைகளோடு வாழ இருப்பவர்கள் கீழ்கண்ட பத்து கட்டளைகளை பின்பற்றினால் வாழ்வின் கடைசி பக்கங்கள் மிகவும் சுவாரசியமாகவும் இனிமையாகவும் இருக்கும்.. .**

01) எந்த நிலையிலும் உங்கள் வாழ்வின் கடைசி பகுதியில் உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ நினைக்காதீர்கள். (உங்கள் சுதந்திரம் அனைத்தும் பறிபோகும்)

02) உங்கள் பேரக்குழந்தைகளின் மேல் உங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை மறக்கவேண்டாம். குழந்தை வளர்ப்பில் மகனுக்கோ மகளுக்கோ எவ்வித அறிவுரையும் சொல்லாதீர்கள். உங்கள் அறிவுரை மற்றும் அனுபவங்களை அவர்கள் மதிக்க மாட்டார்கள்.

03) விலகியே இருங்கள் உறவுகள் இனிமையாகத் தான் இருக்கும். என் பிள்ளை என்பிள்ளை என பதறாதீர்கள். சிறகு முளைத்த பறவைகள் அவர்கள் என்பதை நினைத்து அமைதியாக இருங்கள்.

04) பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. கையில் பணம் இல்லாவிட்டால், உங்கள் பிள்ளைகளிடம் மதிப்பும், மரியாதையும், உரிமையும் உங்களுக்கு நிச்சயம் இருக்காது. சேமிப்பு மற்றும் உங்கள் சுய சம்பாத்திய சொத்துக்களை உயிருடன் இருக்கும் வரை யாருக்கும் பகிர வேண்டாம். முழுவதும் பகிர்ந்தால், நீங்கள் நிற்க வேண்டியது நடுத்தெருவில் தான்.

05) காலம் முழுதும் அவர்கள் உயர்வுக்காக பாடுபட்டு பல இழப்புகளை சந்தித்து இருப்பீர்கள். அவற்றை திரும்பத் திரும்ப சொல்லி காட்ட வேண்டாம். உங்கள் கடமையை செய்தீர்கள் அவ்வளவே.

06) கூட்டு குடும்ப வாழ்வு சிதைந்துபோன தலைமுறையில் வாழ்கிறோம் என்பதை மறவாதீர்கள். தேவைப்பட்டால், வருடம் ஒருமுறை பரிசுப் பொருட்களுடன் சென்று பேரன் பேத்திகளுடன் சந்தோஷமாக இருந்து வாருங்கள். அங்கே அதிகம் தங்க வேண்டாம்.

07) எந்த நேரத்திலும் உங்கள் மருமகள் முன் உங்கள் மனைவியை / கணவனை விட்டுக் கொடுத்து பேசாதீர்கள். உங்கள் இருவரில் ஒருவரை யார் குறைத்து பேசினாலும் எதிர்க்குரல் கொடுக்கத் தவறாதீர்கள். பிள்ளைகள் வீட்டிற்கு சென்றால், கூடவே உங்களுக்குத் தேவையான மருந்து மாத்திரை, எண்ணெய், பவுடர்,சீப்பு,சோப், போன்றவற்றை எடுத்து செல்லுங்கள்.

-

08) அவர்களின் ஆடம்பர வாழ்வை விமர்சிக்க வேண்டாம். சேமிப்பின் அவசியம் பற்றி சொல்லி அவமானப்பட வேண்டாம். அவர்கள் வாழ்வது உங்கள் வாழ்க்கை போல் போராட்ட வாழ்க்கை இல்லை,நவீன கார்பரேட் வாழ்க்கை.நீங்கள் 1000 ரூபாயை பெரிதாக நினைத்தவர்கள். அவர்கள் லட்சங்களை புரட்டி பார்ப்பவர்கள். எனவே, சூரியனுக்கு டோர்ச் அடிக்காதீர்கள்.

09) அதிக பாசம், ஆசை வைத்தால் அது மோசம். அவர்கள் குழந்தையை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். உங்களது அறிவுரைகளை தவிருங்கள்

10) உங்களை விட அறிவிலும், திறமையிலும் அவர்கள் சிறந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது,நீங்கள் முட்டாள்களாகவே நடியுங்கள். அப்பொழுது தான் பிழைப்பீர்கள்! அதிக அறிவுரைகள், இக்கால சந்ததியினருக்கு அறவே பிடிக்காது...

இனி உங்கள் எதிர்கால வாழ்க்கை உங்கள் கைகளில்தான்!...

**மயிலை ரமா - தமிழ்நாடு**

# உழைக்கும் கரங்கள்

காலையில் கிழக்கு கதிரோன்
தன் வேலையை செய்து
முடித்தான்
மாலை ஓய்வில் படுக்கை
சென்று தூங்குகிறான்
தொழிலாளர் நாளாந்தம்
வேலைக்கு சென்று திரும்புகிறான்
உழைப்பின்றேல் உயர்வில்லை
உழைக்க மனமில்லாதவன்
எவரும் உண்ணலாகாது வளமும்
வாழ்வும் உழைப்பின் வெகுமதியே
சோம்பல் அகன்றவர்க்கு பெரும் நிதி
உழைக்கும் கரங்கள் இருக்கும் வரை
இணை ஏதும் இல்லை
செய்யும்தொழில் எதுவாயினும்
உண்மை நேர்மை உழைப்பால்
உலகம் மேன்மை பெற்று
வரலாறு கிடைக்கும்
உழைப்போர் அனைவருக்கும்
தொழிலாளர் நல் வாழ்த்துக்கள்

**ஜெயா நடேசன்**

## முதிர்கன்னிகள்!..

வரதட்சணைக் கொடுமை
கல்யாணச் சந்தையில்
விலைபோகாத சரக்கு
அழகான முதிர் கன்னிகள்!..

## அவமானம்!..

நல்லது செய்ததை மறந்த
நன்றிகெட்ட மனிதரை
நாய் என்று திட்டாதீர்
நாய்களுக்கு அவமானம்!.

## சிறை!..

தந்தை மதுப்போத்தலை
திறந்து மகிழ்கையில்
மகன் புத்தகத்தை மூடி
சிறைவாசம் செல்கிறான்!..

**- சிவா -**

# யேர்மனி 'மண்' சஞ்சிகையின் வெற்றி விழா பற்றி வாசகர் கருத்துக்கள்!..

## முப்பத்தைந்தின் முன்னோடி..

ஜேர்மனியில் மண்சஞ்சிகை பிரசுரமாகி முப்பத்தைந்து ஆண்டுகளை நிமிர்வாக்கி நிறைத்த விழா எழுத்தின் மகுடமாய் , எண்ணற்ற போட்டிகளுக்கு பரிசாய், எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள் கௌரவிப்புடன், தாயகச்சிறார்களுக்கு உதவிவரும் மனிதநேய உதவியாளர்களைக் கௌரவித்தும், ஊடகப்பணியாளர்கள், சமூகசேவையாளர்கள், ஊக்குவித்து கௌரவித்தமையும் , எமைவிட்டு மறைந்த ஊடகப்பணியாளர், பொதுச் சேவையாளர்கள், எழுத்தாளர்களை நினைகூர்ந்து மதிப்பளித்ததும், மிக மிகவலுவொன்றிய நிகழ்வாக மனக்கண் உறைந்தது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கான மண்ணிதழ் வாசகர்களிடையே நடாத்தப்பட்ட மாணவர்கள், இளையவர்கள். பெரியவர்களுக்கான கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப்போட்டிகளில் பலர் பங்கேற்று பரிசில்கள் பெற்றிருந்தமை தமிழ் இன்னும் நெடுங்காலம் வாழும் என்பது நிஜமாகும். மண்ணிதழின் மனிதநேயப்பணியானது புலமும், நிலமும் ஒன்றித்து மகிழும் செயற்பாட்டின் அடித்தளமாய், செவ்வென பல காப்பகங்களுக்கு பற்பல சேவைகளை ஆற்றும் கலங்கரையாய் தொடராண்டுப் பணியில் தன்னகத்தே தனித்துவம் நிறைத்து தூயபணியின் அர்ப்பணமாய் தொடரும் ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்தி கௌரவப்படுத்தியமை விழாவை இன்னொரு படி உயர்த்தியது எனலாம்.

பிரதமவிருந்தினர், சுவீஸ்-ஜெனீவா கலை, இலக்கியப் பேரவையின் தலைவர் திருவாளர். அருந்தவராஜா சிறப்பு விருந்தினர் சுவீஸ் எழுத்தாளர் திருவாளர் பொலிகை ஜெயா அவர்களும் வேறுநாடுகளிலிருந்து வருகை தந்து சிறப்பித்தமை எழுத்தின் தகமைக்கும் மண்ணிதழின் முப்பத்தைந்து ஆண்டுகளின் தொடர் பணிக்கும் மகுடமிட்டது எனின் சாலவும் பொருந்தும் துறைசார் ஊடகவியலாளர்கள் பலரிணைந்த விழாவாகவும் பல கலை நிகழ்வுகளை உள்ளகத்தே நிறைத்தும் இளையோர்களை ஊக்குவித்து நினைவுப் பரிசுகளை வழங்கியும் சிறப்பித்தமை தாய்மொழி தமிழ் மென்மேலும் வளர்ந்திட அணியமிட்டது. நிகழ்வுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்த நிர்வாகக் குழுவினருக்கும், தம்குரல் வனப்பால் அறிவிப்பு நிகழ்வுகளை அழகுபடுத்த தொகுத்தளித்த திரு.. சி சிவவினோபன், திருமதி. சாந்தினி துரையரங்கன் அவர்களின் நெறிப்படுத்தல் திறனுக்கும் வாழ்த்துக்கள்.

விழா நிகழ்வுகளாக நடனம், பரதநாட்டியம் கும்மிநடனம், பாலர் நடனம், பாலர் பாடல், பேச்சு, மாவர்களின் பட்டிமன்றம், எழுத்தாளப் பெண்மணிகளின் நாடகம் என அனைத்து நிகழ்வுகளும் உச்சம் தொட்டன என்றே கூறலாம். பரிசுகள் வழங்கல் என்றால் யேர்மனியில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்த விழாவில் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. பொன்னாடை, பொன்மாலை, மாலை, விருது, புத்தகங்கள் அன்பளிப்புப் பொருட்கள் என பட்டியல் நீண்டே காணப்பட்டன. பரிசுகளைப் பெற்ற அத்தனைபேரும் மகிழ்ந்து பாராட்டிச் சென்றதைக் காணக்கூடியதாகவே இருந்தன.

முறைப்படி நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற அமைய ஒலி ஒளி அமைப்பாளர்கள், மண்ணிதழ் திரு .திருமதி சிவராஜா ஆசிரியரின் குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் இதுவரை 230 இதழ்களை பிரசுரித்து புலத்தில்

இடைவிடாது தொடரும் மண்சஞ்சிகை விழாவனாது வெற்றி நிறைந்த ஊடகவிழாவாக அரங்கம் கண்டது எனின் சாலவும் பொருந்தும் .

வாசகர் பலராக வருகை தந்து மண்டபத்தை நிறைத்து விழாவை ஊக்குவித்தமை காலத்தால் செய்த உதவி ஞாலத்தில் மாளப் பெரிது என உரைத்தமைக்கு ஈடாகிறது. இன்னமும் பல ஆண்டுவிழாக்களை கண்டுயர்க மண்ணிதழே! மாபெரும் எழுத்துலகே!

நன்றி

**வசந்தா ஜெகதீசன். - எழுத்தாளர் - யேர்மனி**

## ஜேர்மனி மண் சஞ்சிகையின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழா

(05. 04. 2025) டிஸ்பேர்க் நகரில் வெகு சிறப்பாக நடை பெற்றது . மண் சஞ்சிகையானது கல்வி, கலை , கலாசாரம் , சமூக மேம்பாட்டுப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. ஜேர்மனியில் பிறந்து வளர்ந்த தமிழ்ப்பிள்ளைகள் பட்டிமன்ற நிகழ்வை நடாத்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர். ஏனைய கலை நிகழ்வுகளும் அவையோர் கண்களுக்கு பெரு விருந்தளித்தன .

மண் சஞ்சிகை ஆசிரியர் திரு. சிவராஜா அவர்களின் காத்திரமான தொடர்ச்சியான எழுத்து , கலை மற்றும் மானிட நேயப் பணிகள் புலம்பெயர்ந்த தேசத்தில் தமிழைத் தொடர்ச்சியான உயிர்ப்பு மொழியாக தக்க வைத்துக் கொள்வதிலும் தாயத்தில் பல அறப் பணிகளை முன்னெடுக்கவும் உறுதுணையாக இருந்து வருகின்றமை பாராட்டுதற்குரியது. புலம் பெயர் தமிழ் இலக்கியப் பெருவெளியில் மண் சஞ்சிகை காத்திரமான ஒளி விளக்காக வரலாறுகளில் பதிவு செய்யப்படும்.

பல்கலைக்கழக ஆய்வியல் மாணவர்கள் தங்கள் பட்ட ஆய்வுக்கான விடயப் பரப்பை மண் சஞ்சிகைக்குள் உட்படுத்தும் போது புலம் பெயர் தேசத்தில் தமிழ் மொழியின் பிரயோகம் தொடர்பாக பல உணர்ச்சிகரமான பெறுபேறுகளைக் கண்டு கொள்ள முடியும் என நம்புகிறேன். அதே வேளை எதிர்கால சவால்கள் தொடர்பாக பல அனுமானங்களை ஆய்வு ரீதியாகவும் முன்வைக் முடியும் . சஞ்சிகை ஆசிரியர் திரு சிவராஜா அவர்கள் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். அவர் வாழும் போதே பாராட்டப் பட வேண்டியவர். சஞ்சிகை ஆசிரியர் ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்து தொடர்ந்து மானிடப் பணிகளில் ஈடுபட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நட்புடன்

**க.அருந்தவராஜா- எழுத்தாளர் - சுவிற்சர்லாந்து**

புலம் பெயர்ந்த மண்ணில் முப்பதைந்து வருடங்களாய் அன்னையின் மடியில் விழுந்த துளி மழையாய், காலத்தின் கரையில் கிடந்த ஓர் அரிய தவறாமல் கிடைக்கின்றது எம் கையில் ஆசிரியர் திரு. சிவராசா அவர்களின் ”மண் சஞ்சிகை”!விதைத்த சொல்லின் வேரில் எழுத்தாளர்களின் எண்ணங்கள் பூத்துக் குலுங்க, இலக்கியத்தின் இன்பம் பழுத்து நிற்க, எழுத்துகள் தேனாய் சொட்டச் சொட்ட, கவிதைகள் தீஞ்சுவையாய் மனதில் சுவைக்க ஓர் அழியாச் சுடராய் கட்டியம் கூறியபடி தவறாமல் கிடைக்கின்றது எம் கையில் ஆசிரியர் திரு. சிவராசா அவர்களின் ”மண் சஞ்சிகை”!காலத்தின் கண்ணாடியில் தமிழின் முகத்தை விளக்கும் ஓர் அறிவுக் கதிரவனாய், இனிமையின் இமயமாய், வாசகர்களின் இதயத்தில்

ஓர் அழியா நூலகம் கட்டிய இலக்கியமாய் தவறாமல் கிடைக்கின்றது எம் கையில் ஆசிரியர் திரு. சிவராசா அவர்களின் "மண் சஞ்சிகை"!காலத்தின் தேவைக்கேற்பச் சிந்தனை வானில் பறக்கும் கற்பனையின் பறவையாய், மூச்சில் ஒன்றாய் கலக்கும் காவியக் காதலின் காற்றாய்உணர்வுகளின் மேகங்களில் தோன்றும் இலக்கிய வடிவங்களாய், எல்லாரையும் வாசிக்கத் தூண்டும் ஓர் கலையரசியாய் தவறாமல் கிடைக்கின்றது எம் கையில்.

ஆசிரியர் திரு. சிவராசா அவர்களின் "மண் சஞ்சிகை"!இயந்திர வாழ்வின் சிறையில் மனம் வாடும் இக்காலத்தில், தமிழின் மணம் கமழ, எழுத்தின் எழிலாய் முத்துக்களால் தொடுக்கப்பட்ட ஓர் அழகின் மாலையாய், சொல்லின் சுகமாய் தவறாமல் கிடைக்கின்றது எம் கையில் ஆசிரியர் திரு. சிவராசா அவர்களின் "மண் சஞ்சிகை"!"தமிழ் இனி மெல்லச் சாகும்"எனும் சபிப்போரின் குரலை முடக்கி, அவர்கள் நாக்கில் சம்மட்டியால் அடித்து, "எம் தமிழ் என்றும் அழியாது!"எனும் எச்சரிக்கையாய் எமக்குள் நடைபோடும் இந்த "மண் சஞ்சிகை" என்றும் வாழ்க! எதிர்காலத்தின் முன்னுரையாகஇன்னும் ஆயிரம் ஆண்டுகள் தமிழின் சுடராய் ஒளிர்வாய்! புதிய தலைமுறைகளுக்கு அறிவின் விளக்காய் மிளிர்வாய்! உன் பயணம் தொடர என்றும் எமது இதயங்களில் வாழ்த்துகளை மலர்களாய் வாரி வழங்குகிறோம்! எனக்கு"முத்தமிழ் விருதுக்கு" வழங்கியமைக்கு திரு திருமதி"மண் சஞ்சிகை ஜேர்மனி" சிவராசா அவர்களுக்கு மிக்க மிக்க நன்றி வாழ்க தமிழ்! வளர்க உங்கள் பணி! என்றென்றும் நட்புடன்

Sibo Sivakumaran (Dipl. DFA)

மண் சஞ்சிகை தனது 35 ஆவது நிறைவை மிக சிறப்பாக ஜேர்மனியில் கொண்டாடியது. சஞ்சிகையின் ஆசிரியரும் அதன் தலைவருமாகிய வை சிவராஜா ஐயாவுக்கும் , வாசகர்களுக்கும் எனது பாராட்டுகள். வடகிழக்கு பகுதி எங்கும் 35 வருடமாக பல்வேறு உதவிகளை மண் சஞ்சிகை செய்து வருகிறது. வாழ்வாதார உதவிகள், குடிநீர் வசதிகள் , பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள், அனர்த்தங்களின் போது அவசர உதவிகள் என எண்ணிலடங்கா சேவைகளையாற்றிவரும் மண் சஞ்சிகையுடன் நானும் பதினொரு வருடமாக இணைந்து அவர்களின் உதவியினை பெற்று எம் மக்களுக்கு வழங்கிவருதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்த்துக்கள் அனைவருக்கும்.

மண் சஞ்சிகை இரு மாதம் ஒரு முறை மண்ணில் மலரும் சஞ்சிகை! மண் சஞ்சிகை கலை கலாச்சாரம் கருத்து கவிதை தாங்கி வருவாயே! உள்ளே உயர்வாய் இளையோர் வட்டம், சிறுவர் வினாவிடை, பந்தயப் போட்டிகள் வள்ளுவர் குறள் பல தாங்கி வருவாயே! சுகாதாரக்குறிப்புகள், செய்திக்கண்ணோட்டம் பல வழங்கும் கரங்கள் அன்பளிப்பு ,பொங்கல்ப் பொதி ஆதரவு அற்றோர் உணவு வழங்கல் அத்தனையும் உள்ளடங்கிய ஆதாரத்துடன் பதித்துத் தாங்கி விரிவாயே! ஆண்டுகள் ஐம்பத்திரண்டுக்கு மேலான ஆசிரியரின் எழுத்து பணியால் பலர் பயன் கொள்ள பயனாய் என்றும் தொடர்ந்து விரிந்து வருவாயே!

**இந்திரா மகாலிங்கம் - எழத்தாளர் - யேர்மனி**




# இந்தியா - பாக்கிஸ்தான் போர்ப் பதட்டம்

ஆளணி, அணு ஆயுதம், மற்றும் இராணுவம், ஆயுதப் படைகளின் எண்ணிக்கையைப் பார்க்கலாம். தற்போது (15.5.2025)போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.






# சிறீலங்கா உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2025



இலங்கையில் நடைபெற்று முடிந்த (06.05.2025) உள்ளூராட்சி சபைத் தேர்தல் இறுதி முடிவுகள் வெளியாகியுள்ளது. அதன்படி,

1-தேசிய மக்கள் சக்தி - 4,503,930 வாக்குகள், 3927 உறுப்பினர்கள்
2-ஐக்கிய மக்கள் சக்தி - 2,258,480 வாக்குகள்,1,767 உறுப்பினர்கள்
3-ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 954,517 வாக்குகள்,742 உறுப்பினர்கள்
4-ஐக்கிய தேசியக் கட்சி - 488,406 வாக்குகள், 381 உறுப்பினர்கள்
5-இலங்கை தமிழ் அரசு கட்சி - 307,657 வாக்குகள், 377 உறுப்பினர்கள்
6- பொதுஜன முன்னணி - 387,098 வாக்குகள், 300 உறுப்பினர்கள்
7-சர்வஜன அதிகாரம் - 294,681 வாக்குகள், 226 உறுப்பினர்கள்
8-ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 139,858 வாக்குகள், 116 உறுப்பினர்கள்
9-ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு - 89,177 வாக்குகள், 106 உறுப்பினர்கள்
10-அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - 75,268 வாக்குகள், 60உறுப்பினர்கள்
11-இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - 71,655 வாக்குகள் 54 உறுப்பினர்கள்
12-அகில இலங்கை தமிழ் காங்கரஸ் - 70, 944 வாக்குகள் 101 உறுப்பினர்கள்
13-மக்கள் போராட்ட முன்னணி - 50,492 வாக்குகள் 16 உறுப்பினர்கள்
14-தமிழ் மக்கள் விடுதலை புலிகள் - 39,791 வாக்குகள் 37 உறுப்பினர்கள்
15-தேசிய சுதந்திர முன்னணி - 39,443 வாக்குகள் 26 உறுப்பினர்கள்
16-ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு - 33,921 வாக்குகள் 30 உறுப்பினர்கள்
17-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - 21, 656 வாக்குகள் 35 உறுப்பினர்கள்
18-இலங்கை தொழிலாளர் கட்சி - 19,635 வாக்குகள் 26 உறுப்பினர்கள்
19-சுயேட்சைக் குழு 1 - 19,455 வாக்குகள் 8 உறுப்பினர்கள்
20-தேசிய காங்கிரஸ் - 18,816 வாக்குகள் 22 உறுப்பினர்கள்

-நாடு முழுவதும் வாக்களித்தோர் 50 வீதம்
-வடமாகாணத்தில் 61 வீதம்பேர் வாக்களித்தனர் (யாழ்ப்பாணம் 57வீதம், முல்லைத்தீவு 60 வீதம், மன்னார் 70 வீதம், வவுனியா 60 வீதம், கிளிநொச்சி 60 வீதம்)
-கிழக்கு மாகாணத்தில் 63.6 வீதம்பேர் வாக்களித்தனர். (திருகோணமலை 67வீதம், மட்டக்களப்பு 61 வீதம், அம்பாறை 63 வீதம்)
06.05.2025 சிறீலங்காவில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் பற்றிய சில குறிப்புகளைப் பார்ப்போம்.
-நாடு முழுவதுமான 25 மாவட்டங்களிலும் 341 சபைகள் ஆனால் 339 சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது.
-28 மாநகரசபைகள் 36 நகரசபைகள் 275 பிரதேச சபைகள்
-மொத்த வாக்காளர்கள் 1.17.56.338 (4.50.000 புதிய வாக்காளர்கள்)
-மொத்த வட்டாரங்கள் 4.872
-மொத்த வாக்குச் சாவடிகள் 13.759
-போட்டியிட்ட வேட்பாளர்கள் 75.589 பேர்
-49 அரசியல் கட்சிகளும் 257 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன.
-யாழ் மாவட்டத்திலுள்ள 11 தேர்தல் தொகுதிகளில் 1 மாநகரசபை 3 நகரசபைகள் 13 பிரதேச சபைகளில் தேர்தல் நடைபெற்றுள்ளது.
-243 வட்டாரங்களில் 3.519 பேர் போட்டி 4.98.140 பேர் வாக்களிக்கத் தகுதி 517 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவு.
-உள்ளூராட்சி தேர்தலைக் கண்காணிக்கும் "பவ்ரல்" அமைப்பின் 4.000 பேர் தேர்தலைக் கண்காணித்தனர்.
-தேர்தல் முறைப்பாடுகள் சுமார் 5.000 வரை கிடைக்கப்பெற்றதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.
-தேர்தல் கடமைகளுக்குாக 65.000 பொலிசார் ஈடுபட்டனர்.
-பெரிய அளவில் வன்முறைகள் இல்லாத தேர்தல் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.
-இரட்டைக்குடியுரிமை பெற்ற யேர்மனிய பெண்மணி ஒருவர் மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேச சபையில் சுயேட்சைக்குழுவில் போட்டியிட்டிருக்கிறார்.

நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தலில் அனுரா தரப்பிலான கட்சி மிகக்கூடுதலான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. எதிர்க்கட்சிகள் வசமிருந்த பல சபைகளையும் கைப்பற்றி இருக்கின்றது. அனுரா அலை குறையவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

தமிழர் பிரதேசங்களில் தமிழ்க் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன. மீளெழுச்சி பெற்றிருக்கின்றன. தமிழர் பிரதேசங்களில் அனுராவின் கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டாலும் தாம் முதன் முதன் முதல் தமிழர் பிரதேசங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றதாக எடுத்துக் கூறியுள்ளனர்.

எப்படியாயினும் தமிழர் நிலங்களை தமிழர்தான் ஆளவேண்டும். இது ஓரளவு கைகூடினாலும் நமது தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை என்பது கேள்விக்குறிதான். பிரிந்து பல கட்சிகளாக நின்று போட்டியிடுவதால் எதிர்காலத்தில் பின்னடைவுதான் ஏற்படும் என்பதை உணர்ந்து ஒற்றுமைப்பட்டு தேர்கல்களில் போட்டியிடுவதுதான் புத்திசாலித்தனமாகும்....



ௐ

# SRI SHANMUGA GIRLS' HOME

**ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்**

Owned By Sri Shanmuga Trust

4) Vidyalayam Road,
omalee,
ka,
2222521

Reg.No-NEP|PCC|CH|31
(1998.05.18)

76(84) வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

Date ....................


er Trustee
. Krishnadasan
Commissioner of Assizes

ing Trustee
nadasan
B.LL.M
r At-Law

Managing Trustee
anarajan JP

y & Custodian Trustee
Nadarajah B.Sc

tee Members
f Management)
Hariharan B.A(Hons)
Principal SSHLC)
yurathi
varajah B.A
uvaneswaran B.A
Jharthanapan
Nadarajah B.SC

GIRLS'HOME
nalee

comalee
366400
comalee
00890163465

orthy & Co
ee Branch.


. T. Hariharan B.A(Hons)
sident
ard of Management

Mrs. Sivaraja B.A
Secretary
Board of Management
0776531826

Miss V. Nadarajah B.
Treasurer
Sri Shanmuga Board of Managem
0771360012

# வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்
# වන්නි දෘශ්‍යාබාධිත සංගමය
# Vanni Association For Visually Handicapped

இல 5455,
விவேகானந்தநகர்,
கிளிநொச்சி

Reg.No:NP/KN/KV/DS/VSSO/2016/23
Mail ID:vannivissually@gmail.com
Facebook ID:vannivissually@gmail.com
Contact No:0212283080, 0771763915
A/C No:BOC Kilinochchi:- 76003813

No – 5455,
Vivekananthanagar,
Kilinochchi

**Advisor**

Mr.V.Piremkumar
(Humanitarian volunteer)

Mr.T.Nanthakumar
(Grama niladhari)

Mr. K.Paleswaran

**President**

Mrs s yasotha

+94764377790

**Vice President**

Mr.k mahinthakumar
+94776744651

**Secretary**

Mr.P.Gananakumar

+94773638533

**Vice Secretary**

Mr.K.Srikaran
+94770699043

**Treasurer**

Mr.R.Sivakumar

+940771246734

**Committee Members**

Mrs. K Nanthiny

Mrs. K.Ranjanadevi

Mr.K.Lavakumaran

Mr. Seyon

திகதி 02/04/ 2025

**நிர்வாகத்தினர்,**

**மண்சஞ்சிகை,**

**யேர்மனி.**

**வணக்கம்!**

**தமிழ் மாணவர்களது எதிர்கால நலன் தொடர்பானது**

**பார்வையற்ற சமூகத்தினரும் உலக வாழ்வியல் நீரோட்டத்தில் அனைத்து செயல்முறைகளிலும் இணைநிலைத் தன்மையோடு பண்புடைய மனிதர்களாக தன்மதிப்புடன் வாழ வழிசெய்யும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வன்னி விழிப்புலனற்றோர் சங்கமானது செயற்பட்டு வருகிறது**

மேற்கண்ட குறிக்கோளினை அடையும் வழிவகைகளில் ஒனறாக பார்வையற்றவர்களினதும் அவர்களது குடும்பங்களிலுள்ள சாதாரண பிள்ளைகளினதும் கல்வி மேம்பாடும் அமையப்பெற்றிருக்கிறது அந்த வகையில் எமது சங்க கட்டமைப்பில் வடக்கு, கிழக்கு மாநிலங்களை சேர்ந்த 278 பார்வையற்ற குடும்பங்களிலும், வறுமை உறுதிசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளது குடும்பங்களிலும், வறுமைக்கோட்டுக்குள் வாழும் சாதாரண குடும்பங்களிலும் கல்வி கற்கும் 200 மாணவர்களில், 2025ஆம் ஆண்டு எமது இயலுமைக்கேற்ப கொடையாளிகளது பங்களிப்போடு, 140 பிள்ளைகளின் எதிரகால கனவினை நிறைவேற்றும் பொருட்டு செயற்பட்டுவருகின்றோம் பொது நலனிறகாய் தமது கல்வியையும் பொருண்மியத்தையும் உடலுறுப்புக்களையும் இழந்த பெற்றோரகள தமது பிள்ளைகளது எதிர்காலத்திற்காய் ஏங்கும் சூழலறிந்து, கல்விசசெயறபாட்டினை மேம்படுத்தும் நன்னோக்கில் மாணவர்களுக்கும் கொடையாளிகளுக்கும் இடையே ஒரு உறவுப்பாலமாக நாம் செயற்பட்டு வருகின்றோம்

அந்தவகையில், புலத்திலும் தாயகத்திலும் சமூக பொருண்மிய கட்டமைப்புககளை மேம்படுத்த தாயக பற்றோடு 35ஆண்டுகளாக, செயற்பட்டுவரும் தங்களிடம் ஒருவருககு 5000ரூ படி 10 மாணவர்களுக்கு 50,000ரூ நிதி தேவைப்படுகின்றது இதனை மாதந்தோறுமான தொடர் கல்விசார் உதவியாக அல்லது தங்கள் இயலுமைககேறப மாணவர்களை பொறுப்பேற்று மாணவர் வாழ்வில் ஒளியேற்ற உதவுமாறு கேட்டுக்கொள்வதோடு, **எமது தமிழ் பிள்ளைகளது எதிர்கால நலன் கருதி இத்திட்டத்தை நீடித்து நிலைக்கச்செய்ய வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் மாசிலாமணி கல்வி மேம்பாட்டு நிதியத்தினூடான செயல் முறைக்கு தங்கள் மேலான ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.**

**"நன்றி"**

தலைவர்

செயலாளர்

S.YASOTHA
President
Vanni Association For visually Handicapped
No-5455,Vivehananthanagar
Kilinochchi

P.GNANAKUMAR
Secretary
No-5455,Vivehananthanagar
Vanni Association For visually Handicapped
Kilinochchi

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1-3 திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா
(பி.தி 03.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 28.10.2015)

........................................................................................................................

4-5- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி(பி.தி 02.04.2013)

........................................................................................................................

6- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சுரேஸ்குமார் மனோறஞ்சனி (30.08.2004)

........................................................................................................................

7- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய்
உதவி பெறுபவர் - சிவகுமார் சிரோமி (பி தி 12.11.2010)

........................................................................................................................

8-9 திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
அமுதசுரபி அறக்கட்டளை - வவுனியா
உதவி பெறுவோர்..செல்வி சிற்பவானந்தராசா டேன்சிகா பிதி 22.07.2004
செல்வன் வில்வராசா றதீபன் பிதி 04.10.2003

10- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா

உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 ) ..

.............................................................................................................................

11- Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

.............................................................................................................................

12- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

.............................................................................................................................

13 திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம் - தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - சுரேஸ் சுஜந்தினி (பிதி 23.10.2013)

.............................................................................................................................

14- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நல்லரெட்ணம் துர்க்கா பிதி 25.11.2003

.............................................................................................................................

15- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுபவர் நிசாந்தன் லதுமிக்கா பிதி 23.02.2015

.............................................................................................................................

16- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg - 480-00 யூரோ
ஞானசம்பந்தர் குருகுலம் - மட்டக்களப்பு
உதவி பெறுபவர் சத்தியசீலன் சாயிரிதன் பிதி 07.06.2010

.............................................................................................................................

17- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim - 2.400-00யூரோ
நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம்(1200-00 +1200-00)
உதவி பெறுபவர் இல்லப் பிள்ளைகள் அனைவரும்

-------------------------------------------------------------------------------------------------------------.

**பொறுப்பெடுத்தவர்கள் 14 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)**

**உதவி பெறுவோர் 16 பிள்ளைகள் + மாங்குளம் நல்லாயன் சிறுவர் இல்லம் (தாயகம் - சிறீலங்கா)**

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-03-2025 **(மேலதிகச் செலவு)** -- 370-20

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
03. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு-
06- திரு பொ மகாலிங்கம் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07- திரு திருமதி ஜெய்டா கீதன் - Oberhausenen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08- திரு, திருமதி சண்றா கீர்த்திக் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09- திரு ரகுப்பிரியன் ஏகானந்தராசா - Duisburg +160-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
10- மேரி விஜயகுமார் + மங்கை சிவராசன் - Bietigheim+ 400-00
(நல்லாயன் சிறுவர் இல்லம் கல்வி மேம்பாட்டு மாதாந்த உதவி)-------------

\+ 1.220-00 +1.220-00

---------------

\+ 849-80

**அன்பளிப்புகள்...**

11- திரு கிறிஸ்ரி அமலதாஸ் - London + 250-00
(தாயாரின் நினைவு உதவி)
12- திரு அ வரதராசன் - Düsseldorf+100-00
(மகள் காத்மியின் பிறந்தநாள் அன்பளிப்பு)
13- திரு ச.யோகநாதன் - Duisburg+100-00
(மகளின் பிறந்தநாள் அன்பளிப்பு)
14- திரு செ ஜெயராசா - Duisburg +100-00
(மகளின் பிறந்தநாள் அன்பளிப்பு)

---------------------------

\+ 550-00 + 550-00

-------------

\+1.399-80

முற்பக்கப்படி + 1.399-80

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ | |
|---|---|---|---|
| 1) 24.04.2025 | | | |
| ”ஒளிரும் இல்லம்”மல்லாவி-துணுக்காய் | 1.60.399-09 | - 480-00 | |
| (மகாலிங்கம் வருடாந்த கொடுப்பனவு) | | | |
| (கீதன்-ஜெய்டா வருடாந்த கொடுப்பனவு) | 1.60.399-09 | - 480-00 | |
| 2) நல்லாயன் சிறுவர் இல்லம் - மாங்குளம் | 1.32.930-64 | - 400-00 | |
| (24.04.2025 மேரி + மங்கை கல்வி நிதி உதவி) | | | |
| 3) சிறீ சண்முகா பெண்கள் இல்லம் | | | |
| 24.04.2025 திருகோணமலை | 1.59.891-50 | - 480-00 | |
| (கீர்த்திக் சண்றா வருடாந்த கொடுப்பனவு) | | --------------- | |
| | | - 1.840-00 | -1.840-00 |
| | | | ----------------- |
| | | | - 440-20 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.03.2025 - 31.03.2025 - 25-39
01.04.2025 - 30.04.2025 - 28-99........................................... - 54-38

-----------------------

30.04.2025 மீதி கையிருப்பு **மேலதிகச் செலவு** - 494-58

---------------

------------------------------------------------------------------------------------------------------------------

## மண் சஞ்சிகையின் 35வது ஆண்டுவிழா கணக்கு..

மண்சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவு விழா கடந்தமாதம் (05.04.2025) சிறப்பாக நடைபெற்று முடிவடைந்தது. இந்த விழாவின் வரவு - செலவு அறிக்கையானது விழாவிற்கு நிதி உதவி புரிந்த அத்தனை பேரின் வட்சப்பிற்கு அனுப்பி வைத்திருந்தோம். இவ்விழாவின்...

மொத்தச் செலவுகள் - 4.814-92 யூரோ
மொத்த வரவுகள் - 4.280-00 யூரோ
........................
மேலதிகச் செலவு - 534-92 யூரோ
+ 100-00 யூரோ
...............

மேலதிகச் செலவு **- 434-92** யூரோ

இவ்விழாவிற்கு மேலும் உதவி செய்த மண் சஞ்சிகையின் வாசகர்கள் திருமதி கலா மகேந்திரன் அவர்கள் 75-00யூரோ (Oberhausen) திரு-க பொன்னுத்துரை 25-00 யூரோ (Hannover) அனுப்பி வைத்துள்ளனர்..இருவருக்கும் நன்றிகள்!..

# அமுதசுரபி
## இந்திராணி மேழிக்குமரன் அறக்கட்டளை நிதியம்
## INDRANI MEZHIKUMARAN TRUST FUND
### (AMUTHASURABI)

57/59, 3ம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா, இலங்கை.
57/59, 3rd LANE, VELIKULAM, VAVUNIYA, SRI LANKA.

பதிவு இல: VA/LA/T/RE.816

தொ.பே.இல +94 77 4248267

**தலைவர்**
கலாபூஷணம், தமிழ்மணி, முனைவர் கதிரிப்பிள்ளை அருந்தவராஜா (மேழிக்குமரன்)

**உப தலைவர்**
திரு.இராமசாமி இராஜேஸ்வரன்

**செயலாளர்**
திருமதி.சந்திரகுமாரி இராஜேஸ்வரன்

**உப செயலாளர்**
செல்வி. வனிதா சேனாதிராஜா

**பொருளாளர்**
திரு.ஆறுமுகம் அருளானந்தம்

**செயற்குழு உறுப்பினர்கள்**
திரு.இந்திரன் சஜீந்திரா
திருமதி.சுபாசினி ஜெயசங்கர்
திரு.நடராஜா மதிகரன்
திரு.அந்தோனி பிரான்சிஸ்
திருமதி.லோகேஸ்வரி விஜயகுமார்
திருமதி.பேபிரகுணா ரூபன்

**ஆலோசகர்கள் :**
திரு.தம்பிராஜா சிவகுமாரன் (தமிழருவி)
திரு.நடராஜா பார்த்திபன்
திரு.இராஜகோபால் தேசிகன்
திரு.கொன்ஸன்டைன் சகாயராசா (பாபு)
திரு.லோகநாதன் வாகீசன்

வ. சிவராஜா

ஆசிரியர்

மண் சஞ்சிகை

ஜெர்மனி.

**பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி கோரல் தொடர்பாக...**

அன்புடையீர் வணக்கம்.

அமுதசுரபி அறக்கட்டளையினர் ஆகிய நாங்கள் வவுனியா மாவட்டத்தில் மாணவர்களுக்கான பல வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதில் ஒன்றாக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி தேவைகளுக்கு உதவி வருகின்றோம். அந்த வகையில் 2025 ஆம் ஆண்டு ஆகிய இந்த ஆண்டில் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு உதவி புரியுமாறு எம்மிடம் விண்ணப்பித்து உள்ளனர்.

வவுனியா கற்குளம் நான்கு என்ற இடத்தில் வசிக்கும் டேன்சிகா சிற்பவானந் என்ற மாணவி இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றார்.

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் என்ற இடத்தில் வசிக்கும் மாணவன் வில்வராசா ரதீபன் இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றார்.

இவர்கள் இருவரும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் என்பதோடு பொருளாதார தேவை உடையவர்களும் ஆவர். இவர்களுடைய விபரங்கள் யாவும் இத்துடன் இணைத்துள்ளோம்.

தயவுசெய்து இவர்களுக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

க. அருந்தவராஜா (மேழிக்குமரன்)

தலைவர்.

07/03/2025

"கரங்களைக் கொடுத்து தரங்களை உயர்த்துவோம்"

வங்கிக் கணக்கிலக்கம்: INDRANI MEZHIKUMARAN TRUST FUND
100880331104 தேசிய சேமிப்பு வங்கி (NSB - VAVUNIYA)

**Good Shepherd Child Development center,**

**Mullai Road, Mankulam,**

**Srilanka.**

E-mail – mankulamcdc@gmail.com

Tel. No. – 0212060077/+94 775924582

Date: 07.05.2025

அன்பின் மண் சஞ்சிகை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி

பல உள்ளங்களுக்கு புதுவாழ்வு அளித்திட ஒன்றிணைந்து இயங்கும் உங்களை வாழ்த்தி மடல் மூலம் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். பிள்ளைகளை குறையின்றி நிறைவுடன் அரவணைத்து அவர்களின் குறிக்கோளை நிறைவேற்ற எமக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் அன்புள்ளங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்டுகின்றேம்.

எம் அரவணைப்பை நாடி வரும் பிள்ளைகளின் வாழ்வு வளம் பெற உங்களின் நிதிப் பலம் எமக்கு பலமாகவுள்ளது. அயராது உழைக்கும் எமது பணி சிறுவர்களின் கல்வியில் கரைகாணச் செய்துள்ளது. எனவே தொடர்ந்தும் எமது பணி பலரின் வாழ்வை ஒளியேற்றும் என்ற ஒரே வாஞ்சையுடன் செயல்ப்படுகின்றோம்.

2025.04.24 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் அவர்கள் மண்சஞ்சிகை அமைப்பினூடாக அனுப்பிவைத்த ரூபா 132930.64 (400 யூரோ) கிடைத்தது. இந்நிதியை எம் இல்லத்தில் இருந்து கல்வியை தொடரும் மாணவர்களின் மேலதிக வகுப்புகளுக்காக பயன்படுத்துதினோம். ஏம் பிள்ளைகள் கல்வியறிவில் முன்னோக்கி செல்ல உங்களின் நிதியுதவி பெரும் பலமாக அமைகின்றது. மாணவர்களை பரீட்சைக்கு தயார் படுத்தினோம். இத்தொகைக்கான கணக்கறிக்கைகளை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

தொடர்ச்சியான நிதிப்பலம் தந்து பிள்ளைகள் கல்வியறிவில் முன்னேற்றம் அடைய நாம் எடுக்கும் முயற்சிக்கு பக்க பலமாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி சமூகத்தை முன்னேற்ற நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளும் வெற்றி பெற இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதித்திட ஆசித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்.

Sr. Sumithra
Sister In Charge
Good Shepherd Children's ...
Mankulam.

Sr. Subani

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 FarmNo:-0213204790 Mobile:-0774868085
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 Fax:-0774868085 Viber:-0774868085
திகதி:11...03/2025

திரு வை.சிவராஜா,
மண்,கலை,கல்வி,இலக்கிய,சமூக சஞ்சிகை,
யேர்மனி.

அன்புடையீர்!

**கல்வி உதவித்திட்டம் வழங்கியமைக்கான நன்றி நவிலல்**

மேற்படி விடயம் தொடர்பாக 06.03.2025 அன்று தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைவாக அன்பளிப்பு நிதி ஒருலட்சத்து நாற்பத்து ஐயாயிரத்து எழுநூற்று எண்பத்து ஐந்து ரூபாய் சதம் பதினைந்து (145.785.15/-) ரூபாய் எமது வங்கிக்கணக்கு இலக்கத்திற்கு கிடைத்தது என்பதை தெரியப்படுத்துவதோடு.

மேற்படி எங்களால் உதவி கோரியதற்கு அமைவாக மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை தொடர்வதற்கு மண் சஞ்சிகை வாசகரான திருமதி பிராங்கிளின் சிவதர்சினி அவர்கள் வழங்கியிருந்தனர் அவர்களுக்கு எமது அமைப்பு சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு இந் நிதியினை துரித கதியில் பெற்றுத் தந்த பிரதம ஆசிரியர் வை.சிவராஜா "மண்" சஞ்சிகை யேர்மனி அவர்களுக்கும் எமது நிர்வாகம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ந்தும் தங்களின் இதயபூர்வமான நல்லாதரவினையும் பேரன்பினையும் எமது அமைப்பினர் சார்பாக வேண்டிக் கொள்வதோடு மேற்படி கருணையுள்ளம் கொண்ட தங்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:-**

தங்களால் வழங்கப்பட்ட பணத்தினைப் பெற்றுக்கொண்டமைக்கான எமது அமைப்பின் 4037ம் இலக்க பணவரவுப் பற்றுச்சிட்டை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**"தங்களின் உதவிக்கும் ஆதரவிற்கும் என்றும் எமது நன்றிகள்"**

இவ்வண்ணம்,
தி:சிவகுமார்....
தலைவர்,
ஒளிரும்வாழ்வு அமைப்பு
துணுக்காய்.

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

"ஒளிமயமான வாழ்வு"

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# தாயகச் செய்திகள் சில....

12.05.2025- வெசாக் தினத்தில் நாடுமுழுவதுமாக 385 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.தற்போது அனைத்துச் சிறைகளிலும் சுமார் 30.000 பேர் உள்ளனர்.

10.05.2025- மலையகத்தில் இம்பெற்ற பேருந்து விபத்தில் 21 பேர் பலி 50பேர்வரை படுகாயம்.

08.05.2025- கடந்த 10 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளால் அரசுக்கு 300 கோடிருபா நட்டம் என அரசு அறிவித்தது.

05.05.2025- இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் மட்டும் நாட்டுக்கு 1.74.608 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

01.05.2025- 1.4.25 தொடக்கம் 14.4.25 வரை வீதி விபத்துகளில் 37 பேர் பலி, துப்பக்கிச்சூட்டுச் சம்பவத்தில் 26 பேர் பலி.

31.04.2025- 2023ல் 2.97.656பேரும் 2024ல் 3.14.828 பேரும் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

25.04.2025- நாட்டில் தற்போது 84.54.513 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள் 49.22.000, முச்சக்கரவண்டிகள் 11.85.000 என்பனவாகும்.

24.04.2025- இலங்கையில் தற்போதய சனத்தொகை 2.17.63.170பேராகும் மேல் மாணத்தில் அதிக சனத்தொகை வடமாகாணத்தில் குறைந்த சனத்தொகை காணப்படுகின்றது.

22.04.2025- உணவுப்பழக்கம் மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்களால் தினசரி 175 - 200 பேர்வரை இதய நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.
50 சிறுவர்களில் 1 சிறுவர் ஒட்டிசம் என்னும் நரம்பியல் நோயினால் பாதிப்பு சுகாதாரஅமைச்சின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. காசநோயாளர்கள் கடந்த வருடத்தில் மட்டும் 9.200 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

20.04.2025- நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் 18 வீதம்பேர் மனஅழுத்தம் எனவும் 10 - 19வயது பாடசாலை மாணவர்கள் 35 மில்லியன்பேர். இவர்களில் 29 வீதம்பேர் பல்வேறு காரணங்களால் பாடசாலை செல்வதில்லை எனவும் கல்வி அமைச்சு தெரிவித்தது.

15.04.2025- கடந்த ஆண்டு பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் 2.252 பதிவாகியுள்ளன. இவற்றில் 1.420 வீடுகளில் நடைபெற்றதாக பொலிஸ்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

10.04.2025- தற்போது நாட்டிலுள்ள நீதி மன்றங்களில் 11.31.818 வழக்குகள் நிலுவையில் உள்ளதாக நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# கிரிக்கட்டுக்கு ஒலிம்பிக்கில் அங்கீகாரம்

## 2028 ஒலிம்பிக் - லொஸ்எஞ்சலஸ் - அமெரிக்கா
## 6 நாடுகளின் அணிகளுக்கு மட்டுமே அங்கீகாரம்

2028ம் ஆண்டு சர்வதேச ஒலிப்பிக் போட்டிகள் அமெரிக்காவின் லோஸ்எஞ்சலஸ் நகரில் விமரிசையாக நடைபெறவுள்ளன. இந்தப் போட்டியில் முதன் முறையாக கிரிக்கட் போட்டியையும் சேர்த்துக் கொள்வதற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தீமானித்துள்ளதை வரவேற்போம். சுமார் 128 வருடங்கள் பழமைவாய்ந்த கிரிக்கட் விளையாட்டானது இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டமை உலக கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் மகிழ்ச்சியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1896ம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் ரேட்டிகள் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு 129 வருடங்கள் முடிவடைந்த நிலையில்தான் கிரிக்கட் போட்டியைச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

சர்வதேச ரீதியில் 94 நாடுகள்தான் கிரிக்கட்டை விளையாடி வந்தாலும் 2028ல் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் 6 நாடுகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ள. அதாவது முதன் முதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டபடியால் ஆண்கள் பிரிவில் 6 நாடுகளும் பெண்கள் பிரிவில் 6 நாடுகளும் பங்குகொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த 6 நாடுகளும் எவை என்பது இன்னும் உறுதியாகவில்லை. ஆகவே கிரிக்கட்டையும் ஒலிம்பிக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை உலக கிரிக்கட் ரசிகர்களுக்குப் பெரு மகிழ்வைத் தந்துள்ளது...











மண் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவு விழா 05.04.2025

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 231



பாப்பரசர் பிரான்சிஸ் உலக கத்தோலிக்க மக்களின் பெருந்தலைவர் உலக மக்களால் போற்றப்பட்ட பாப்பரசர்

பிறப்பு 17.12.1936 - மறைவு 21.04.2025

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |